
தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

மே 2000



## ஓயாத அலைகள் 3

## தமிழர் சேனை பெற்றுவரும் மகத்தான வெற்றிகள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அக்கறைப் பூக்கள்



ஆசிரியர் அவர்கட்கு,

உலக வரலாற்றில் தமிழ் மன்னர்களில் தலைசிறந்து விளங்கிய இராஜேந்திரன் மற்றும் கரிகாலன் போன்றவர்களுக்குப் பின் உலகத் தமிழினம் இன்று எமது தேசியத் தலைவரைக் கண்டிருக்கின்றது. எமது மகத்தான தலைவரின் செயற்பாடுகளையும், எமது மண்மீட்புப் போரின் வீரகாவியங்களையும் உலகத் தமிழினத்திற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கும் எரிமலை இதழின் அனைத்து அம்சங்களும் நன்றாக இருக்கின்றது. உளமாரப்பாராட்டுகின்றேன்.

கி.ரவி
ஜெட்டா
சவூதி அரேபியா

✉ ✉ ✉

எரிமலையின் ஆசிரியருக்கு,

எரிமலையின் சித்திரை மாத இதழ் கிடைக்கப்பெற்றேன். தமிழர் புத்தாண்டில் மங்களகரமாக பொன்னிற வண்ணத்தில் தேசியத் தலைவரின் நிழற்படத்தை தாங்கி வந்த முன்னட்டை வெகுசிறப்பாக இருந்தது. உள்ளே ஆனையிறவு வெற்றி என்ற மங்களகரமான செய்தியை எரிமலை எங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்தது.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் ஐந்தாண்டு பூர்த்தி தொடர்பாக வந்த தொகுப்புக் கட்டுரை வெகுசிறப்பாகவும் நேர்த்தியாகவும் அமைந்திருந்தது. விசேட இணைப்பாக தமிழீழத் தேசியத் தலைவரின் திருவுருவை இணைத்தமைக்கு பாராட்டுக்கள். போராட்ட வேகத்திற்கு ஈடாக மெருகேறி வரும் எரிமைலக்கு எனது வாழ்த்துக்கள்.

க.தவக்குமார்
டென்காக்
நெதர்லாந்து

✉ ✉ ✉

தாயகத்தினைப் படம் பிடித்துக் காட்டும் எரிமலைத் தொகுப்பாளர்கட்கு,

நான் தாயகத்திலிருந்து வந்து குறுகிய காலம்தான். ஆயினும் கார்த்திகை தொடக்கம் பங்குனி வரையான இதழ்களைப் படித்து எம்பொன்னாட்டின் துன்பங்களையும், துயரங்களையும், இன்பங்களையும், வெற்றிகளையும் அறிந்து கொள்ளும் அரிய வாய்ப்பினை உங்கள் எரிமலை வாயிலாக அறியப்பெற்றேன்.

எனினும் நான் கூறுவது யாதெனில். இவ்விடம் பல வருடங்களாக இருக்கின்ற சகோதரர்களுக்கும், இவ்விடம் பிறந்து வளருகின்ற சிறுவர்களுக்கும் எமது மாவீரர்களினதும், அவர்களினது சாதனைகளையும், நாட்டினையும் பெரிதாக தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆதலால் இவை சார்ந்த ஆக்கங்கள் பல எரிமலையில் வரவேண்டும் என்பது என் கருத்து.

இரா.கீதன்
பாரிஸ்-10
பிரான்ஸ்

✉ ✉ ✉

ஆசிரியர் குழாமிற்கு,

எரிமலை பிளம்புப்பொறிகளில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்டிருக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். எமது தேசிய வர்ணத்தில் பொறிக்கப்பட்ட எரிமலை புத்தகத்தலைப்பு எனக்கு எப்பவும் எழுச்சியும் உற்சாகமும் அளிப்பதாகவே அமைகின்றது.

பங்குனி 2000 இல் வெளியான இதழில் சம்புவெளி ஓர் இயற்கை வனப்பு என்ற பகுதி என்னை மிகவும் கவர்ந்ததாக அமைகின்றது. பள்ளியும் வீடும் என்று வளர்ந்து விட்டு, தீடீரென வெளிநாடு புறப்பட்ட எனக்கு, எமது தாயகத்தின் எழிலை திரிந்து பார்ப்பதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே இருந்தன. அதனால் இத்தகைய வெளிப்படுத்தல்கள் மூலம் எமது தாயகமாம் தமிழீழத்தின் இயற்கை வனப்புக்களை அறியும் சந்தர்ப்பம் என்னைப் போன்ற பலருக்கு ஒரு விருந்துபசாரமாக அமையும் நன்றி.

இணுவையூர் க.சந்தானம்
சூரிச்
சுவிஸ்

✉ ✉ ✉

ஆசிரியருக்கு,

இந்த மடல் உங்களை வந்தடையும் போது யாழ் கோட்டையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி பறந்து கொண்டிருக்கும் என்று நம்புகின்றேன். இன்று உலகத் தமிழர்களின் பார்வைகள் எல்லாம் தமிழீழத்தை நோக்கியே உள்ளது. தமிழகத்தில் முக்கிய பத்திரிகைகள் எல்லாம் ஆனையிறவு வெற்றியை தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் தமிழ் உணர்வாளர்களும், தமிழீழ விடுதலை ஆதரவாளர்களும் உற்சாகத்திலும் மகிழ்ச்சியிலும் உள்ளோம். நாம் தமிழர்களாக மிகுந்த பெருமையை தமிழீழ விடுதலைப் புலிகளால் பெற்றுள்ளோம்.

அந்த வேங்கைகளுக்கு எனது வாழ்த்துக்கள். மரணித்த மாவீரர்களுக்கு எனது வீர வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த மடல் நான் எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் யாழ். குடாநாட்டில் 40000 சிங்களப்படையினரை விடுதலைப் புலிகள் தாக்கிக் கொண்டிருப்பதாக அறிந்து வெற்றிச் செய்திக்காக தமிழகத்தில் காத்துக் கொண்டிருக்கின்றோம்

ஈ.சி.இராமச்சந்திரன்
ஈரோடு
தமிழ்நாடு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...

எரிமலை
மே 2000

**கட்டுரை**

கைவிட்ட துட்டகைமுனுக்கள் பக்கம் - 8
இராணுவத் தோல்வி மட்டுமல்ல பக்கம் - 8
தமிழர் விடுதலைக்கானபெரும் தடைக்கல் அகன்றது பக்கம் -10
மே தினம் பக்கம் - 12
தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் பக்கம் - 16
சிங்களம் தலைகுனிகின்றது தமிழீழம் தலைநிமிர்கின்றது. பக்கம் - 18
காலமெங்கும் வீழ்த்தப்பட்ட பெண் இன்று பக்கம் - 20
தமிழும் வாழ்வும் பக்கம் - 26
தமிழர் மரபு வழித் தாயகக் கோட்பாடு பக்கம் - 28
தமிழன் வாழ்ந்தான் இல்லையேல்... பக்கம் - 30
இந்தியாவின் நேசசக்தி தமிழீழம் பக்கம் - 32

**மதிப்பீட்டுரை**

ஒளிவீச்சு பக்கம் - 46

**சிறுகதை**

அர்த்தமற்ற காத்திருப்பு பக்கம் - 40

**கவிதை**

உழைப்போர் தினத்தில் உறுதி எடு -அ.அன்ரனி- பக்கம் - 07
இனி வரும் நாட்கள் எமக்கானவை -வியாசன்- பக்கம் - 14
நம்பிக்கை நாற்றுக்கள் -கி.செ.துரை- பக்கம் - 29
விடுதலை வேண்டி -சந்திரவதனா- பக்கம் - 33

**தொகுப்பு**

ஓயாத அலைகள் 3 பக்கம் - 24
மீள்பார்வை ஏப்பிரல் பக்கம் - 48

**04** இலங்கையில் மிகக் கடினமான களமுனையில் புலிகள் பெற்ற மகத்தான வெற்றி



**20** காலமெங்கும் வீழ்த்தப்பட்ட பெண் இன்று-



**34** வியட்நாம் ஒன்றுபட்ட மக்களின் தேசம்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எமது மக்களைப் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும்.



எமக்கு முன்னால், காலவிரிப்பில், ஒரு புதுயுகம் எமக்காகக் காத்திருக்கின்றது. எமக்குப் பின்னால் கடந்த காலத்தில், இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கின்றது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன், எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புது யுகத்தில் காலடி எடுத்து வைக்கின்றது.

இப்புது யுகம் எமக்குச் சொந்தமானது. அநீதியையும் அடக்குமுறையையும் எதிர்த்து நீதிக்கும் சுதந்திரத்திற்குமாகப் போராடிய மக்களுக்கு சொந்தமானது. இப்புது யுகத்தில், எமது மக்களின் நெடுங்காலக் கனவு நிறைவுபெறும். இத்தனை காலமும் எமது மக்களைப் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப்புது யுகத்தில் நிறைவுபெறும்.

இந்த மகத்தான வெற்றி முழு உலகத்தையும் வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கின்றது. இது ஒரு சாதாரண போரியல் சாதனையல்ல. போரியற்கலையின் ஒரு ஒப்பற்ற உலக சாதனையாகவே இவ்வெற்றி கருதப்படும். இவ்வெற்றியின் விஸ்வரூப பரிமாணம் கண்ட எமது எதிரி மட்டுமல்ல, எதிரிக்குப் பக்கபலமாக நின்று, பயிற்சியும், ஆயுதமும் பண உதவியும் வழங்கிவந்த உலக நாடுகளும் மலைத்துப்போய் நிற்கின்றன.

ஓயாத அலைகள் மூன்றாகக் குமுறிய இப் பெருஞ்சமர் ஒரு சில நாட்களில் இமாலய சாதனையைப் படைத்தது.

கடலோரம் கட்டிய மண்வீட்டுக்கு நிகழ்ந்த கதிபோலச் சந்திரிகாவின் போர்த்திட்டத்தை விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் அடித்துச் சென்றுள்ளது. இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவச் சமபலம் எமக்குச் சார்பாகத் திரும்பியிருக்கின்றது. புலிகள் இயக்கத்தைப் பலகீனப்படுத்தி, இராணுவ மேலாதிக்க நிலையைப் பெற்றுவிடவேண்டுமென்ற சந்திரிகாவின் ஐந்தாண்டு கால பகீரத முயற்சியை நாம் ஒரு சில நாட்களில் முறியடித்துள்ளோம்.

மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும், அதன் தமிழர் விரோதப் போக்கும் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு மாற்று வழியையே திறந்து வைத்திருக்கின்றது. அதுதான் போராடிப் பிரிந்து சென்று தனியரசை உருவாக்கும் ஒரே வழி. இந்த வழியில்தான் சிங்கள தேசம் தமிழினத்தை தள்ளிக்கொண்டிருக்கின்றது.

சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சனைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள். எமது மக்களின் சுதந்திர அபிலாசையை சிலுவையாக தோளில் சுமந்து, இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இரத்தம் சிந்திப் போராடி வருகின்றது. இன்று, எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில், ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்துவிட்டோம்.


**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்**

(1999ஆம் ஆண்டு மாவீரர்நாள் செய்தியிலிருந்து )



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு
மே
2000

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*e.mail: erimalai@freesurf.fr*
*Tel: 01 - 43 58 11 42*
*Fax: 01 - 43 58 11 91*

# தலைவாசல்

## கவசமாகவும், பின்பலமாகவும் திகழ்வோம்!

யாழ் குடாநாடு முற்றுமுழுதாக விடுவிப்பதற்கான போர் கூர்மையடைந்துள்ள காலகட்டத்தில் இக் கருத்துரை எழுதப்படுகின்றது. தென்மராட்சிப் பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து, வடமராட்சி கிழக்கு, வலிகாமத்தில் சில பகுதிகள் என புலிகளின் நுட்பமான போர் நகர்வுகள் சிங்கள இராணுவ இயந்திரத்தை ஊடறுத்து ஆட்டம் காணவைத்துவரும் இவ்வேளையில், உலகம் பூராவும் வாழும் தமிழ் மக்களிடையே புதிய உத்வேகமும், நம்பிக்கையும் பெருவீச்சுப் பெற்றுள்ளது.

சிங்கள இராணுவ இயந்திரத்தின் பிரமாண்டத்தைச் சிதைத்து, மனிதாபிமான அடிப்படையில் எங்களைக் காப்பாற்றுங்கள் என உலக நாடுகளிடம் பிச்சை எடுக்க வைத்துள்ள ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கை புதியதொரு அரசியல் சூழ்நிலையையும், சர்வதேச ஈர்ப்பையும் ஏற்படுத்தி வருகின்றது. ஐ.நா செயலாளர் நாயகம் முதற்கொண்டு பல்வேறு சர்வதேசத் தலைவர்கள் இணக்கம் பற்றி பேசுகின்றனர். ஐரோப்பிய பாராளுமன்றம் தனது தீர்மானம் ஒன்றின் மூலம் ஐ.நா பாதுகாப்புச் சபையின் அவசர தலையீட்டைக் கோரியுள்ளது. இந்திய அரங்கிலே கடும் விவாதங்கள் ஏற்பட்டுள்ளன. உலகச் செய்தி ஊடகங்கள் தத்தமது கணணிகளில் உள்ள தகவல்களை வைத்துக்கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு இன்று தமிழீழம் வரலாற்று முக்கியத்துவம் மிக்க காலகட்டத்தில் நிற்பதை இன்றைய போரும், அது ஏற்படுத்தி வரும் மாற்றங்களும் சுட்டி நிற்கின்றன. இம்மாற்றங்களை எமக்கானதாக்கிவிடும் கடமையும் இன்று முன்னெப் போதும் இல்லாத அளவில் ஏற்பட்டுள்ளது.

பல பில்லியன் டொலர்களை செலவிட்டு போர்க்கால ஏற்பாடு என்ற பேரினவாத வெறியுடன் தமது ஆக்கிரமிப்பைத் தொடர முயலும் சிங்களத்தினை தொடர்ந்தும் இராணுவ ரீதியாக எதிர்கொண்டு முறியடிக்க வேண்டிய கட்டாயம் ஒரு புறமும், தத்தமது நலன்களில் மட்டுமே இலக்காகக் கொண்டு தமிழீழ மக்களின் நியாய பூர்வமான அரசியல் விருப்பங்களையும், பாதுகாப்பையும் புறக்கணிக்க முயலும் தரப்புகளுக்கு ஈடுகொடுக்க வேண்டிய தேவைகள் மறுபுறமும் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவற்றினை எம்மால் வென்றெடுக்க முடியும் என்ற உணர்வுபூர்மான நம்பிக்கையே தமிழீழ தேசத்தின் பெரும் பலமாகத் திகழ்கின்றது. தீட்சண்யமான தலைவர், மதிநுட்பம்மிக்க தளபதிகள், வீரம்மிக்க போரளிகள், விடுதலை வேட்கை கொண்டு நிற்கும் மக்கள் சமூகம் என்பன எமக்கான வரலாற்றுப்பலமாக உள்ளன. நாங்கள் நடந்துவந்த கடினமான பாதை இந்தப் பலத்தைப் பிரசவித்துத் தந்துள்ளது.

இன்று, புகலிடத் தமிழர்கள் இச் சூழ்நிலையைக் கிரகித்து பெருவெற்றிகள் ஈட்டிவரும் தமிழீழ விடுதலைக்கு பெரும் கவசங்களாகவும், பின்பலமாகவும் திகழவேண்டும். தமிழீழ நியாயங்களை கொச்சைப்படுத்த முயலும் சிங்களப் பேரினவாதத்தையும், அதனது ஆதரவு சக்திகளையும் அம்பலப்படுத்தி எமது நியாயங்களைப் பாதுகாக்கும் கவசங்களாக நாங்கள் திகழவேண்டும். மறுபுறம், சிங்கள அடக்குமுறையின் கொடூரத்தை உடைத்தெறிந்து எமக்குரிய பாதுகாப்பான - சுதந்திரமான தேசத்தை மீட்டெடுத்திடும் பலத்தை தொடர்ந்து அதிகரிப்பது எமது பணியாகும். சிங்களம் தன் முழு நிதிப்பலத்தையும் செலவிட்டு பாதுகாக்க முயலும் படைப்பலத்தையும், ஆக்கிரமிப்பையும் முறியடித்திட உழைக்க வேண்டிய பணியும் புகலிடத் தமிழர்களிடம் உள்ளது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இலங்கையில் மிகக்கடினமான களமுனையில்

# புலிகள் பெற்ற மகத்தான வெற்றி!



கணவாய்கள், கால்வாய்கள், தொடு கடல்கள், துறைமுகங்கள் என்பன சில நாடுகளில் அல்லது பிரதேசங்களின் நுழைவாயில்களாக இருந்துவருகின்றன. அந்நாட்டையோ அன்றிப் பிரதேசத்தையோ கட்டுப்பாட்டில் கொண்டு வரவிளைபவர் கள் அன்றி குறித்த பிரதேசத்தை தமது பிடி யில் வைத்துக்கொள்ள விரும்புகின்றவர்கள் அவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வது அவசியமாகின்றது. வேறுவித மாகக் கூறுவதானால் அவற்றைக் கட்டுப்பாட் டில் கொண்டுவராதவர்கள் அன்றி கட்டுப் பாட்டில் வைத்திருக்க முடியாதவர்கள் அப் பிரதேசத்தை வெற்றி கொள்ள முடியாதவர் களாகவும், அன்றி அப்பிரதேசத்தைக் கட்டுப் பாட்டில் வைத்துக்கொள்ள முடியாதவர்களா கவுமே இருந்துள்ளனர்.

இந்திய உபகண்டத்தைப் பொறுத்து அதன் தரைவழி நுழைவாயிலாக கைபர் கணவாய் இருந்தது. இக்கணவாயைக் கடந்து வந்து அந்தியர்கள் இந்தியாவைப் பல தடவை வெற்றி கொண்டுள்ளார்கள். இதில் கிரேக்கத்தில் இருந்து வந்த மகா அலெக்சாண்டரில் இருந்து பின்னர் ஆப் கான், மத்திய ஆசியாப் பகுதிகளில் இருந்து படையெடுத்து வந்த பலரும் அடங்குவர். இவர்கள் இயற்கை அரணான இமயத் தொடரில் உள்ள கைபர் கணவாயைத் தாண்டியே வெற்றி பெற்றார்கள்.

இதேசமயம் கடல் வழியாக நுழைந் தவர்கள் குறிப்பாக ஐரோப்பியர்கள் துறை முகங்களைத் தமது நுழைவாயில்களாகக் கொண்டனர். அவற்றை வெற்றிகொண்ட வர்கள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர். இது இந்தியாவிற்கு மட்டு மானதொரு உதாரணமல்ல. உலகிற்கும் பொருத்தமான உதாரணமே.

இதேவேளை பிரிட்டன் மீது ஆதிக்கம் செலுத்த முயன்ற பிரெஞ்சு சக்கரவர்த்தி நெப்போலியனும் சரி ஜேர்மனிய சர்வாதி காரி ஹிட்லரும் சரி ஆங்கிலக் கால் வாயை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிட பெரும் முயற்சி செய்தனர். ஆங் கிலக் கால்வாய் தமது கட்டுப்பாட்டிற்குள் சில மணிநேரம் இருக்குமானால் பிரிட்டன் தமது வசம் ஆவதை எவருமே தடுத்து நிறுத்த முடியாது என அவர்கள் கருதினர். இதற்காகவே பெரும் கடற்படையை உரு வாக்க முனைந்தார்கள். ஆனால் இதில் இவர்கள் இருவராலுமே வெற்றி பெற முடியவில்லை.

இதேசமயம், 1453ஆம் ஆண்டில் கொன்ஸ்ராந்தி நோப்பிள் - அதாவது இன் றைய இஸ்தான்புல் துருக்கியிடம் வீழ்ச்சி கண்டபோது ஆசியாவிற்கும் ஐரோப்பா விற்கும் இடையிலான தரைவழி வர்த்தகம் முடிவுக்கு வந்தது. அதாவது ஐரோப்பா வின் நுழைவாயில் துருக்கியர்களால் மூடப்பட்டது.

இவ்வாறான உதாரணம் இலங்கைக்குக் கூட இல்லாமல் இல்லை. கண்டி இராஜ தானியை வெற்றி கொள்ளவேண்டு மெனில் அதற்கு மலைநாட்டின் நுழைவாயிலான கடுகண்ணாவைக் கணவாயை வெற்றி கொள்ள வேண்டிய கட்டாயம் இருந் தது. போத்துக்கேயர், ஒல்லாந்தரினால் அது முடியாமல்போனது. ஆகையினால்தான் பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் இலங் கையின் கரையோரங்கள் ஐரோப்பியரின் குடியேற்றங்களாக மாறியபோது கண்டி இராச்சியம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை (1815) சுதந்திர இராஜ தானதியாக விளங்கக்கூடியதாக இருந்தது. அதாவது ஆங்கிலேயர்கூட கரையோரப் பிர தேசங்களைக் கைப்பற்றி சுமார் இரண்டு தசாப்தங்களின் பின்னரே கண்டியைக் கைப் பற்றிக்கொள்ள முடிந்தது. அதிலும் கண்டி இராஜதானியில் உருவாகியிருந்த காட்டிக் கொடுப்போரின் துணையுடன்.

இவ்வாறாக உலக வரலாற்றில் நுழை வாயில்களாகப் பல பிரதேசங்களும் துறை முகங்களும் இருந்துள்ளன. இந்த வகையில் யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையில் ஆனையிறவானது அத்தனை முக்கியத் துவம் பெறும் பிரதேசம் எனக் கூறின் மிகை யாகாது. அதாவது யாழ் குடாநாட்டின் நுழை வாயில் என்று ஆனையிறவுப் பிரதேசத் தைக் கூறுவது தவறாகாது.

யாழ் குடாநாட்டைப் பொறுத்து அது குடாநாடு என்ற பௌதீக அமைப்பிற்குள்,


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கப்படுவதாக இருப்பினும்கூட அது மாரி காலத்தில் அதாவது ஆனையிறவுக் கடல் நீரேரியில் நீர் நிறைந்து சுண்டிக்குளம் தொடுவாய் உடைப்பெடுத்ததும் அது ஒரு தீவு என்ற வடிவத்தைப் பெற்றுவிடுகின்றது. ஒரு வகையில் பார்க்கப்போனால் நான்கு, ஐந்து மாதங்கள் தீவாகவும் ஏழு, எட்டு மாதங்கள் குடாநாடு என்ற நிலையிலுமே யாழ் பிரதேசம் உள்ளது எனலாம்.

அதிலும் குடாநாடு என்ற பௌதீக வரையாக இருக்கும் நிலையில்கூட இத் தொடுநிலப்பரப்பு ஊடாக தரைவழிப் பாதைக்கான ஓர் பொருத்தமான தரையமைப்பையோ அன்றி பண்பாட்டு ரீதியிலான அம்சங்களையோ அதாவது மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டுமானங்களையே கொண்டதாக இருக்கவில்லை.

அடுத்ததாக யாழ் குடாநாட்டின் நுழைவாயிலாக் கருதக்கூடிய, ஒருவகையில் போக்குவரத்து இடம்பெற்றதான கேரதீவு - சங்குப்பிட்டி வீதியானது இன்னமும் கடல்வழி போக்குவரத்தின்றி நேரடித் தரைவழிப்பயணம் மேற்கொள்ளத்தக்கதானதொரு நிலையில் இல்லை. அதாவது யாழ் கடல் நீரேரி ஊடான தரைவழிப் பாதை முற்றுப்பெறவில்லை.

இந்நிலையில் யாழ் பிரதேசத்திற்கான நுழைவாயிலாக ஆனையிறவு ஊடான தரைவழிப்பாதையே வருடம் பூராகவும் பயன்பாட்டில் உள்ள பகுதியாக இன்றுள்ளது. இந்த நிலையில் இப்பிரதேசத்தின் முக்கியத்துவமானது மிக உயர்ந்ததாகவும் யாழ் குடாநாட்டின் ஆதிக்கத்தை, கட்டுப்பாட்டை நிர்ணயம் செய்வதாகவும் உள்ளது. வேறுவிதமாகக் கூறுவதானால் ஆனையிறவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் யாழ் பிரதேசத்தில் செல்வாக்குப் பெறுவது தவிர்க்க இயலாததாகிவிடும்.

இது ஒருபுறம் இருக்க ஆனையிறவுப் போரும் தளப்பிரதேசம் அமைக்கப்பட்டிருந்த பிரதேசமானது மிகவும் பாதுகாப்பானதொரு பௌதீகச் சூழலைக் கொண்டதாகும். சிறப்பாகக் கூறுவதானால், வடபகுதியில் ஆனையிறவைப் போன்று பெரும் தளப் பிரதேசம் ஒன்றை அமைப்பதற்கு ஏற்றதொரு பௌதீக அமைப்பு, தரைத்தோற்றம் எங்கும் உண்டா என்றால் இல்லை என்றே கூறலாம்.

பிரதான நிலப்பரப்பில் இருந்து பெரும்பாலும் வேறுபட்ட அலகுபோன்று இருக்கும் யாழ் குடாநாட்டுப் பிரதேசத்தின் வாயிலில் அமைந்துள்ள ஆனையிறவுப் பெரும் தளத்தின் முன்னரங்கப் பகுதிகள் பிரதான நிலப்பரப்பில் உறுதியான நிலையில் அமைக்கப்பட்டிருந்தது. மிக உறுதியாக அரண் செய்யப்பட்டதாக பிரதான வீதியை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்த இப்பகுதியானது ஆனையிறவுத் தளத்திற்கு "பயர்" தடுப்பு போன்று உருவாகியிருந்தது.

இதேவேளை ஆனையிறவுத் தளமானது வங்காளவிரிகுடா, யாழ் கடல் நீரேரி, ஆனையிறவுக் கடல் நீரேரி என்பனவற்றுடன் தொடர்புபட்டதாக 77 சதுரக் கிலோமீற்றர் விஸ்தீரணத்தைக் கொண்டிருந்தது. இதில் இத்தளத்தின் கிழக்குப் பகுதி வங்காள விரிகுடாவுடனும், மேற்குப்பகுதியின் மையப்பகுதி யாழ் கடல்நீரேரி எனக் கடற் பரப்புடன் தொடர்புபட்டிருந்தமையால் பாதுகாப்பை உறுதிசெய்தல் இலகுவாகும். ஒருபுறம் கடற்படையின் கண்காணிப்பு என்பதும் மறுபுறம் கரையில் இருந்து தடங்கலற்ற கண்காணிப்பு என்ற நிலையில் அது வாய்ப்பானதாக இருந்தது.

இதேசமயம் இத் தளப் பிரதேசத்தின் பெரும் பகுதி குறிப்பாக கிழக்குப் பாகம் வெட்டையான பரந்த நிலப்பரப்பாக இருந்தமையானது கண்காணிப்பிற்கு ஏற்றதாயினும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகளைத் தொலைவிலேயே தடுத்து நிறுத்தக்கூடியதாக வாய்ப்புப் பெற்றிருந்தது.

அத்தோடு ஆனையிறவுப் பெரும் தளம் வடகிழக்கு தொண்டமானாறு கடல் நீரேரியும் தொட்டிருந்தமையானதுகூட இராணுவத்திற்கு அனுகூலமான தொன்றாகவே இருந்தது. அதாவது யாழ் குடாநாட்டின் தரைத்தோற்றம் பௌதீக அலகுகளாகப் பிரிக்கப்படுவதற்கும், ஒரு அலகில் இருந்து மற்றொரு அலகிற்கான நகர்விற்கு கடல் நீரேரிகளைத் தாண்டவேண்டிய நிர்ப்பந்தத்தையும் உருவாக்கியிருந்தது. இந்நிலையானது படை நகர்தல், விநியோகம் என்பனவற்றிற்கு இடையூறு செய்பவையாகவே இருந்தன.

இந்த வகையில் பௌதீக ரீதியான பாதுகாப்புக் கொண்ட ஆனையிறவுப் பிரதேசத்தில் சிறீலங்கா இராணுவம் அதன் முக்கியத்துவம் கருதி மிக உயர்வலுக் கொண்ட தனது இரண்டு டிவிசன் படையணிகளை நிறுத்தியிருந்தது.

சிறீலங்கா இராணுவத்தைப் பொறுத்து அது பல படையணிகளை - டிவிசன்கள் கொண்டதாக இருப்பினும் அதன் படையணிகளில் முக்கியமானவையாக 53ஆம், 54ஆம், 55ஆம், 56ஆம் படையணிகளே இருந்து வருகின்றன. மறுவளமாகக் கூறுவதானால் இப்படையணிகளே சிறீலங்கா இராணுவத்தை நிலைநிறுத்துபவையாக, அதன் முதுகெலும்பாக இருந்துள்ளன.

இதில் ஆனையிறவின் முக்கியத்துவம் கருதி 54ஆம், 53ஆம் படையணிகள் அங்கு நிலைகொள்ளவைக்கப்பட்டன. இதில் 54ஆவது படையணியே ஏற்கனவே ஆனையிறவுப் பெரும் படைத்தளத்தில் நிலைகொண்டிருந்த படையணியாகும். 53ஆவது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



படையணி ஓயாத அலைகள் - 03 நடவடிக் கைகளைத் தொடர்ந்து அனுப்பிவைக் கப்பட்டதாகும்.

இப்படையணி இரண்டுமே சிறீலங்காப் படையணிகளின் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இதில் 54ஆவது படை யணி சிறீலங்காப் படையணிகளின் ஆட்லறி உட்பட்ட கனரக பீரங்கிப் படைப்பிரிவு, டாங்கி உள்ளடங்கிய கவசவாகனப் படைப் பிரிவு என்பனவற்றை உள்ளடக்கியது. இப் படைப்பிரிவு 541இல் இருந்து 546 வரை யிலான ஆறு பிரிகேட்டுக்களைக் கொண்ட தாகும். இவற்றில் 542, 545, 546 பிரிக்கேட்டுக் களில் ஆட்லறி மற்றும் கவசப் பீரங்கிப் படைப்பிரிவுகள் சேர்க்கப்பட்டிருந்தன.

அதிலும் இவ் ஆட்லறிப் பிரிவில் சீனா விடம் கொள்வனவு செய்யப்பட்ட 152 எம். எம் பீரங்கிகள், 130 எம். எம், 122 எம். எம். ஆட்ல றிகள் மற்றும் பாக்கிஸ்தான் தயாரிப்பு 120 எம். எம். மோட்டர்கள் என்பன இடம் பெற்றி ருந்தன. இதே சமயம் கவசவாகனப் படைய ணியில் சீனத் தயாரிப்பு டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் முக்கிய இடம் கொண்ட வையாக இருந்தன.

இந்த வகையில் 54 ஆவது டிவிசன் துருப்புக்கள் தாக்குதலுக்கும், தற்காப்பிற் கும் என ஏற்றவகையிலான கனரக ஆயுத தளபாடங்களைக் கொண்டவையாக இருந் தன. இதே சமயம் ஓயாத அலைகள் - 03 படையணிகள் வடபோர்முனையைத் திறந்த பின்னர் ஆனையிறவுப் பெரும் தளப்பிர தேசத்திற்கு அனுப்பப்பட்ட 53 ஆவது டிவி சன் படையணிகள் நேரடிச் சமர்களுக்கென விசேடமாகப் பயிற்றப்பட்டவையாகும்.

இப்படையணி சிறீலங்கா இராணுவத்தின் சிறப்புப் படையணி எனப் பெயர் பெற்றது. சிறீலங்கா இராணுவத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் வெளிநாட்டு நிபுணர் களால் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். இப் படையணி 531, 532, 533 ஆகிய மூன்று பிரிகேட்டுக்களையும், அத்தோடு மேலும் விசேடபடைப் பிரிவு (எஸ். எவ்) சிறப்புப் பிரிவு (எஸ். பி பிரிவு) என இரண்டு சிறப்புப் பிரிவுகளையும் கொண்டிருந்தது.

இதில் 531 ஆவது பிரிகேட் ஏயார் மொமைல் போஸ் எனவும், 532 ஆவது படைப்பிரிவு 'கொமாண்டோ' பிரிவு என வும், 533 ஆவது பிரிகேட் மூன்று சிறப்பு பட்டாலியன்களைக் கொண்ட சிறப்பு அணி யாகவும் இருந்தது. இதேசமயம், இவ் டிவிச னில் இருந்த விசேடபடை (எஸ். எப் பிரிக் கேட்) விசேட பிரிவு (எஸ். பி யுனிட்) என்பன சிறப்புத்தேர்ச்சி பெற்ற பட்டாலியன்களை யும், கொமாண்டோக்களையும் கொண்ட வையாக இருந்தன.

இவ் 53 ஆவது விசேட படைப்பிரிவு களைக் கொண்ட டிவிசனானது வெற்றி லைக்கேணி - கட்டைக்காடு, பரந்தன், உமை யாள்புரம் என்பன ஓயாத அலைகள் - 03 படையணிகளிடம் வீழ்ச்சி கண்டபின்னர் ஆனையிறவுப்படைத்தளத்தில் நிறுத்தப்பட்டன. அதிலும் குறிப்பாக ஓயாத அலைகள் 03 படையணிகளின் தாக்குதல் எதிர்பார்க்கப்பட்ட இயக்கச்சிப்பகுதியில் இருந்து தாளையடிப் பிரதேசம் வரையான முன்னணி நிலைகளிலேயே அவை நிறுத்தப் பட்டன.

இவ்வாறாக ஆனையிறவுப் பெரும்தள மானது உச்சப்பாதுகாப்புக் கொண்டதாக கொழும்பு இராணுவ ஆய்வாளர்களின் மதிப்பீட்டின்படி உயர் பாதுகாப்பு தொண்ட தாகவும் மிகக்கடினமான போர்க்களமாக மாற்றப்பட்டிருந்தது. இதனைச் சிறீலங்கா இராணுவத்தரப்பும் ஒப்புக்கொண்டே இருந் தது. இத்தோடு, விடுதலைப் புலிகளை எதிர்கொள்ள இராணுவம் தயாராக இருப் பதாகவும் அது அறிவிப்புச் செய்தும் இருந் தது. இந்த நிலையில் ஆனையிறவை புலி கள் வெற்றி கொண்டமையானது இலங்கை யின் மிகக் கடினமானதும், முக்கியத்துவம் மிக்கதுமான போர் முனையில் புலிகள் வெற்றி பெற்றுள்ளனர் என்பதையே வெளிக் காட்டி நிற்கிறது.

இதன் விளைவானது யாழ் குடாநாட்டிற் கான நுழைவாயிலை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உதவியுள் ளது. இது அடுத்த கட்டமாக யாழ் குடா நாட்டின் கட்டுப்பாட்டை விடுதலைப் புலி கள் தமக்குள் கொண்டுவருவதற்கு அடித் தளமாக அமையும் வாய்ப்பைக் கொண்ட தாகும். அதாவது யாழ் குடாநாட்டில் புலி களின் கை மேலோங்குவது தவிர்க்க முடி யாததாகவே இருக்கும்.

ஏனெனில் அவர்கள் மிகக்கடுமையான களமுனை ஒன்றை வெற்றிகொண்டதன் மூலம் யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையைத் திறந்துள்ளனர். 'ஜயசிக்குறு' நடவடிக்கை மூலம் யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை ஒன்றை திறக்கும் அர சின் முயற்சியை முற்றாகவே முறியடித்து ஓயாத அலைகள் - 03 படையணிகள் அதன் தொடர் நடவடிக்கையாக ஆனையிறவுத் தளத்தைக் கைப்பற்றி குடாநாட்டிற்குள் தமக்கு ஓர் நேர்வழிப்பாதை திறந்துள்ள னர். இது புலிகளின் அடுத்தகட்ட நகர்வை உற்றுநோக்கும் அளவிற்கு இராணுவ ஆய் வாளர்களுக்குப் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

-ஜெயராஜ்-





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உழைப்போர் தினத்தில் உறுதி எடு

பொன்னும் மணியும் மின்னலிட
செந்நெல் வயல் மணி சொத்தாடிட
எம்மனை நெல்மணி
கொண்டுமே நிறைத்துமே
எத்துன்பமும் இன்றியே வாழ்ந்தவர் நாம்.
கட்டி ஆண்டவர்
கங்கை கொண்டவர்
அட்டதிக்கும் படி அளந்தவர்
எட்டி வந்த பகை போடும்
பொருள் தடையால் முடங்கவா?
படை கொண்டு மோதிவென்ற
பண்டைத் தமிழ் ஈழநாட்டில்
விடை கொண்டு பகை ஓடாமல்
வேரூன்றி சிங்களம் தங்கிடுமா.
கல்லார்க்கும் கல்வி தந்த நாட்டில்
கல் நெஞ்சினர் கண்டதிற்கும் தடை
எம் தேசத்தில் ஏர் பிடித்து
நிலம் பிளந்து விதை பரப்பி
தானியம் நாம் பெற்ற வயல்
வந்த கயவர் கால் தடம் பதிந்து
வலுவிழந்து செம்மணிபோலாச்சு.
உழைப்பால் உயர்ந்த தமிழா!
உலகத்தில் இன்று
உழைப்போர் தினமாம்
உனக்கும் தானே உறுதிகொள்
உன்னத தலைவன் தலைமையில்
தடைகள் தாண்டி முன்னேறி
தமிழர் பொருளாதாரம் முன்னேற்றி
தன்னிறைவான தாயகம் அமைப்போம்
தயக்கம் அகற்றி தலை நிமிர்த்தி
உழைக்கும் கரமுயர்த்தி உறுதி எடு
உன்னால் முடியும் உழைக்கும் நண்பா.



அ. அன்ரனி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கைவிட்ட துட்ட கைமுனுக்கள்

பௌத்த பேரினவாத சக்திகளில் ஒரு தரப்பினர் தமது 'துட்டகைமுனுக்கள்' மீதான நம்பிக்கையை இழந்துவிட்டனர்போல உள்ளது. அவ்வாறு இல்லாதுவிடில் பௌத்தபிக்குகளில் ஒரு தரப்பினர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்திற்குச் சென்று புலிகளுக்கு எதிரான போருக்கு இந்தியா உதவவேண்டும் எனக் கோரியிருக்கமாட்டார்கள்.

இந்தியா - இலங்கை உறவில் என்றும் இடைஞ்சல் விளைவிப்பவர்களாயும், இந்திய வல்லாதிக்கம் குறித்து அடிக்கடி பேசியும், எச்சரித்தும் வந்தவர்களுமான பௌத்த பிக்குகள் இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெறமுற்பட்டு நிற்பதானது அவர்கள் சிறீலங்கா இராணுவத்தின் மீது நம்பிக்கை இழந்துவிட்டதன் விளைவே ஆகும். அதாவது தமது தேசிய இராணுவம் எனவும், பௌத்தத்தின் காவலர்கள் எனவும் பிக்குமார்களால் போற்றப்பட்ட சிறீலங்கா இராணுவத்தின் மீது தற்பொழுது பௌத்த பிக்குகளுக்கு அவநம்பிக்கை எற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர சிறீலங்கா அரசு தயாராக உள்ளது என முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்திருந்தார். அதேபோன்று அவர் பல 'பேய்'களுடனும் தொடர்பு கொண்டு இருந்தார். ஆனால் அப் 'பேய்'களின் உதவிகளினாலும் வெற்றி பெறமுடியாத நிலையில், இந்திய அரசுடன் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின்படி இலங்கைக்கு இந்திய இராணுவம் அவரால் வரவழைக்கப்பட்டது.

ஆனால் இந்திய இராணுவம் இலங்கைக்கு வரவழைக்கப்பட்ட மைக்கு பௌத்த பேரினவாதத்திடம் இருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியது. இந்தியாவை என்றுமே விரோதிகளாக நோக்கிவந்த பௌத்த பேரினவாத சக்திகள் இதனை காட்டமாக எதிர்த்தன. இந்திய இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என அவை உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தன.

பௌத்த பேரினவாதத்தைப் பொறுத்து அது வெளிநாட்டு உதவி, ஒத்தாசை என்பதைப் பொறுத்து அது

## இராணுவ... மட்டு...

ஆனையிறவுப் பெரும் படைத்தளத்தின் மீதான விடுதலைப் புலிகளின் மகத்தான வெற்றியானது தனியாக ஒரு மகத்தான இராணுவ வெற்றி மட்டுமல்ல சந்திரிகா குமாரதுங்கா அரசு கைக்கொள்ளும் இனப்பிரச்சனை விவகாரம் தொடர்பான அணுகுமுறை மீதான ஒரு பெரும் வெற்றியும்கூட வேறுவிதமாகக் கூறுவதானால் சிங்கள அரசு மீதான பெரும் இராணுவ அரசியல் வெற்றியும்கூட.

இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வென்பது சாத்தியப்பாடானதல்ல என்பது ஏற்கனவே உலக அனுபவம் கொடுத்த பாடமாகும். ஆனால் சிறீலங்கா ஆட்சியாளர்கள் எவருமே, என்றுமே இதனை ஏற்றுக் கொண்டதாக இருக்கவில்லை. இனப்பிரச்சனைக்கான தீர்வாக இராணுவத்தீர்வை அவர்கள் முடிந்த முடிவாகக் கொண்டிருந்தனர். இதேவேளை அரசியல்தீர்வு குறித்து அவர்கள் இடையிடையே பேசினாலும் கூட அது இராணுவரீதியிலான நோக்கத்தை எட்டுவதற்கானதொரு மார்க்கமாகவே கைக்கொள்ளப்பட்டது.

இக்கொள்கையே அண்மைக்காலத்திலும் ஆட்சியளார்களின் நிலைப்பாடாகவும் இருந்தது. நோர்வே போன்ற அரசுகள் சமாதான முயற்சிகளில் அரசியல் தீர்வு முயற்சிகளில் ஈடுபட முற்பட்ட போதும். ஆட்சியாளர்கள் தமது இராணுவரீதியிலான நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வரவில்லை பேச்சுவார்த்தை என்பதை இராணுவத் தோல்விகளைச் சீர் செய்வதற்கான கால அவகாசமாகவே பயன்படுத்தி வந்தனர்.

ஆனால் ஆனையிறவுப் பெருந்தோல்வியானது ஆட்சியாளர்களுக்கு இராணுவத்தீர்வின் எல்லைகளை அவர்களுக்கு நன்கே உணர்த்தியிருக்க முடியும். வேறுவிதமாக கூறுவதானால் இராணுவத்தீர்வு என்பது சாத்தியமாக மாட்டாது. அவ் அணுகுமுறையில் நிச்சயம் சிறீலங்கா அரசு தோல்வியடைவது நிச்சயம் என்பதையும் அதற்கு உணர்த்தியிருக்கும்.

இந்த வகையில் சந்திரிகா குமாரதுங்கா இனப்பிரச்சனை குறித்த அணுகுமுறை முற்று முழுதாக தோல்வியைத் தழுவியுள்ளது என்றே கூறமுடியும். ஆகையினால்தான் நாட்டின் முக்கிய பிரச்சனை தொடர்பாக அரசின் கொள்கை தோல்வி கண்டுவிட்டது. தோற்கடிக்கப்பட்டுள்ளது என்ற ரீதியில் சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் பதவி விலகியிருக்க வேண்டும். இதுவே உயர்ந்த ஜனநாயகப் பண்பாகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தெளிவானதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அதாவது தமிழருக்கு எதிரான போரில் உலகம் சிறீலங்காவிற்கு உதவுதல் வேண்டும், ஆனால் எவருமே இவ்விடயத்தில் தலையிடவோ அன்றி சிறீலங்காவின் ஒடுக்குமுறை பற்றி பிரஸ்தாபிக்கவோ அன்றி பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஒன்று காண முற்படுதலோ கூடாது என்பதே அதுவாகும்.

ஆனால் இது சாத்தியப்பாடான தொன்றல்ல என்பது சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கு நன்கே தெரிந்திருந்தது. இதன் விளைவாகவே சமாதான உடன்பாட்டின் கீழ் இந்திய இராணுவத்தை வரவழைத்துக் கொண்டனர். தற்பொழுது நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்கப் போவதாக அறிவிப்பும் செய்திருந்தனர்.

இருப்பினும் ஆட்சியாளர்கள்கூட இதனை ஓர் தற்காலிக ஏற்பாடாகவே செய்ய முனைந்தனர். அதாவது தமக்கு ஏற்பட்டுள்ள பாதகமான அரசியல் - இராணுவச் சூழ்நிலையில் இருந்து விடுபடுவதற்கான ஓர் ஏற்பாடாகவே செய்துகொண்டனர். இதனை தாம் அழைத்த இந்திய இராணுவத்தை ஒரு கட்டத்தில் சிறீலங்கா அரசே விலகக்கோரியதில் இருந்தே புரிந்துகொள்ள முடியும்.

இந்த வகையிலேயே தற்பொழுதும் பௌத்த பிக்குகளின் ஒரு தரப்பினர் சிறீலங்கா - புலிகளுக்கு எதிரான போரில் உதவவேண்டும் என இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பௌத்த பிக்குகளின் இந்நிலைப்பாடானது அவர்கள் தமது இராணுவத்தின் தோல்வியை ஒப்புக்கொள்ளத் தொடங்கியதன் வெளிப்பாடே ஆகும்.

ஆனால் இந்திய அரசோ இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் ஏற்கனவே கையைச் சுட்டுக்கொண்டதினால் இதில் இருந்து சற்று விலகியிருக்கவே விரும்புகின்றது. இது ஒருவகையில் விரும்பத்தக்கதொரு நிலைப்பாடே ஆகும். ஏனெனில் ஒருபுறம் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்திய நலனுக்கு விரோதமான தொன்றல்ல. அதற்கும் மேலாக சிறீலங்கா ஆட்சியாளர்களோ அன்றி பௌத்த பிக்குகளோ இந்தியாவுடனான நெருக்கத்தை சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக விரும்புகின்றனரே ஒழிய உள்ளார்ந்த ரீதியிலான நெருக்கத்தின் அடிப்படையில் அல்ல.

சிறீலங்கா ஆட்சியாளர்களைப் பொறுத்து அவர்களுக்கு இந்தியாவைவிட என்றுமே பாக்கிஸ்தானும் மேற்குலகத்தவர் களுமே அந்தரங்கமானவர்களாக இருந்துள்ளனர். அதேபோன்று பௌத்தபிக்குகளுக்கு தென்கிழக்கு ஆசியாவும், சீனாவுமே சினேகமானவை. பௌத்த நாடுகள் விருப்பத்திற்குரியவையாக இருந்துள்ளன. இந்த நிலையில் இந்தியாவைத் தற்பொழுது வலிந்து இழுக்க முற்படுவது சந்தர்ப்பவாத நிலைப்பாடாகும். இதனைப் புரிந்துகொள்வது இந்தியாவிற்கும் கடினமானதொன்றாக இருக்கமாட்டாது.

## ... தோல்வி ...ல்ல!

இதுதான் ஒருபுறம் இருக்கட்டும். சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் சிங்கள மக்களுக்கு தேடிக்கொடுத்த அழிவு இழப்பானது பெரும் அவமானகரமானதும், துயர் நிறைந்ததும் ஆகும். அதாவது பெரும் தொகை இராணுவத்தினரது இழப்பிற்கும் துயரத்திற்கும் சந்திரிகா குமாரதுங்காவின் தீர்மானங்களே காரணமாக இருந்துள்ளன.

இந்நிலையில் நாட்டின் முக்கிய பிரச்சனைக்கான கொள்கை தோல்வியில் முடிந்துள்ளது என்பதற்கான பொறுப்பை ஏற்று பதவி விலகாவிடினும் தமக்கு வாக்களித்து தம்மை ஆட்சிபீடத்தில் ஏற்றிய மக்களிற்கு ஏற்பட்ட துன்பத்திற்கும் துயரத்திற்குமாவது பொறுப்பேற்று ஜனாதிபதி சந்திரிகா பதவியைத் துறந்திருக்க வேண்டும்.

ஆனால் ஆட்சியாளர்களோ தோல்விகளுக்கு தாம் பொறுப்பேற்காது ஏனையவர்களின் தலையில் அவற்றைக் கட்டிவிடப்பார்க்கின்றனர். ஆனையிறவில் பெரும் தோல்வியை இராணுவம் சந்தித்த வேளையில் முப்படைகளின் தளபதியும், பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகா நாட்டில் இல்லை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை எங்கிருக்கின்றார் என்றே தெரியவில்லை.

இருப்பினும் இராணுவத் தளபதிகள், கட்டளை அதிகாரிகள் மாற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். இது இராணுவ அதிகாரிகள் யாரையாவது தோல்விக்குப் பொறுப்பேற்க வைப்பதற்கோ அன்றி யாரையாவது இதிலிருந்து விடுவிப்பதற்கான முயற்சியாக மேற்கொள்ளப்பட்டதோ தெரியவில்லை ஆனால் மாற்றங்கள் என்பன புதிய கட்டமைப்பு உருவாக்கம் வரை சென்றது. ஆகையினால் ஆட்சியாளர்கள் இன்னமும் தமது தோல்விகளை ஒப்புக்கொள்ளவோ அன்றிப் பரிசீலனை செய்யத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இது தமிழ்மக்களைப் பொறுத்து இனி ஒரு விவகாரம் அல்ல. ஏனெனில் தமிழ்மக்கள் தமது இலக்கை நோக்கி முன்னேறுவதும், வென்றெடுப்பதும் உறுதி செய்யப்பட்டாகிவிட்டது.

இதனால் இன்றைய ஆட்சியாளர்களை அனுமதிப்பதும், அவர்கள் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக்கொள்ள அனுமதிப்பதும், சிங்கள மக்களை பொறுத்த விடயமே ஒழிய தமிழ் மக்களைப் பொறுத்த விடயமல்ல. இதனைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்ளாதுவிடில் இவ் ஆட்சியாளர்கள் சிங்கள மக்களுக்குத் தேடிக்கொடுப்பது பெரும் அழிவும், துயரமாகவுமே நிச்சயமாக இருக்க முடியும்.


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழர் விடுதலைக்கான பெரும் தடைக்கல் அகன்றது

1995 இல் யாழ்ப்பாணத்தில் சிங்கக் கொடியேற்றம் நடைபெற்று மூன்றாவது நாள் ஜனாதிபதி செயலகத்தில்வைத்து "டைம்" சஞ்சிகை நிருபர் அனித்தா பிரதாப்பிற்கு சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பேட்டியொன்றை வழங்கினார்.

அதன்போது யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான உங்கள் தேவை எதுவாக இருந்தது? என டைம் நிருபர் கேள்வி எழுப்பினார். அப்போது சந்திரிகா கூறினார் அது புலிகளின் தலைமையகமாக இருந்தது. ஆனால் அதற்கும் மேலாக தமிழர்களின் இதய பூமியாக விளங்கியது என்று.



அதாவது யாழ் குடாநாட்டு மக்களை புலிகளிடமிருந்து விடுவிப்பது என்று கூறி அவர் புரிந்த சமாதானத்திற்கான யுத்தத்தின் முக்கிய அங்கமாக தமிழர்களின் இதய பூமியைக் கைப்பற்றுவது இருந்தது. அதாவது புலிகளின் கோட்டையாக யாழ்ப்பாணம் இருந்தது என்பதற்கும் மேலாக தமிழ் மக்களின் இதயபூமியாக யாழ்ப்பாணம் இருந்ததே அவர் அதனை ஆக்கிரமித்ததற்கான முக்கிய நோக்கமாக இருந்தது என்பதை அவர் தனது பதிலின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார்.

இதனையேதான் சிறீலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிறிலால் வீரசூரிய யாழ் குடாநாடு இல்லாமல் தமிழீழமில்லை. யாழ் குடாநாடு எம்வசம் இருக்கும் வரை தமிழீழம் என்பது அர்த்தமற்றது என கூறியிருந்தார்.

இந்த யாழ் குடாநாட்டின் நுழைவாயிலாகவும் யாழ் குடாநாட்டை மீட்க மிகப் பெரும் தடையாகவும் விளங்கிய ஆனையிறவுப் படைத்தளத்தை விடுதலைப் புலிகள் வெற்றி கொண்டமை சிங்களத் தலைமைக்கும், சிங்களப் படைத்தலைமைக்கும், சிங்கள இனவாதிகளுக்கும் பெரும் மனக் கிலேசத்தை ஏற்படுத்திவிட்டமைக்கு இதுவே காரணமாகும். இதனை மறைக்க அவர்கள் எவ்வாறுதான் முயன்றாலும் யாழ் குடாநாட்டில் ஆக்கிரமிப்பை நீடிக்க அவர்கள் விழிபிதுங்க மேற்கொள்ளும் ஆலோசனைகள் அதனை வெளிக்காட்டத் தவறவில்லை.

இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்ட தினத்திலிருந்து தமிழர்களின் உரிமைகளை மறுப்பதில் சிங்கள ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வந்த தொடர் நடவடிக்கைகள் ஏராளம். அவற்றை இங்கு விபரிக்கத்தேவையில்லை. இதேவேளை தமிழர் என்ற ஓரினத்தையே இலங்கையிலிருந்து இவ்வாறு ஒழித்துவிட அவர்கள் எடுத்த மிக முக்கியமான முயற்சி நில ஆக்கிரமிப்பாகும்.

இதற்காக தமிழர் நிலப்பரப்பை துண்டு துண்டாகப்பிரித்து நில ஆக்கிரமிப்பை மேற்கொள்வது என்பது சிங்கள ஆட்சியாளர்கள் புத்திஜீவிகள், இனவாதிகளின் கூட்டுத் தந்திரோபாயமும் ஆகும்.

இந்த ரீதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களை பௌதீக ரீதியாகப் பிரித்து விட மணலாற்றுப் பிரதேசத்தை இனவாதிகள் தேர்ந்தெடுத்தது போலவே வடமாகாணத்தைப் பிரிக்க அவர்கள் தெரிந்தெடுத்த இடம் ஆனையிறவாகும்.

ஆனையிறவை மையமாகக் கொண்டு வடமாகாணம் முழுவதையும் வலயங்களாகப் பிரித்து தமிழர் விடுதலைப் போராட்டத்தை முதலிலும் பின்னர் தமிழர்களையும் அழித்துவிட சிங்களப் புத்திஜீவிகள் பலர் இணைந்து திட்டம் வகுத்து சிங்கள ஆட்சியாளர்களுக்கு வழங்கியிருந்தனர்.

தமிழர் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வளர்ச்சி பெற்றுவந்த காலத்தில் சிறீலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி கண்டி வீதியை மையமாககொண்டு அதன் இருமருங்கிலும் வவுனியாவிலிருந்து ஆனையிறவுவரை 2 இலட்சம் சிங்கள மக்களைக் குடியேற்றும் திட்டமொன்றை அறிவித்தார். இதன் மூலம் யாழ் குடாநாட்டுக்கு ஆனையிறவு ஊடாக இராணுவத்தினர் பாதுகாப்பாக பயணம் செய்யக் கூடிய பாதையொன்றை அமைப்பது அவரின் திட்டமாக இருந்தது.

அதாவது வவுனியாவிலிருந்து ஆனையிறவுவரை இராணுவத்தால் பாதுகாக்கப்பட்ட தரைவழிப்பாதை அடிக்கடி போராளிகளின் தாக்குதலுக்கு உள்ளானதால் அங்கு சிங்கள மக்களைக் குடியேற்றுவதன் மூலம் அதனைப் பாதுகாக்கவும் வன்னியில் சிங்களவரின் வீதத்தை அதிகரிக்கவும் முயன்றார்கள்.

இதுபோன்றே சந்திரிகா அரசாங்கம் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தபோது வடக்கு மாகாணத்தை பலகூறுகளாகப் பிரிக்கும் திட்டத்தின் மையமாக ஆனையிறவே விளங்கியது. இவர்களின் திட்டப்படி மேற்கிலிருந்து கிழக்காகச் செல்லும் ஆனையிறவு - வெற்றிலைக்கேணி இராணுவவேலி வடக்கை இரண்டாக வன்னி-யாழ் குடாநாடென பிரிக்கும் அதே வேளை வவுனியாவிலிருந்து ஆனையிறவுவரை அமைக்கப்படும் இராணுவவேலி வன்னிப்பெருநிலப்பரப்பைப் பிரிக்கும். கிழக்கிலிருந்து மேற்காக மணலாறு- வவுனியா-மன்னார் இராணுவவேலி வடக்கு கிழக்கை பிரிக்கும் என்பதாக இருந்தது.



1995 இடப்பெயர்விற்கு பின் யாழ்நகர்...

இவ்வாறு வடக்கு மாகாணத்தை மூன்று துண்டாகப் பிரிந்து முற்றுகையிடும் சிங்கள இனவாதிகளின் திட்டத்தின் மையமாக ஆனையிறவே இருந்தது.

இவ்வாறு அமைக்கப்படும் இராணுவ



www.tamileelamarchive.com

வேலிகள் குறுகிய காலத்திற்கு இராணுவத் தினரால் பாதுகாக்கப்படும் அதேவேளை பின்னர் அவற்றின் பாதுகாப்பை சிங்கள மக்களைக் குடியேற்றுவதன்மூலம் மேற் கொள்ள முடியும் என்பதே சிங்கள இன வாதிகளின் திட்டமாகும். இதனை இவர்கள்



இவ் வசந்தகாலம் மீண்டும் மலரும் காலம் தொலைவில் இல்லை.

மணலாற்றுப் பிரதேசத்தில் செயற்படுத் தியும் வந்தமையை காணலாம்.

எனவே ஆனையிறவை வெற்றி கொண்ட மையானது தமிழ் மக்களின் இருப்புக் குறித்து இருந்துவந்த பெரும் ஆபத்தை நீக்கியுள்ளது என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

அதாவது ஜயசிக்குறு இராணுவ நட வடிக்கையை முற்றாக முறியடித்த ஓயாத அலைகள் - 02 ஓயாத அலைகள் - 03 இன் முதலாம் இரண்டாம் கட்டங்கள் சிங்கள இனவாதிகளின் வடபகுதியை ஆக்கிரமிக் கும் கனவைக் கலைத்தனவாயின. ஓயாத அலைகள் - 03 இன் மூன்றாம் நான்காம் கட்டங்கள் அதனை முற்றாகவே சிதைத்து விட்டன. ஆனையிறவுத் தோல்வியால் சிங் கள இனவாதம் ஆடிப்போய் இருப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும்.

இதேவேளை சிங்கள ஆட்சியாளர் களைப் பொறுத்தவரை ஆளையிறவுத் தளத்தை தமது கௌரவத்தின் சின்ன மாகவே கொண்டிருந்தனர். இவ்வாறே சிறீ லங்கா படையினரும்கூட தாம் ஆனையிற வில் நிலைகொண்டிருப்பதைக் கருதினர் என்பதும் வெளிப்படையாகும். அவர்களின் கூற்றுப்படி தமிழர்களின் இதயபூமியாகிய யாழ் குடாநாட்டை தம்வசம் வைத்திருப் பதை வெளிக்காட்டும் உறுதிப்படுத்தும் அடையாளச் சின்னமாக ஆனையிறவுத் தளத்தைக் கொண்டிருந்தனர் என்பதை அவர்கள் பலமுறை வெளிப்படுத்தியிருக் கின்றனர்.

அதாவது இராணுவ ரீதியாக மட்டு மின்றி அரசியல் ரீதியாகவும் ஆனை யிறவை தமது கௌரவத்தின் சின்னமாக சிங்கள இனவாதம் கொண்டிருந்தது. அந் தச் சின்னத்தைப் பறிகொடுத்துவிட்ட சிங் கள இனவாதம் இன்னமும் இழக்கப்படப் போகின்றவற்றை நினைத்துப் பெரும் கிலேசம் கொண்டுள்ளது.

இதேவேளை இந்த நிலத்தின் உரிமை யாளர்களாகிய தமிழர்கள் ஆனையிறவு வெற்றிகுறித்து பெருமகிழ்வு கொண்டிருக் கின்றனர் என்பதும் வெளிப்படையான விடய மேயாகும். அதற்கும் பல காரணங்கள் இருக் கின்றன. தமிழ் மக்கள் பெரும் அர்ப்பணிப் புடன் நடத்திவரும் விடுதலைப் போராட்டத் தின் மிகப் பெரிய தடைக்கல் அகற்றப்பட்டி ருக்கிறது. வெற்றி கொள்ளப்படமுடியாத உறுதியான கோட்டையென எதிரி இறுமாந் திருந்த கோட்டையைத் தகர்த்தெறிந்திருப் பது போராட்ட வரலாற்றில் இராணுவ ரீதி யாக மட்டுமல்லாது அரசியல் ரீதியாகவும் பெரிய திருப்பு முனைகளை ஏற்படுத்தக் கூடியதாகும். இதனை சிறீலங்காவின் எதிர்க் கட்சித்தலைவர் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அதேவேளை ஆனையிறவுப் படைத் தளத்தை வெற்றி கொண்டமையானது இன்னொரு விளைவையும் ஏற்படுத்தியி ருக்கிறது. அதாவது ஆனையிறவுப் பெருந் தளத்தை வெற்றிகொண்டமையானது தமது கௌரவத்தை உயர்த்தியுள்ளது என்றே தமிழ்மக்கள் கருதுகின்றனர். ஆக்கிரமிப் பாளன் ஆனையிறவுப் பெரும் தளத்தை தனது கௌரவத்தின் சின்னமாக கொள்ளும் போது மண்ணின் மைந்தர்களாகிய தமிழர் கள் அதற்கும் மேலாக அதனைக் கொள் வதில் தவறில்லை.

யாழ்ப்பாணம் சிங்கள இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது மட்டுமல்லாமல், அங்கு சிங்கக்கொடி ஏற்றப்பட்டவிடயம் தமிழர் களின் மனங்களை காயப்படுத்திவிட்டது போல் தெரிகிறதே? என முன்னர் குறிப்பிடப் பட்ட பேட்டியில் செய்தியாளர் கேட்டதற்கு "அவர்களின் மனங்களில் எழுந்துள்ளவை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் யாழ்ப் பாணம் இலங்கையின் ஒரு பகுதியாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது" என சந்தி ரிகா அம்மையார் அலட்சியமாக கூறினார்.

தமிழ் மக்களின் மனஉணர்வுகளை இவர் மட்டுமல்ல சிங்களத்தலைவர் எவ ருமே புரிந்து கொண்டதுமில்லை, புரிந்து கொள்ள முயன்றதுமில்லை. ஆனால் ஆனையிறவு வெற்றியானது தமிழர்கள் தொடர்ந்து பெறப்போகும் வெற்றிகளுக்கு ஒரு ஆரம்பம் என்பதை தமிழ்மக்கள் நன்றாகவே உணர்ந்துகொண்டுள்ளனர்.

▼▼



வள்ளங்கள் உடைந்தாலென்ன
வலிய கரங்கள் இருக்கின்றன
வலை வீச
ஓ.... பகைவனே

உணர்ந்து கொள்
உறுதி கொண்ட எம்
உள்ளங்களை உடைத்தெறிய
உன் 'ஷெல்' களால் முடியாது!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# மே தினம்

உலகில் இன்று 111ஆவது மேதினம் கொண்டாடப்படுகிறது. சர்வதேச ரீதியாக இன, மத, மொழி, நிற, பிரதேச வேறுபாடு காட்டாது அனைத்து உழைக்கும் பாட்டாளி மக்களால் ஒரே தினத்தில் கொண்டாடப்படுகின்ற தொழிலாளர் தினமே மே தினமாகும். தமிழீழத்திலும் இந்நாள் பொதுவிடுமுறையாக அறிவிக்கப்பட்டு எழுச்சிமிகு விழாவாக கொண்டாடப்பட்டுவருகிறது.

ஒரு நாட்டின் வளர்ச்சியில் அதன் பொருளாதார உயர்ச்சியில் தொழிலாளர் வர்க்கம் மிக முக்கிய அங்கம் வகிக்கும் ஒன்றாகும். பொருளாதாரத்தின் முதுகெலும்பே தொழிலாளர்கள் ஆவர். இன்று உலகில் எத்தனை விதமான இயந்திர நவீன தொழில்நுட்பம் வந்தபோதும் தொழிலாளர்கள் இன்றேல் அவற்றின் முழுமையான பயன்பாட்டை காணமுடியாதென்றும் கூறலாம். மேதினம் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக விளங்கும் தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றித்திருநாளாகும்.

உலகின் முதலாவது மேதின ஊர்வலம் 1889ஆம் ஆண்டு மே மாதம் 1ஆம் திகதி அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் தொழிலாளர்களால் நடத்தப்பட்டது. அன்றைய தினம் அப்போது நடைமுறையில் இருந்த 12 மணிநேர வேலை நேரத்தை எதிர்த்து 8 மணிநேர வேலை நேரத்தை நடைமுறைப்படுத்தக்கோரி நடத்தப்பட்டது.

எனினும் இந்தப் போராட்டம் அன்றுதான் ஆரம்பமானதல்ல. எட்டு மணிநேர வேலை வேண்டியும் தொழிலாளர் சுரண்டலை எதிர்த்து 1884 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இந்த ஊர்வலத்திற்கு ஆதரவு அதிகரித்தே வந்தது. இதனால் பீதியடைந்த அமெரிக்க முதலாளித்துவ வாதிகள் மிலேச்சத்தனமான முறையில் ஊர்வலம் நடத்திய தொழிலாளர் மீது தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதல்களில் பல தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். அமெரிக்காவின் மெகோவின் கோவெஸ்டர் என்ற இடத்தில் தொழிலாளர்களால் நடத்தப்பட்ட ஊர்வலத்தின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக மே மாதம் 6ஆம் திகதி சிக்காக்கோ நகரில் கோட்கட் என்ற இடத்தில் நடைபெற்ற ஊர்வலத்தில் தொழிலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலும் பல தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இவ்வாறான ஊர்வலம் நடத்தி தொழிலாளர் போராட்டத்திற்கு அத்திவாரமிட்ட 7 தொழிலாளர்த் தலைவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. மரணதண்டனை விதிக்கப்பட்ட ஏழு பேரில் மூவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதற்கிணங்க விடுதலை செய்யப்பட்டனர். ஏனைய நான்கு தொழிலாளர் தலைவர்களும் தூக்கிலிடப்பட்டனர். தொழிலாளர் உரிமைக்காக தொழிலாளர்களால் உயிர்த்தியாகம் செய்யப்பட்ட முதலாவது உதயம் இதுவாகும். இந்த உயிர்த்தியாகம், இன்றுவரை இருந்து வருகின்ற தொழிலாளர் போராட்டத்திற்கு அடித்தளமிடப்பட்டது எனலாம்.

இதனைத் தொடர்ந்து பிரான்சியப் புரட்சியை நினைவுகூரும் வகையில் பாரிசில் 1889 ஜுன் மாதம் 14ஆம் திகதி கூடிய தொழிலாளர்களால் மேமாதம் முதலாம் திகதியை தொழிலாளர் உரிமைக்காக ஊர்வலம் நடத்தி குரல் எழுப்பும் தினமாக பிரகடனம் செய்யப்பட்டது. இதற்கமைய 1890ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அமெரிக்க சிக்காக்கோ நகர தொழிலாளர்கள் எட்டு மணிநேர வேலை வழங்கல் உட்பட, தூக்கிலிடப்பட்டும் துப்பாக்கிப் பிரயோகத்தின் போதும் கொல்லப்பட்ட தொழிலாளர்களை நினைவுகூரும் வகையிலும் கூட்டாக ஊர்வலங்களை நடத்தினர். அதே தினம் இங்கிலாந்திலும் ஆறு கோரிக்கைகளை முன் வைத்து தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தினர்.

இந்த ஆண்டே ஜேர்மன், ஒஸ்ரியா, ஹங்கேரி, ஸ்பெயின், ஒல்லாந்து, இத்தாலி, நோர்வே ஆகிய நாடுகளுக்கும் இந்த தொழிலாளர் போராட்டம் வியாபித்ததோடு கூட்டாக தொழிலாளர்களால் தமது உரிமைகளுக்காகவும் உழைப்பைச்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சுரண்டி வாழும் முதலாளிகளுக்கு எதிராகவும் போராட்டம் நடத்தினர்.

தொழிலாள வர்க்கத்தின் இத்தகைய போராட்டங்களினதும், அவர்கள் அதற்காக கொடுத்த விலையினாலும்தான் இறுதியில் 1890ஆம் ஆண்டில் ஜெனீவாவில் சர்வதேச தொழில் ஸ்தாபனம் எட்டு மணிநேர வேலை, எட்டு மணிநேர ஓய்வு என்று புதிய சட்டத்தை நிறைவேற்றியது. அதிகாரத்தொனி, முதலாளித்துவ ஆட்சி, உழைக்கும் வர்க்கம் மீது வதைகள் எல்லாம் மறைய மேதினம் வழிவகுத்தது. இப்படித்தான் மேதின வரலாறு அமைகின்றது.

இந்த வகையில், எமது தமிழீழப் பிரதேசங்களிலும் ஆண்டுதோறும் மேதினக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன. எமது விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றுள்ள இக் காலகட்டத்தில் மிகுந்த எழுச்சிமிக்க நிகழ்வாகவே இது இடம்பெற்றுவருகிறது.

தமிழீழ தொழிலாளர் வர்க்கத்தை பொறுத்தமட்டில் எமது பொருளாதார பலத்தை கட்டியெழுப்புகின்ற அதேவேளை சிங்கள ஆக்கிரமிப்பாளரிடம் இருந்து எம் தாயக பூமியை காக்கின்ற பாரிய பணியும் உள்ளது.

சிறீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சிதைக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இவை ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை என்பது வேறுவிடயம். இந்தவகையில் தமிழ் மக்களுடைய பொருளாதார வளத்தை சிதைக்க அது பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. பொருளாதார வளத்தை சிதைப்பதன் ஊடாக விடுதலைப் போராட்டத்தினை மழுங்கடித்து விடலாம் என்ற நோக்கில் சிறீலங்கா அரசு செயற்படுவதால், நேரடியாக உழைக்கும் மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

பொருளாதார தடைகள் இறுக்கப்பட்டு பல வருடங்கள் ஆகியுள்ள நிலையில், முக்கிய பொருளாதார நிலையங்களை ஆக்கிரமித்து அவற்றை சிதைவுறவும் செய்து வருகிறது. அத்தோடு ஆக்கிரமிப்புக்கு அப்பால் உள்ள பெரும் நிலப் பகுதிகளில் இருந்து உழைக்கும் மக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், இன்று தமிழீழ உழைக்கும் மக்கள் பொருளாதார பலத்தை பாதுகாக்க போராட வேண்டியவர்களாக உள்ளனர்.

இவற்றோடு ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள பிரதேசங்களை மீட்டெடுத்து தேசத்தை நிர்மாணிக்கின்ற பெரும் பணியும் அம்மக்களையும் சார்ந்துள்ளது. இந்த வகையில் மக்கள் எழுச்சியடைந்து விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற்றுள்ள இன்றைய நிலையில் இன்று தமிழீழ பிரதேசங்களில் தமிழீழ உழைக்கும் வர்க்கத்தினால் கொண்டாடப்படுகின்ற மேதினக் கொண்டாட்டங்கள் மிகுந்த எழுச்சி மிக்கதாகவும் அர்த்தம்மிக்கதாகவும் அமையும் என்பது உறுதியாகும்.

## சம்பளத்திற்காக போராட்டம் நடத்தாமல் பிரார்த்தனை நடத்தும் மலையகத்தமிழர்.



சிறீலங்கா அரசு அமுல்படுத்தியுள்ள பொதுப்பாதுகாப்புச் சட்டம் எனும் மனித உரிமை மீறல் சட்டத்தினால் இன்று மலையகத் தமிழர் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக சம்பள அதிகரிப்பைக் கோரி போராடும் உரிமையையும் இழந்துள்ளனர். தொழிலாளரின் உரிமைகள் கிடைத்தற்காக மே மாத முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. ஆனால் மலையகத்திலோ முற்றிலும் மாறுபட்ட நிலைமையே காணப்படுகின்றது. அன்றாட உணவுத் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கில் அவர்களது உழைப்பிற்கான சரியான சம்பளத்தை தரமறுத்த சிங்கள தோட்ட முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தச் சென்ற மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தொழிற்சங்கத் தலைவர்களால் அதிக சம்பளம் மலையக மக்களுக்கு பெற்றுக் கொடுக்கமுடியவில்லை. மாறாக அதற்கெதிராக ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தக்கூட திராணியற்ற நிலையில் அவர்கள் கூட்டுப்பிரார்த்தனை நடத்துவோம் என்று கூறுமளவிற்கு அவர்களது நிலையிருக்கின்றது.

இவையெல்லாவற்றையும்விட மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அமைப்புக்களிடையே காணப்படும் ஒற்றுமையின்மையும், பதவிகளுக்காக விலைபோகும் தன்மையும் இன்னும் மலையக மக்களை சோர்ந்துபோகும் நிலைக்குத் தள்ளியுள்ளது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் மலையகத்தில் வாழும் மக்களிற்கென இது வரை சரியான உயர்கல்வி வசதியெதுவும் செய்து கொடுக்கப் படவில்லலை. மலையக மக்களை மாகாண மற்றும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப் படுத்துகின்றவர்களும் தமது நிதியொதுக்கீடுகளை தமது சொந்த நலன்களுக்கே பயன்படுத்துகின்றனர். மக்களுடைய அடிப்படை வசதிகளான ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆரம்ப பாடசாலைகள், மக்கள் குடியிருப்புக்களை ஒழுங்கு படுத்தல் போன்ற அடிமட்ட வசதிகளைத் தன்னும் தம்மை பாராளுமன்றத்திற்கு அனுப்பிய மக்களுக்கு இவர்கள் செய்ய முற்படுவதுமில்லை.

இவற்றைவிட இம்மக்களிடையே அண்மைக் காலங்களாகக் காணப்படும் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியும், எதிர்காலத்தில் மலையகத்தை வளப்படுத்திய தமிழ் மக்கள் மலையகத்தில் வாழ்ந்தார்கள் என்பது ஆவணங்களிலிருந்தே அறியக் கூடியதாக இருக்குமோ என்று அஞ்சும்படியாக அவர்களின் நிலைமைகள் உள்ளன. சிறிய தேசிய இனமொன்று எல்லா வகையான நெருக்கடிகளுக்குள்ளும் சிக்கித் தவிக்கிறது.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இனிவரும் நாட்



- வி

பனைமரமே! நீ நலமா?
பக்கத்தே கிளை பரத்தி
நிழல் விழுத்தி நிற்கும் பூவரசும் சுகம்தானா?
வளவெங்கும் பூத்து வாசலிலும் பூச்சொரியும்
வேப்பமரம் சுகமா?
விடிபொழுதில் வந்திறங்கும்
காக்கை நலமா?
கரிக்குருவி,
புலுனி,
புறா,
யாவும் சுகம்தானா?
நானிருந்த போது வந்து
கூவும் குயில் நலமா? வரையிலே கூடுகட்டி
கன்னற் குரலாலென் காதினிலே தேன்சொரிந்த
வண்ணக் குருவியின்னும் வாழ்கிறதா என்வீட்டில்?
எல்லாம் உளதா? ஏதேனும் குறைகிறதா?
வதையுண்டு போகும் வாழ்வாமே,
சிலையழகு
சிதையுண்டு போகச் சிறையாமே,
ஊர்முழுதும் முள்ளாம்,
முகமூடி முகத்தணிந்த பேயாமே.
நளளிரவில் கேட்கிறதாம் நாயோலம்.
நாம் திரிந்த
நெல்லுவயலெங்கும் நெரிஞ்சிப்பூ பூத்துளதாம்.
சாகும் பொழுதெந்தன் தாய்வீட்டில் சாகேனோ?
வேகும் பொழுதென்னூர் வெளிச்சுடலை வேகேனோ?
தவழ்ந்த மடிமீதும்,
தாங்கியவூர்த் தோள் மீதும்,
குழந்தைப் பருவத்தே குதித்தெழுந்த மண்மீதும்
மீண்டும் உலவ மிக ஆசை;
தடைகளெலாம்;
தாண்டிவருவேன் தாய்மடியை நான்தொடுவேன்.
மணிக்கதவும் திறந்து வை.
வருகிறது ராஜகுதிரை.
வாசலில் முள்பரத்தி நிற்கும் அந்நிய சேவகனுக்கு
தொலைந்தாயெனச் சொல்லிவை.
ஊர் எல்லைவரை நகர்ந்துளது பிள்ளைகளின் தேர்.
இனி உள்ளே புகும்.
புத்தாயிரத்தின் புலரிப்பொழுது நமக்கானது.
ஏறிவந்த எதிரியை மட்டுமல்ல
எடுத்து வைத்த சுவடுகளையும் சிதைத்துவிட்டு
இறுமாப்பில் உள்ளோம் நாம்.
"தமிழீழம்" ஒருகனவு என்றனர் சிலர்.
ஒரு கற்பிதம் என்றனர் சிலர்.
ஈழத்தமிழர் சேவகத்துக்கே உரியர்
நிமிர்ந்த செருக்குக்குத் திறனற்றோர் என்றனர் சிலர்.
பூப்பறிக்கும் கைகளில் போர்க்கருவிகளா
கூடாதென்றனர் சிலர்
தேக்குமரக் காட்டிடையே தீக்குளியலா
பற்றியெரியப் போகுதெனப் பதறினர் சிலர்.
"சிறுபிள்ளை வேளாண்மை" யெனச் சீண்டினர் சிலர்.
எல்லாமே காற்றிலேறிய சருகெனக் கலைந்தன.
ஓயாதஅலை மூன்று உச்சத்தின் உச்சம்.
முகிலுரசிப் போன முகடு.
சாயாதெம் தலையெனச் சாற்றிய பட்டம்.
பாயும் புலிவீரத்தின் பாதத்துக்கு அடியில்
சாய்ந்து கிடக்கிறது பகைவனின் செருக்கு.
சந்தோஷக் காற்று தலைதடவிப் போக
செந்தூரப் பூவின் சிலிர்ப்பாய்
மந்தாரம் போட்டுளது எம்வாசல்
புத்தாயிரப் பெண்ணே!
கலீர் கலீரென உன் காற்சிலம்பு சப்திக்க
எம் வாசலிலும் வந்து ஏறினாய்.
உலகெங்கும் உனக்கு உற்சாக வரவேற்பாம்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ...கள் எமக்கானவை

...க்களம்

...ாசன் -

...ரித்தே போனாயாம்.
...ன்னதர இயலும் எம்மால்?
...து ஈழவாசல்;
...ல்லை; இல்லை ஏழைவாசல்.
...ஞ்சிக்கும் வழியற்றிருக்கும் கதவையும் தட்டினாய்
...ந்தோஷம்.
...சேலரின் அவல் கொண்ட முடிச்சாய்
...தோபடைத்தோம் ஏற்றுக்கொண்டாய்
. N. H. C. R கூரையூடுதான் எமக்குச் சூரிய தரிசனம்.
...டுப்பேற்றாவிடினும்
...ழக்க தோஷத்தால் பாத்திரம் கழுவியது கை.
...சறும் சகதியுமான தெருவில் நடந்தன கால்கள்.
...வாரணத்துக்கும், மருந்துக்குமென
...ண்டிருந்தது வரிசை.
...தான் என் இலக்கெனக் கூவி
...லைதடவிப் போனது எறிகணை.
...ண்டு வீழ்ந்ததாய் கூறி
...காண்டுவந்தனர் சிலரைக் கூட்டியள்ளி
...லம் விழுங்கிகளின் சுவடுபார்த்து
...ாவலரண்களில் விழித்திருந்தனர் பிள்ளைகள்.
...ழமை போல் சாவும்,
...ழமை போல் யாவும்,
...ழமை போல் நாமும்,
...வறென்ன விளங்கியது எம்வாசல்?
...னினும் தளர்ந்தோமா நாம்?
...ல்லை
...மக்கானவள் நீயெனும் உரிமத்தில்

உன்னை வணங்கினோம்.
புத்தாயிரப் பொன்மகளே!
இனிவரும் நாட்கள் எமக்கானவை.
காற்றெமக்குச் சாமரம் வீசும்.
கடலெமக்குக் கால்களைக் கழுவும்,
நிலவே எமக்கினி நெற்றித் திலகம்
சூரியன் சேவகனாவான்.
வெற்றிகள் மட்டுமல்ல விடுதலையும் எம்வாசல் வரும்.
சாமம் கழிந்து போகும் அந்தப்பொழுதே
சந்தோஷ நேரம்.
எங்கோ தூரத்தில் கேட்கும் இரவுப்பூச்சிகளின் ரீங்காரம்.
கல்லுக்கடியிலிருந்து கத்தும்
தவளையொன்றின் தனித்த குரல்
கிளை அசைய இலைகளின் கைதட்டல்.
பூவுரசலாகத் தழுவும் மெல்லிய குளிர்.
எம் ஊர்முற்றத்தில் படியும் இதமான ஈரம்.
இவற்றோடு வரும் வைகறைப்பொழுதொன்றில்
விரைவில் நகரும் புலிகளின் ரதங்கள்.
எம் ஊர்களை நோக்கி.
வீதியெங்கும் நின்று விலாசம் கேட்கிறானாமே ஒருவன்.
காவலரண்களில் நின்று கையைப் பிடிக்கிறானாமே.
நள்ளிரவில் வந்து தூக்கிச் செல்கிறார்களாமே
நாலுபேர்.
சொல்லி வையுங்கள்
இராஜகுதிரை புறப்பட்டு வருகிறது என்று.

குன்றென நிமிர்ந்த தோளும்
குடிவழி சிறந்த வாழ்வும்
வென்றிடும் திமிர்ந்த வீறும்
வெஞ்சமர் ஆடும் தேரும்
பஞ்செனப் பகையை அள்ளிப்
பறந்திட வைக்கும் நெஞ்சும்
தொண்டவர் தமிழர் என்று
குறித்திடு புதுநூற் றாண்டே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்



கலாநிதி சி.க.சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

(முன்னிதழ் தொடர்ச்சி)

5. அதிகாரங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுச் சட்டத்தில் வரையறுக்கப்படவேண்டும். விவசாயம், கூட்டுறவு, காணியும் அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடித்துறை, வீடமைப்பு, சமூகசேவை, மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியன உள்ளடங்கக் குறிப்பிட்ட விடயங்கள் பிரதேச சபைகளின் அதிகாரத்திற்குட்பட்டிருக்க வேண்டுமென்று ஒப்புப் கொள்ளப்பட்டது. வேண்டிய அதிகார எல்லைகள் சட்டத்திலேயே வரையறுக்கப்படும்.

6. குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தவரை, தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்பட வேண்டிய குடியேற்ற வாசிகளை தெரிவு செய்வதும், அத்திட்டங்களில் வேலைக்கமர்த்தப்படும் ஆட்களை தெரிவு செய்வதும் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்குமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இப்போது கல்லோயா அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலை ஆராயப்படல் வேண்டும்.




7. சட்டமூலத்தில் பிரதேச சபைகளை ஒட்டி உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாற்றித் தேவையான இடத்தில் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும் பொருட்டு அவ்விதிகள் திருத்தப்படும்.

8. பிரதேச சபைகளுக்கு மத்திய அரசாங்கம் சொந்தமாக நிதிவழங்கும். அத்தொகை கணக்கிடப்பட வேண்டிய கொள்கைகள் பின் ஆராயப்படும். பிரதேச சபைகளுக்கு வரிவிதிக்கவும் கடன் வாங்கவும் அதிகாரமிருக்கும்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் தமிழ்மக்கள் சார்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் சரத்துக்களை மேலே கண்டோம். வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகம் என்பதனைச் சிங்கள மக்களின் இன்னோர் பலம் வாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றிருந்தது. அன்றைய பிரதமரும் இக்கட்சியின் தலைவருமான டட்லி சேனநாயக்காவுடன் திரு.எஸ். ஜே.வி. செல்வநாயகம் செய்து கொண்ட ஒப்பந்தம் டட்லி செல்வா ஒப்பந்தமென வரலாற்று ஏடுகளில் இடம்பெற்றுள்ளது. (63)

இவ்வொப்பந்தம் 24-3-1965இல் கைச்சாத்தானது.



ஒல்லாந்தரின் சுண்டிக்குழியிலமைந்த தேவாலயம் 17ஆம் நூற்றாண்டு

இதன் அம்சங்களாவன-

1. வடகிழக்கு மாகாணங்களில் தமிழில் நிர்வாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலே பதிவதற்கும், தமிழ் மொழி விசேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கை எடுக்கப்படும்.


2. வடகிழக்குமாகாணங்களிலுள்ள சட்டபூர்வமான நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்கு தமிழே நீதிமன்ற மொழியாகவும் விளங்கும்.

3. ஈழத்தில் மாவட்டசபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மைகருதி சட்டங்களுக்கமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்திற்குண்டென்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



17ஆம் நூற்றாண்டில் வன்னியில் சூடடிக்கும் தமிழர் (ஒல்லாந்தர் ஓவியம்)

4. ஈழப்பிரசைகள் காணிப்பங்கீடுகளில் காணிபெறும் வண்ணம் காணி அபிவிருத்திவிதிகள் திருத்தி அமைக்கப்படும். வடகிழக்கு மாகாணங்களில் உள்ள குடியேற்றத்திட்டங்களில் காணி வழங்கப்படும் போது கீழ்க்காணும் விடயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

அ) வடகிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம்மாகாணத்திலுள்ள காணியற்றவருக்கே முதலில் வழங்கப்படவேண்டும்.

ஆ) இரண்டாவதாக வடகிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

இ) மூன்றாவதாக ஈழத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடம் கொடுத்துப் பின்னர் ஏனையவர்களுக்கும் வழங்கலாம்.


தமிழ் மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகளின் ஆதரவின்றி 1972ஆம் ஆண்டில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட குடியரசு அரசியற் திட்டத்திலும் வடகிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற, நிர்வாக மொழியாகத் தமிழ் மொழியும் ஏற்கப்பட்டிருந்தது.

இக் காலகட்டத்திற்குள் ஒரு சமஷ்டி அமைப்பில், கூட்டாட்சி அமைப்பில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தினைப் பாதுகாக்கலாம் என்ற கோட்பாடு வெற்றியளிக்காது போகவே தனியான தமக்குரிய சுதந்திரக் கோட்பாட்டுக்கமைய ஓர் தனி நாட்டிற்குள் இதனைப் பாதுகாக்கலாம் எனத் தமிழ் மக்கள் சிந்தித்தனர். இதுதான் 1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகத்தில் உருவாக்கப்பட்ட தமிழீழத் தீர்மானமாகும். இத் தீர்மானம் அன்று கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் நிறைவேறியது. (64) அஃதாவது-

ஈழத்தமிழர் தமது பெருமைமிக்க மொழியினாலும், மதங்களாலும் அவர்களின் தனிவேறான பண்பாட்டு வரலாற்றுப் பாரம்பரியத்தாலும் பல நூற்றாண்டுகளாக ஆயுதந்தாங்கிய ஐரோப்பியப் படையெடுப்பாளர்களால் தோற்கடிக்கப்படும்வரை ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் தனிவேறான சுதந்திர அரசினை நடாத்தி வந்தமையினாலும் எல்லாவற்றுக்கும் மேலாகத் தமது நிலப்ரப்பில் தனிவேறாகத் தம்மைத் தாமே ஆளவேண்டும் என்ற திடசங்கற்பம் கொண்டிருப்பதாலும் சிங்களவரிடமிருந்து வேறுபட்ட தனி வேறு தேசிய இனம் என இத்தால் பிரகடனஞ் செய்கிறது. 1972இல் நிறைவேற்றப்பட்ட சிறீலங்காக் குடியரசின் அரசியல் யாப்பினால் தமிழர்கள் ஓர் அடிமைகள் இனமாக ஆக்கப்பட்ட சிங்களவர்களாகிய புதிய காலனித்துவ எசமானர்களால் ஆளப்படுகின்றனர் என்பதனை அங்கீகரிக்கின்றது. தவறான மார்க்கத்தில் இவ்வதிகாரத்தினைக் கைப்பற்றிப் புதிய காலனித்துவவாதிகள் தமிழ்த் தேசிய இனத்தின் நிலப்பரப்பினையும் மொழியையும், பொருளாதார வாழ்க்கையையும் வேலை வாய்ப்புக்களையும் கல்வி வாய்ப்புக்களையும் பறித்துத் தமிழ் மக்கள் தேசிய இனமாக விளங்குவதற்கான சகல தன்மைகளையும் அழித்துவிடுகின்றனர். இந் நாட்டிலே தமிழ்த் தேசிய இனம் உயிர் வாழுதலைப் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ் ஈழம் என்ற சுதந்திர இறைமை வாய்ந்த மதச்சார்பற்ற சோசலிச அரசை அமைத்தல் வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

மேற்கூறிய தீர்மானம் நிறைவேறிய அதே ஆண்டில் திரு.எஸ். ஜே.வி. செல்வநாயகம் பாராளுமன்றத்தில் 19-11-1976இல் 1949ஆம் ஆண்டிலிருந்து தாம் வற்புறுத்திவந்த சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டு தனித்தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைப்பதாகவும் கூறினார். 1977இல் வட- கிழக்கு மாகாணங்களில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டுப் பெரு வெற்றியும் பெற்றது.





பாரம்பரிய மண்ணில் ஏதிலிகளாக்கப்பட்ட தமிழர்
1983 யூலைக் கலவரம்

**தொடரும்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சிங்களம் தலை குனிகின்றது! தமிழீழம் தலை நிமிர்கின்றது!

யாழ் குடாநாட்டு நிலவரங்கள் நெருக்கடிகள் குறித்து ஆராய, சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அண்மையில் அனைத்துக்கட்சிக் கூட்டத்தை கூட்டியிருந்தார். கூட்டம் என்னவோ இந்த நெருக்கடிக்குள் இருந்து மீளும்வகையை ஆராய்வதற்குப் பதிலாக, மேற்கொண்டு தமது அழிவுப்பாதைக்கு பலம் சேர்க்கும் கூட்டமாகவே அமைந்திருந்தது.

யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதென்பது சந்திரிகாவின் தீர்க்கமான முடிவாக இருந்தது. இத்தனைக்குப் பிறகும், யாழ்ப்பாணத்தைவிட்டு இராணுவத்தை வெளியேற்றுவதில்லை என்பதுடன், ஒரு இராணுவத்தினன் இருக்கும் வரைக்கும் யாழ்ப்பாணத்தை தக்கவைத்துக்கொள்ளும் போர் தொடரும் என்பது சந்திரிகாவின் அன்றைய சூழுரைப்பாக இருந்தது. இது சிங்களக் கட்சிகளுக்கும், சிங்கள மக்களுக்கும் படுதோல்வியடைந்துள்ள தனது படையினரின் பரிதாபத்தை மறைக்க மேற்கொள்ளப்பட்ட சூழுரைப்பாகவே கருதஇடமுண்டு.

குடாநாட்டில் சிக்குண்டுள்ள இராணுவத்தினருக்கு தக்கசமயத்தில், வெளிநாட்டு உதவிகள் கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையில், சந்திரிகா மீண்டும் யுத்தப்பிரகடனம் செய்திருக்கின்றார்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு வரைபடத்துடன் விளக்கமளித்த சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை, விடுதலைப் புலிகள் எதுவரை நிற்கின்றனர், இராணுவத்தினர் எங்கெல்லாம் நிற்கின்றனர் என்ற, மேற்படி கட்சிகளின் சந்தேகத்தைத் தீர்க்கும் முயற்சியில் தன்னாலான வரை முயற்சித்தார். இராணுவத்தின் பிடியில் உள்ள பகுதிகள், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் என அவர் கொடுத்த விளக்கத்தை கட்சிகள் அவ்வளவாக ஏற்றுக்கொள்ளவில்லை நம்பவில்லை என்பதற்கு, ஒவ்வொரு மணித்துளியிலும் களநிலவரம் வேகமாக மாற்றமடைந்துவருவது காரணமாக இருக்கலாம். என்றாலும் சில சிங்களக்கட்சிகள், ரத்வத்தையின் வார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளவும் செய்தன.

கட்சி அந்தஸ்து பெற்றுள்ள, பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் போன்ற சில பௌத்த சிங்கள பேரினவாதக் குழுக்களுக்கு இது ஒரு நல்ல அரசியல் மேடையாக அமைந்துவிட்டது. அவர்கள் விளாசித்தள்ளினர். இனவெறியை கக்கித் தீர்த்தனர். ஆனையிறவு வீழ்ச்சியும், யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் வேகமான நகர்வும், சிங்களப்படையினரின் நிர்க்கதியான நிலையும் அவர்களை, ஆத்திரம் கொள்ளவைத்திருப்பது புரிந்துகொள்ளக் கூடியதே. சிங்களப் பேரினவாதத்தின் முதுகெலும்பே இராணுவம் என்ற நிலையில், அந்த முதுகெலும்பின் முதுகெலும்புகளே முறிக்கப்பட்டுள்ள நிலையில் பேரினவாதிகளால் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்.

என்ன கதைக்கின்றோம், ஏது கதைக்கின்றோம் என்று புரியாத நிலையில், ஆத்திரம் தலைக்கேற கத்தித்தீர்த்தனர். தமிழ்ப் பயங்கரவாதிகளை அழிக்க முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்பது அவர்களின் குரைப்பாக இருந்தது.

இதனை ஈ.பி.டி.பி. டக்கிளஸ் தேவானந்தா உட்பட அவரையொத்த சிலர் எதிர்க்கவும் செய்தனர். அவர்களின் குரைப்பில் சிறு திருத்தம் ஒன்றை இவர்கள் கொண்டுவந்தனர். தமிழீழ விடுதலைப் போரை தமிழ்ப்பயங்கரவாதம் என்று சொல்வதால் தம்மைப் போன்றவர்களும் தேவையற்ற முறையில் சிங்களத்தின் வேண்டப்படாதவர் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிடுவோமோ என்று அவர்கள் அர்த்தமற்றமுறையில் கவலைகொண்டனர். அதனால்... அதனைப் புலிப்பயங்கரவாதம் என்று சொல்வதே பொருத்தம் என்பது டக்கிளஸ் தேவானந்தாவின் மேலான கருத்தாக இருந்தது. சந்திரிகா உட்பட, அரசாங்க ஆதரவுக்கட்சி உறுப்பினர்கள் அக்கருத்தை வரவேற்கவும் செய்தனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், மேற்படி குழுக்களுக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்பதை அவர்கள் சரியாக விளங்கிக்கொண்டிருக்கின்றனர்.

தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை, சந்திரிகாவின் ஆதரவில் வாழ்ந்து வரும் கைக்கூலிகள் விடுதலைப் போராட்டமாக எப்படி வகைப்படுத்த முன்வருவார்கள்.

இத்தகைய முறுக்கேறும் வீரவசனங்களை சிங்களம் வெளிப்படையாக பேசிக்கொண்டாலும் உள்ளுக்குள் அது வெகுவாக நொந்துபோய் இருக்கின்றது. இத்தனை காலமாய் கட்டிய இராணுவக் கோட்டை ஒரே இடியாக சிதைந்து போயுள்ளதில் கலக்கம். சந்திரிகாவைப் பொறுத்தவரை கடந்தகால இராணுவ வெற்றிகளின் மூலம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தான் கட்டிய அரசியல் கோட்டை தவிடு பொடியாகியுள்ளது என்பதுடன் சிங்கள மக்களின் வசைபாடலுக்கு இலக்காகிவிட்டேனே என்ற தவிப்பு வரலாற்றில் மோசமான தோல்வியைப் பெற்றுத்தந்த தலைவி என்ற அவமானத்தை நிரந்தரமாக பெற்றுவிட்டேனே என்ற கலக்கமும் தவிப்பும் இனம்புரியாத கொந்தளிப்பு நிலையிலும் அவர் உள்ளார்.

சற்றேறக்குறைய ஆறேழு மாதங்களுக்குமுன் வெளிநாட்டுத் தலையீட்டை முழுமையாக எதிர்த்த சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரோ உலகநாடுகளெல்லாம் தற்போது அலைந்து திரிகின்றார். புலிகளுடன் மோத உலகநாடுகளின் உதவி தேவை என அவர் போகுமிடமெல்லாம் புலம்பிவருகின்றார்.

இராணுவத்தினர் குடாநாட்டில் முழுமையாக விடுதலைப் புலிகளிடம் சிக்கி உயிர் துறக்கவேண்டிய நிலை ஏற்படுமிடத்து படையினரை பாதுகாப்பாக மீட்டெடுக்க இந்தியாவின் உதவி தேவை என அவர் இந்தியாவிடமும் கேட்டிருக்கின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளையே மலினப்படுத்தி நுளம்படிக்கவே அவர்கள் லாயக்கென கேலிபேசியதுடன் இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையே என அழுத்தம்கொடுத்துப் பேசிய கதிர்காமர் இன்று உலகமெலாம் திரிந்து சிங்களப் பேரினவாதத்திற்கு உயிர்ப்பிச்சை கேட்டலைகின்றார்.

தமிழர் தேசியப் பிரச்சினையை நிராகரித்து இது உள்நாட்டுப் பிரச்சினை இங்கு தலையிட எவருக்கும் உரிமை கிடையாது எனக் குரல்கொடுத்துவந்த சிங்களப் பேரினவாதிகளோ சிறீலங்கா இராணுவத்தினருக்கு உதவுவது இந்தியா உட்பட அயல் நாடுகளின் கடமை என தற்போது வலியுறுத்துகின்றனர்.

இதுநாள் வரையும் சிங்கள இராணுவத்தின்மீதும் அதன் கவர்ச்சிகரமான தளபதிகள் மீதும் சிங்களப் பேரினவாதத்தை தலைமையேற்று நடத்துகின்ற நவீன தலைமைகள் மீதும் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்கு தற்போது நம்பிக்கை போய் விட்டது. தமது இராணுவத்தினர் மீதான அவர்களின் நம்பிக்கை அறவே அற்றுப் போய்விட்டது. போர்க் கதாநாயகர்களாகச் சித்தரிக்கப்பட்டு வெற்றிகளைக்குவிக்கும் தளபதிகளாகக் கருத்துாட்டப்பட்டிருந்த படைத்தளபதிகள் மீதும் நம்பிக்கை போய் விட்டது. அதனால்தான் சிங்களப் பேரினவாதம் தமது இராணுவத்திற்கு உதவி செய்ய இந்தியாவை, பாக்கிஸ்தானை, இஸ்ரேலை, அமெரிக்காவை உதவிக்கு அழைக்கின்றது.

உண்மையில் என்னவென்றால் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை அழித்தும் பழித்தும் தமிழ் இனத்தை முழுமையாக அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த எண்ணியிருந்த சிங்களப் பேரினவாதம் இன்று சிங்கள தேசத்தை பரிதாப நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கின்றது. சிங்கள மக்கள் இன்று கூனிக்குறுகி மலினப்படுத்தப்பட்டு



மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா

கின்றனர். சிங்கள இராணுவத்தின் பரிதாப நிலை சிங்கள மக்கள் மத்தியில் உளப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதேவேளை, உலக நாடுகளின் கால்களில் சிறீலங்கா அரசுபோய் வீழ்ந்திருப்பதும், அது இங்குமங்குமாய் அலைந்து இரப்பதும் சிங்கள மக்களின் சுயகௌரவத்தையும் அவர்களின் இறையாண்மையையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

இத்தனைக்கும் சின்னஞ்சிறிய மக்களினமான தமிழீழத் தேசிய இனம் ஒரு புதிய நம்பிக்கையுடன் தன் சொந்தக் காலில் உறுதியோடு எழுந்திருக்கின்றது. எத்தனையோ துன்பங்களையும் கொடிய அடக்குமுறை அனுபவங்களையும் சந்தித்தபோதும் அவற்றையெல்லாம் தாங்கி கொடிய சவால்கள் எதிர்ப்புக்களை எதிர்கொண்டு முறியடித்து இறைமையுள்ள நாடாக தலைநிமிர்கின்றது தமிழீழம்.

அநீதியான இனஅடக்குமுறைக் கொள்கையை தனது பிரதான அரசியல் கொள்கைத் திட்டமாக வரிந்துகொண்டு அதற்கொரு சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொடுத்து தன் நட்பு நாடுகளின் உதவியுடன் அதனை நிறைவேற்றத் துடித்த சிங்கள அரசுகளிற்கும் தமிழீழ மக்களின் சுதந்திரமான வாழ்விற்காக, விடுதலைக்காக மக்கள் மீது அசையாத நம்பிக்கைகொண்டு துன்பச் சிலுவையை தோழில் சுமந்தபடி சதா சவால்களை எதிர்கொண்டபடி முன்னேறி இன்று வெற்றியின் வாசலில் நிற்கின்ற தமிழீழத் தேசியத் தலைமைக்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேறுபாடு.

சந்திரிகாவும் சரி சந்திரிகாவிற்கு முன்னர் சிங்களப் பேரினவாதத்தை தலைமையேற்று வழிநடத்திய சிங்களத்தலைவர்களும் சரி சிங்கள மக்களை எவ்வளவு அவமானப்படுத்தியிருக்கின்றனர்? அவர்களின் இயற்கை வாழ்வை இழிவுபடுத்தியிருக்கின்றனர். அவர்களின் சுயகௌரவத்தை மதிப்பை சிறப்புக்களை விலைபேசி விற்றிருக்கின்றனர்.

ஆனால், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களோ தமிழீழ மக்களைத் தலைநிமிர வைத்திருக்கின்றார். எந்த நாட்டிடமும் கையேந்திப் பிழைத்து கைகட்டி நிற்கின்ற இழிநிலையில் அவர் தமிழீழத்தை வைக்கவில்லை. மதிப்புமிகு இனமாக, பெருமைமிகு இனமாக, வளமும் வாழ்வும் சிறப்பும் மானமும் வீரமும் நிறைந்த தொன்மையான இனம் இது என்ற பெருமையை அவர் எமது இனத்திற்குப் பெற்றுத்தந்திருக்கின்றார். ஒரு இனத்தின் தலைமை எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு தமிழீழத் தேசியத் தலைவர் ஓர் அற்புதமான உதாரணம். அடிமை மனோபாவத்திற்குப் பழக்கப்பட்டுப்போன ஓர் இனத்தை தலைநிமிர்த்தி, வீரம் பொருந்திய விடுதலைச் சேனையாக்கிய பெருமை அவரையே சாரும். அதிலும் இதே மக்கள் மீது நம்பிக்கைகொண்டு அதி அற்புதமான விடுதலைப் போராட்டத்தை நடத்துகின்ற அதே வேளை, நெருக்கடியான கட்டங்களில் மனம்நொந்து, சோர்ந்துபோகாமல் அதனைச் சவாலாக எதிர்கொண்டு முறியடிக்கும் சக்தியை மக்களுக்கு ஊட்டிய விடுதலையின் தந்தை அவர்.

உண்மையையும், நேர்மையையும் தனது ஆன்மாவின் மந்திரமாக்கிக்கொண்டு, தமிழ் மக்களின் விடுதலையை தனது உயிரின் தாகமாக வரித்துகொண்டு எமது வீரத் தலைவன் முன்னே. தலைவரின் வழியில் தமிழீழ தேசமே நெஞ்சு நிமிர்த்தி அணிவகுத்துநிற்கின்றது. எதிரேயிருந்து, விடுதலைச் சூரியனின் பொன்னிறக்கதிர்கள் தடைகளை ஊடுருவிக்கொண்டு விடுதலைக்காய் அவாவி நிற்கும் எம்மக்களின் முகங்களில் படர்கின்றது. அந்தச் சூரியனைப் போல எம்மக்களின் முகங்களும் தகதகக்கின்றன.

**-சுப்பு-**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலமெங்கும் வீழ்த்தப்பட்ட பெண் இன்று

**போராட்டத்துடன் இணைந்திருக்கும்போது பெண், போராட்டம் சிருஷ்டித்திருக்கும் புதிய பயில் முறையில் வாழ்கின்றார். அங்கே நிகழும் வாழ்வு முழுமையை நோக்கியதாக அமைகின்றது; அர்த்தம் பெறுகின்றது;**



**– கருணாகரன் –**

எமது சூழலில் பெண் வாழ்வு எப்படி இருக்கின்றது? வாழ்வு என்ற பேருண்மையை ஆண்வாழ்வு, பெண்வாழ்வு என்று தனித்தனியே பிளவு படுத்திக்கொள்ளலாமா? உண்மையில் இயல்பான வாழ்வு என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் என வேறுவேறாக அர்த்தம் தருகின்றதா? உணர்தலிலும் அனுபவம் கொள்வதிலும் சுதந்திரத்தை விரும்புவதிலும் இருபால் வேறுபாடுகள் உண்டா? முடிவற்ற எல்லையை நோக்கி இவ்வாறு எண்ணற்ற கேள்விகள் காலம் நீளத்துக்கும் கேட்கப்படுகின்றன; விவாதங்கள் தொடர்கின்றன; மறுப்புரைகளும் ஏற்புரைகளும் நடந்தேறுகின்றன; நிராகரிப்பும் வாசலடைப்பும் நிகழ்கின்றது. ஆனால் வாழ்வோ விரிந்த தளத்தில் மாபெரும் சவால்களை அளித்த படியும் எதிர்கொண்டவாறும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது பேதங்களை மறுக்கின்றது. பிரிவையும் ஒடுக்குதலையும் தனியாக்குதலையும் விலக்கி விட்டு உண்மையை நாடிச்செல்கிறது. அநுபவம் கொள்வதிலும் உணர்வதிலும் சுதந்திரத்தை அவாவுதலிலும் வாழ்வு முழுமையை விரும்புகின்றது. இந்த முழுமை, வாழ்வை எதிர்கொள்ளும் பெண்ணுக்கு நமது காலத்தில் நமது சூழலில் சிந்திக்கின்றதா?

இன்று நாம் நாகரீக உலகின் புறச்செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்டுள்ளோம். புதிய தொழில்நுட்பங்கள், புதிய சாதனங்கள் அவற்றினூடான உறவுகள், அவற்றின் பயன்பாடுகளில் வாழ்வை இணைத்திருத்தல் என புதிதை நோக்கிச் செல்கின்றோம். ஆனால், எங்களின் அடிமனத்திலும் வாழ்வை ஒழுங்கமைப்பது பற்றிய கருதுகோளிலும் முற்றிலும் பழைய, சம்பிரதாயமான நெகிழ்ச்சியற்ற, இறுக்கமான வரையறைகளையே பின்பற்றுகின்றோம். வாழ்வின் இயல்பான சுதந்திரத்தன்மையைப் புறக்கணித்து அதன் விரிந்து பரந்த பொருளாழத்தை மறுதலித்து சட்டமிடப்பட்ட யாப்புகளுக்குள் சிக்குண்டு நெருக்கடிகளுக்குள் புதையுண்டு ஒருமைப்படுத்தப்பட்டு வதைபடுகின்றோம். புறத்தே சிந்தனையாலும் விஞ்ஞானத்தின் விளைவுகளாலும் பெறப்பட்ட சாதனங்கள், பண்டங்கள் தொடர்பு முறைகளை உள்வாங்கும் நாம் அகத்தே அதற்கு எதிராக மூடநம்பிக்கைகளிலும் உழுத்துப்போன சம்பிரதாயங்களிலும் பழைய விதிகளுள்ளும் அமிழ்ந்து விடுகின்றோம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



பகுத்துப்பார்க்கும் பார்வையை இழந்து விட்டோமா? சிந்திக்கும் ஆற்றலை தவறவிட்டுவிட்டோமா? வாழ்வின் பொருள் பற்றிய புரிதலும் தேடலும் அவசியம் இல்லை என்றாகிவிட்டதா?

நமது சடங்குகளும் சம்பிரதாயங் களும், எண்ணவுலகும், மரபும் - பண் பாடும் பொருளுலகமும் சமூகரீதியில் பெண்ணுக்கு முழுமையை அளிப் பதில் சம்மதமற்றிருக்கின்றன. பெண் வாழ்வை திசைமாற்றி, அதில் சுருக் குக் கயிற்றை மாட்டிவிடுகின்றன. இதற்கான கண்டனங்களும் எதிர்ப் புணர்வும் எதிர்ச்செயற்பாடுகளும் நிகழ்ந்தாலும் வாழ்வை நுகர்வதிலும் அநுபவிப்பதிலும் உணர்வதிலும் பெண் கொள்ளும் நெருக்கடிகள் சாதாரண மானவையல்ல.

இருளின் ஆழத்துள்ளும் நெருக் கடிகளின் வலையத்துள்ளும் ஒடுக்கு முறைப்பின்னல்களில் சிக்கியும் அவல முறும் பெண், தன் வாழ்வை நுகர முடியாமல் அவஸ்தையுறும் நிலை தொடர்வது, நம் சிந்தனை வளர்ச் சிக்கும் அறிவார்த்தத்துக்கும் மன விருத்திக்கும் பெரும் கரும்புள்ளியல் லவா? நம்மை நாமே மறுப்பதான, நமக்குள் நாமே விரோதம் கொள்வ தான நமது வாழ்வை நாமே புறக் கணிப்பதான கருமைப்படர்வாக இது தொடருகின்றது. ஒருவரின் உரிமையை எடுத்து அதை நாம் அதிகமாக அனு பவிக்கும்போது நமக்கு அது மேலதிக மான சுமையாகிறது. ஒருவரின் உணர்வை நாம் புறக்கணிக்கும்போது அவருடைய சினேகத்தை இழந்து எதிர்நிலைக்குத் தள்ளப்படுகின்றோம். ஒருவரின் சுதந்திரத்தை மறுக்கும் போது மனிதப்பண்பு நிலையிலிருந் தும் இயல்புத் தன்மையிலிருந்தும் சரிந்துவிடுகின்றோம். ஆனால், ஆதிக் கம் செலுத்துதலும் ஒடுக்குதலும் என்ற நிகழ்புலத்தினூடேதான் வாழ்வை மறு தலிக்கும் செயற்பாட்டில் நாம் தொடர்ந் தும் செயற்படுகின்றோம்.

பொறிகளாலான எண்ணங்களாக, எமது எண்ணவுலகம் இருக்கின்றது. முன்னர் வாழ்வு நிகழ்ந்தபோதுகளில் உருவாகியும் உருவாக்கியும் இருந்த விதி முறைகளும் நடைமுறைகளும் நம்மைப் பின்தொடர்ந்து எமது பயணத் தைத் தாமதிக்க வைக்கின்றன. இவை எம்மைப் பின்தொடர்கின்றன என் பதை விட இவற்றை நாமே பின் தொடர்கின்றோம். என்றோ நிலவிய வாழக்கையின் அமைப்பை எந்த வளர்ச்சியும் மீட்சியுமின்றி இன்றும் பின்பற்றும் அவலம் வேறு எந்தச் சமூகத்துக்கும் இல்லாதளவுக்கு எமக் குண்டு. காலப்பொருத்தமின்றி முரண் களில் சிக்குண்டு பொறிகளிலும் குழி களிலும் சதாவீழ்கின்றோம்.

அன்றைய வாழ்வு அப்போதிருந்த அதிகாரக்கட்டமைவுகளால் கட்டமைக் கப்பட்டிருந்தது. அதன் இயல்பென விதிகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தது. பின் இதுவே மர பாக - வழமையென ஆகிவிட்டது. ஆனால், வாழ்வு புதிய திசையில் நகரும்போது அது புதிய வாழ்க்கை முறையைக்கோருகின்றது. நாமோ புதிய வாழ்க்கையைக்கண்டு திடுக் கிடுகின்றோம்; அதிர்ச்சியடைகின் றோம், புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகின்றோம். மனம் மரபுகளிலும் பழமையிலும் புதைந்து அவற்றைக்கவசமாக்கிக் கொள்கின்றது. இதுவேதான் எமது வாழ்விலும் தொடருகின்றது. எமது பதிய வாழ்வு அது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கேற்பவும் கூடிய

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





மாதிரியும் முன்னகர்கின்றதா? புதிய சிந்தனையை கிளர்த்துகின்றதா? புதிய கருத்துலகத்தைச் சிருஷ்டிக்கின்றதா? புதிய வாழ்க்கை அமைப்பை முன் வைக்கின்றதா?

எமது காலத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி நமது வாழ்வின் அடிப் படைகளை மாற்றியமைக்கக் கோருகிறது. காலத்துக்கும் நெருக்கடிகளுக்கும் முகம் கொடுக்கக்கூடிய மாதிரி வாழ்க்கை முறை இன்று மாறுகின்றது. ஆனால், இந்த மாற்றம் முழுமையானதா? நிரந் தரமானதா? இது தொடர்பான விழிப் பும் நிதானமும் அறிவார்ந்த செயற் பாடும் திட்டமிடலும் நிகழ்ந்து இதை மேம்படுத்த வேண்டும். இப்போது நாம் எப்படி இருக்கின்றோம்?

எமது அரசியல் பிரச்சினை நம் வாழ்வின்மீது மிகவும் அமுத்தமான நெருக்கடிகளை ஏற்படுத்தியது. நாம் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போராடத்தொடங்கினோம். போராட்டம் புதிய வழிமுறைகளை ஏற்படுத்தியது. புதிய வாழ்க்கை இயல்புகள் தோன் றின. இங்கே இரு விடயத்தை நாம் மிகவும் ஆழமாக அவதானிக்கவேண் டும். போராட்டத்தில் பெண்கள் தம்மை முழுமையாக முற்றிலும் புதிய முறை யில் இணைத்தனர். இந்த இணைப்பு எமது வாழ்க்கை அமைப்பு முறையில் பெரும் மாற்றமாகியது; புதுமை யானது; எமது பண்பாட்டுக் கருவூலத் தில் அதிர்வூட்டும் நிகழ்வானது. மர பார்ந்த கருத்துலகத்தில் பெரும் திருப் பத்தை ஏற்படுத்தியது; வழமையிலி ருந்து புதுமைக்கு நகர்த்தியது.

இந்த நகர்வு எப்படி ஏற்பட்டது? பெண்கள் இந்தக் காலகட்டத்தில் எதிர்கொள்ள தம்மைத் தயார்படுத்த வேண்டிய நிலைக்கு ஆளாகினர். அவர் கள் செயற்படதொடங்கினர்.

அணியும் உடையிலிருந்து வாழ் வின் செயற்பாடுகள் சகலதிலும் முற் றிலும் வேறான ஒரு அமைப்புமுறை எமது சூழலில் அறிமுகமானது. இப் போது ஒரு பெண் போராளியின் தோற் றத்தையும் செயற்பாட்டையும் அவரின் கருத்தோட்டத்தையும் நினைத்துப்பாருங் கள். வன்முறையில் நேரடிப்பங்கேற்கும் இராணுவத்தை முறியடிப்பதிலிருந்து எமது தேவைகளை நிறைவேற்றும், ஈடுசெய்யும் சகல பணிகளிலும் அவர் கள் தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்ற னர். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடை யில் சிருஷ்டிக்கப்பட்டிருந்த பிரிகோடு அழியத்தொடங்குகின்றது.

ஆனால், வெளியே சமூகத்தில் பெண்வாழ்வு பழைய அதே இயங்கு தளத்தில் - பொறிகள் சூழ்ந்த பாழ்வெளி யில் அசைகிறது. போராடும் பெண் அதிலிருந்து விடுபட்டு வெளியே வரும் போது அவரும் இந்தப்பொறிகளில் சிக்கிக்கொள்கிறார். அணிகலன்கள், சம்பிரதாயங்கள், மரபின் இடறல்கள், தெளிவற்ற நம்பிக்கைகள் எனப் பல வற்றால் சூழப்பட்டு அலைக்கழிக்கப்படு கின்றார். போராட்டம் புதிய திசையில் பயணிக்கத்தூண்டும் போது அதனுடன் இணைந்தியங்கும் பெண் தன்னை புதிய தளத்தில் நகர்த்துகின்றார். அவருக்கு சுமைகள் இல்லை. நெருக் கடிகள் தீர்கின்றன. சுதந்திரத்துக்கு மிக அருகில் அவர் உலாவுகின்றார். போராட் டத்துடன் இணைந்திருக்கும் போது பெண், போராட்டம் சிருஷ்டித்திருக்கும் புதிய பயில்முறையில் வாழ்கின்றார். அங்கே நிகழும் வாழ்வு முழுமையை நோக்கியதாக அமைகின்றது; அர்த்தம் பெறுகின்றது; அது, எதிர்கொள்ளும் சகல நெருக்கடிகளையும் முறியடித்து சிறகு விரித்துப்பறக்கின்றது. போராட் டத்தினுள்ளே நிகழும் இந்த நிகழ்வு வெளியேயும் முழுச்சமூகத்திலும் நிகழ வேண்டும். இதை ஏற்படுத்துவது பற்றி நாம் மிகத் தீவிரமாகச் சிந்திக்கவேண் டிய அவசியம் நிறையவுள்ளது.

இன்று பெண்கள் பயிலும் கல்வி யும் ஆண்கள் பயிலும் கல்வியும் ஒன் றாக இருக்கிறது. சட்டம் மற்றும் பொது வான நிர்வாக விதிகள் இயங்கு முறை கள் ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால் பெண் வாழ்வும் ஆண் வாழ்வும் வெவ் வேறானமுறையிலேயே அமைந்திருக் கிறது. பெண் தொடர்பான கருதுகோள் களும் அணுகுமுறைகளும் ஒரு வகையாகவும், ஆண் தொடர்பான கருதுகோள்களும் அணுகுமுறைகளும்


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





இன்னொரு வகையாகவும் இருக்கின்றது. அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்குமான வாழ்வும் அதன் அர்த்த விரிவும் ஒன்றாக இருந்தாலும் சமூக நடைமுறையில் இவை இரண்டும் இன்று வெவ்வேறாகவே அமைந்திருக்கின்றன. ஆணின் வாழ்க்கை முறையும் அதன் அமைப்பும் வேறாக இருக்கும்போது அவர் பயிலும் கல்வியும் அவருக்கான சட்டசமூக நிர்வாகவிதிகளும் வேறாகவே அல்லவா இருக்கும்? பெண்ணுக்கும் இவ்வாறு வேறுபட்டு தனியாக இருக்க வேண்டும். ஆனால் ஒரே அம்சங்களில் பொதுத்தன்மை பெற்றிருக்கும் இவற்றினூடு வழிநடத்தப்படும் (ஆண், பெண் என இருவரும் இணைந்து பயன் கொள்ளும்) சமூகம் எப்படி வாழ்வை அனுபவிப்பதிலும் உணர்வதிலும் வேறுவேறாகப் பிரிகின்றது, அல்லது பிரிக்கப்படுகின்றது? இது பெரும் மோசடியாகும். இது பற்றி நாம் கேள்விகளை எழுப்ப வேண்டும்.

எவ்வாறு போராட்டமும் போராட்ட வாழ்வும் புதிய திசையில் பயணம் செய்ய பெண்ணுக்கு வசதிகள் அளிக்கிறதோ அவ்வாறு வெளியேயும் நிகழ வழிகள் திறபடவேண்டியதாகிறது. முன்னர் கணவனுக்குப் பணிசெய்தல், குழந்தைகளைப் பராமரித்தல், வீட்டுப் பணிசெய்தல் என்பன பெண் வாழ்வின் செயற்பாடுகள். இன்று, பெண் பெறும் கல்வியூடாக புதிய வர்ணத்தில் பெண்ணுக்குரியதென ஒதுக்கப்படும் மென்பணிகளாகவே உணரப்படுகின்றது. ஆசிரியத்தொழில், மருத்துவத்தாதி, வரவேற்பாளர், தட்டெழுத்தாளர், எழுதுனர் போன்றவையே அநேகமான வேளைகளில் பெண்களுக்குரியதென விதியாகிவருகிறது. இதைப் புறக்கணித்து புதிய வாழ்வில் பெண் வாழ புதிய கல்வியும் புதிய தொழில்நுட்பமும் பெண்ணுக்கு அளிக்கப்படவேண்டும். இது புதிய சித்தனையையும் புதிய வாழ்வையும் அவருக்குத்தரும். எமது போராளிப்பெண்கள் கடலை வசப்படுத்தியதிலிருந்து சகல வேலைகளில் ஈடுபடுவது வரை புதிய களத்தைத் திறந்தேயிருக்கின்றார்கள்.

பெண் வாழ்வின் நெருக்கடிகளைத் தீர்க்கக்கூடிய கல்வியும் சிந்தனையும் செயற்பாடுகளும் சமூக மட்டத்தில் ஏற்படுத்தப்படவேண்டும். இந்த ஏற்பாடுகள் செயற்பாடாகப் பரிணமித்து நடைமுறையாகும்போது சமூகத்தின் எண்ணவுலகத்திலும் புரட்சிகர மாற்றம் நிகழும். அது ஒரு நெருக்கடியின் விளைவாக அமையும் பழைய சுமைகளிலிருந்தும் சுருக்கிடும். கருத்து பிம்பங்பகளிலிருந்தும் மீண்டு, தன் வாழ்வை முழுமைப்படுத்தும் பண்பு நிலையில் பெண் இயங்குவார்.


இன்றைய எமது கல்வியும் தொழில் முறைகளும் எமது வாழ்வின் அடிப்படைகளை மீளாய்வுக்குட்படுத்தாது, எமது மரபின்மீதும் நாம் நாளும் பிரச்சினைகளை எதிர்கொள்வதும் உண்டு. ஆய்வுக்கு உட்படுத்தாது இயந்திரத்தனமாக இந்நிலை தொடர்ச்சியாக வற்புறுத்துகிறது. எமது அன்றாட, நாம் வாழும் போராட்டவாழ்வின் இலக்கும் எளிமையும் அர்த்தமும் மேலானதாக இருக்கிறது. இது எப்படி சாத்தியமாகும். போராட்டத்தின் தேவைகளுக்கு சகலதும் சிந்திக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகிறது. காலத்தின் தேவையும் சூழலின் தேவையும் இங்கே புரிந்துகொள்ளப்பட்டு அதற்கான முறைகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால், வெளிச்சமூகத்தில் இத்தன்மை மிகவும் அரிது. அங்கே இதற்கான சந்தர்ப்பத்தை எமது புத்திஜீவிகளோ சமூகத்தொழிற்பாட்டாளர்களோ சிந்தனையாளர்களோ உருவாக்கவில்லை. காலத்தையும் சூழலையும் சிரத்தை பூர்வமாக அவர்கள் உணரவில்லை என்பதே இதன் பொருளாகும்.

காலத்துக்கும் சூழலுக்குமான கல்வியும் வாழ்க்கை முறையும் கருத்து உலகமும் உருவாக்கப்படாமை என்பது பெண்வாழ்வை தொடர்ந்தும் நெருக்கடிக்குள்ளேயே வைத்திருக்கின்றது. பெண்வாழ்வு குறித்தும் பெண்விடுதலை குறித்தும் யோசிக்கும்போது இவை குறித்தே நாம் அதிகமும் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# ஓயாத அ

**02-11-99 தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு**
**தமிழீழப் பிரதேசங்களிலிருந்து சிறீலங்கா ஆக்கிரமிப்பு இ**
**அலைகள் மூன்று உக்கிர வீச்சால் ஒட்டிசுட்டான் பிரதே**




## 03-11-99

தொடரும் ஓயாத அலைகள் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையணிகளால் அதிகாலை நெடுங்கேணிப் பிரதேசத்திலிருந்த இராணுவத் தளம் தாக்கி அழிக்கப்பட்டதோடு நெடுங்கேணி நகரம் மீட்கப்பட்டது.

## 05-11-99

மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் அமைந்திருந்த கருப்பட்டமுறிப்பு இராணுவத் தளம் மற்றும் ஒலுமடு இராணுவ முகாம்கள் தாக்கியழிக்கப்பட்டன மாங்குளம் மீட்கப்பட்டது.

## 06-11-99

மூன்றுமுறிப்பு, மன்னங்குளம், நைனாமடு, மதியாமடு ஆகிய பிரதேசங்களில் இராணுவம் நிலைகொண்டிருந்த முகாம்கள், மினிமுகாம்கள், தொடர் காவலரண்கள், மற்றும் காவலரண்கள் அழிக்கப்பட்டதோடு இப்பிரதேசங்கள் பூரணமாக விடுவிக்கப்பட்டன.

ஏ.9 நெடுஞ்சாலையில் 55, 56 படைப்பிரிவுகள் நிலைகொண்டிருந்த கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புளியங்குளம், கனகராயன்குளம் இராணுவத் தளங்கள் கைப்பற்றப்பட்டன.

## 08-11-99

மணலாறுப் பிரதேசத்தில் தனிக்கல்லு, சிலோன் தியேட்டர், கென்பாம் முதலான பாரிய இராணுவ முகாம்கள் உட்பட ஐந்து முகாம்கள் கைப்பற்றப்பட்டன.

## 18-11-99

12 மணித்தியால கடுஞ்சமரின் பின்னர் மன்னார் பிராந்தியத்தில் பள்ளமடு, பாலம்பிட்டி, பெரியமடு, மடு, தட்சணாமருதமடு, இரணைஇலுப்பைக்குளம் ஆகிய இடங்கள் மீட்கப்பட்டன. மடுறோட் வரை புலிகளின் படையணிகள் முன்னேறின.

## 11-12-99

வெற்றிலைக்கேணி கட்டைக்காடு இராணுவ கடற்படைக் கூட்டுத்தளம் அதிகாலை ஆரம்பமான தாக்குதலில் அழிக்கப்பட்டதோடு யாழ். நோக்கிய ஓயாத அலைகள் மூன்றின் மூன்றாம் கட்டம் ஆரம்பமானது.

## 17-12-99

பரந்தன் நகரப்பகுதி மீட்கப்பட்டது. தென்மராட்சி கோட்டத்தில் கேரதீவு கடற்படை முகாமும், அறுகுவெளி படைத்தளமும் கைப்பற்றப்பட்டன.

## 21-12-99

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இராணுவ முகாம் மற்றும் 54-6 பிரிகேட்டின் தலைமையகம் அமைந்திருந்த கோரக்கன்கட்டுக்குளம் இராணுவ முகாம் ஆகியன தாக்கியழிக்கப்பட்டன.

## 26.03.00

இரவு 9.00 மணிக்கு மாமுனைப்பகுதியில் வந்து தரையிறங்கிய ஓயாத அலைகள் நடவடிக்கைப் படையணிகளால் வத்திராயனுக்கு இடைப்பட்ட 14 கி.மீ இராணுவ வேலிகள் தகர்த்தெறியப்பட்டன.

## 27-0

முகமாலைக்கும் பளை
நெடுஞ்சாலையில் 4கி.மீ
ஆனையிறவு இயக்கச்சிப
நேரடித் தரை வழித் தொட

## 29-0


1500ற்கு மேற்பட்ட ப
மருதங்கேணி, தாளையடி
படைத்தளம் கைப்பற்றப்ப

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# லைகள் 3

**ர. பிரபாகரன் அவர்களின் நேரடி நெறிப்படுத்தலுடன் ணுவத்தை முற்றாக வெளியேற்றும் நோக்கிலான ஓயாத ம் மீட்கப்பட்டதோடு ஆரம்பமானது....**




## 0

ம் இடைப்பட்ட ஏ.9 ந்தி கைப்பற்றப்பட்டது. பெருந்தளங்களுக்கான துண்டிக்கப்பட்டது.

## 00

யினர் தங்கியிருந்த சம்பியன்பற்று கூட்டுப் து.

## 03.04.00

முகமாலையிலிருந்து முன்னேறிய ஓயாத அலைகள் படையணிகள் எழுதுமட்டுவாள் வரைக்கும் முன்னேறின. பளையிலிருந்து எழுது மட்டுவாள் வரையான பகுதிகள் முழுமையாக மீட்கப்பட்டன.

## 18.04.00

இயக்கச்சித் தளத்தின் வடபகுதி அரண்களான 541 சிங்க பிரிகேட் நிலைகொண்டிருந்த மாசார், சோரன்பற்று பிரதேசங்கள் மீட்கப்பட்டன.

## 18.04.00

மதியம் ஒரு மணிக்கு ஆரம்பமான இச்சண்டையில் ஏ.9 நெடுஞ்சாலையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த புதுக்காட்டுச்சந்தி கைப்பற்றப்பட்டது. வடமராட்சி கிழக்கில் மருதங்கேணி, தாளையடி, முகாவில் ஆகிய பிரதேசங்கள் மீட்கப்பட்டன.

## 19.04.00

பளைக்கும் இயக்கச்சிக்கும் இடைப்பட்ட 6 கி.மீ நீள ஏ.9 நெடுஞ்சாலை பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

## 22.04.00

15000 இராணுவத்தினர் தங்கியிருந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க இயக்கச்சி ஆனையிறவுப் பெருந்தளமும் 240 சதுர கி.மீ நிலப்பரப்பு நிறைந்த ஆனையிறவுப் பிரதேசமும் முழுமையாக மீட்கப்பட்டது.

## 30.04.00

ஏ.9 நெடுஞ்சாலையில் பிரதான நகர்களில் ஒன்றான பளை நகரப்பகுதி மீட்கப்பட்டது

## 10.05.00

தனங்கிளப்பு, அரியாலை, நாவற்குழி பிரதேசங்களில் நிலைகொண்ட இராணுவத்தினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. நாவற்குழிப் பாலம் மீட்கப்பட்டது அரியாலையூடாக நகர்ந்த புலிகளின் படையணிகள் மணியந்தோட்டம் பிரதேசத்தையும் மீட்டன.

## 11.05.00

தென்மராட்சிக் கோட்டத்தில் கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு ஆகிய பிரதேசங்களில் அமைந்திருந்த இரு இராணுவ முகாம்கள் தகர்க்கப்பட்டன.
யாழ் மாநகரை நோக்கிய நகர்வில் முதலில் அரியாலைப் பிரதேசம், பின்னர் கொழும்புத்துறை இறங்குதுறைப் பகுதி, ஆகிய பகுதிகள் மீட்கப்பட்டன.

## 16.05.00

யாழ் மாநகரசபை எல்லைப்பகுதிகளான பாசையூர், குருநகர் பிரதேசங்களில் இருந்த மினி முகாம்கள் மற்றும் தொடர்காவலரண்கள் எனபன அழிக்கப்பட்டன. தச்சன்தோப்பு, நாவற்குழிப்பகுதி இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்டன.

## 17.05.00

கைதடிச் சந்தியில் அமைந்திருந்த இராணுவத் தளம் பன்னிரெண்டு மணித்தியாலச் சமரின் பின்னர் விடுவிக்கப்பட்டது.

## 19.05.00

தென்மராட்சிக் கோட்டத்தில் மட்டுவில், சரசாலை பிரதேசங்கள் மீட்கப்பட்டன.

## 20.05.00

தென்மராட்சியின் தலைநகர் சாவகச்சேரி முழுமையாக மீட்கப்பட்டது.

ஓயாத அலைகள் 3 தொடரும்....

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழும் வாழ்வும்

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்"
என்றான் ஒரு புரட்சிக்கவி.
"பாடையிலே படுத்துறங்கும்
போதும் பைந்தமிழில் அழும் ஓசை
கேட்க வேண்டும்" என்றான் ஓர்
உணர்ச்சிக்கவி.
"தமிழுக்கும் அமுதென்று பெயர்.
அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு
நேர்" என்றான புதுவைக்கவி.
உண்மைதானே... தமிழ்... தமிழ்...
என்று தொடர்ந்து உச்சரித்துப்
பார்த்தோமானால் அமிழ்து...
அமிழ்து என்ற ஒலி நாவிலிருந்து
பிறக்கும்.
தமிழ்--
வல்லினம்,
மெல்லினம்,
இடையினம் என்று
மூவினம் கலந்து,
இயல்வளம்,
இசைவளம்,
நாடகவளம்
என்று மூவளம்
கண்டு,
காதல், வீரம், நீதி
என்ற தமிழ்
உணர்வுகளைத்
தன்னகத்தே
கொண்டு,
காலம்
வீறுகொண்டு
போர்க்கோலம்
கொண்ட
போதெல்லாம்,
வாளோடு நின்று
தன் வளம்காத்து,
வீரம் விளைவித்த
தமிழாகவும்
விளங்கி
வந்திருப்பது நம்
தமிழ்.
நம் தமிழின்
தோற்றம்தான்
என்ன?
எல்லா மொழிகளுக்கும் தோற்றம்
என்றவொன்று இருக்கையில்
தமிழ்மொழியின் தோற்றம்
எப்படியிருந்தது?
மனிதர்கள் மொழியோடு
தோன்றியவர்கள் இல்லை.
சைகைகளாலும், அர்த்தமற்ற
ஒலிகளாலும் தன்னைப்
பரிமாறிக்கொண்ட ஆரம்ப சமூகம்,
ஒலிகளுக்கு அர்த்தம் கற்பித்து,
அதைப்பேசி, பின் எழுத்துக்களாக்கி,
அதில் இலக்கியம் செய்து, பின்
இலக்கணம் கண்டு, காலத்தால்
அழியாத வளமிக்க மொழியாகத்
தமிழை ஆக்கியிருக்கின்றது என்றால்,
அதன் தோற்றம் எங்கே இருக்கிறது?
இந்த வினாவோடு ஆய்வுக்கரங்கள்
கடந்துபோன காலச்சுவடுகளை
நோக்கி நீண்டன.
கிறிஸ்துவுக்குப் பின் என்ற
காலஆரம்பத்தைக் கடந்து
கிறிஸ்துவுக்கு முன் என்ற
காலப்பகுதிக்குள் நீண்டன. ஆயினும்,
தாய்த்தமிழின் அடிச்சுவடுகளைத்தான்
காணமுடிந்ததேயன்றி
ஆரம்பச்சுவட்டைக்
காணமுடியவில்லை.
தேடிப்போன ஆயுவுக்கரங்களெல்லாம்
கூடிநின்று ஓர் முடிவெடுத்தன.
"கல்தோன்றி மண்தோன்றாக்காலத்து
முன்தோன்றிய மூத்ததமிழ்"
ஆய்வு செய்தவர்கள்
ஓய்ந்துபோனார்கள். தேடி ஓடியவர்கள்
வாடிப் போனார்கள்.
வரையறையின்றி வளர்ந்த தமிழின்
வயதைக் கணிக்க யாருக்கும்
முடியவில்லை. எனவேதான்
காலக்கணிப்பு இப்படி முடிந்தது.
கி. மு. 300ஆம் ஆண்டளவில்தான்
தமிழில் தற்போது கிடைக்கும்
பழம்பெரும் இலக்கியமாக
தொல்காப்பியம் தோன்றியது என்பது
ஆய்வாளர் கூற்று. தொல்காப்பியர்
கருத்துப்படி,
அகத்தியம் என்றொரு தாய்
இலக்கணம் தமிழுக்கு
இருந்திருக்கிறது. அதை எழுதியவர்
அகத்தியர் என்பது வரலாற்றுக்
குறிப்பு.
இலக்கணம் என்பது இலக்கியத்
தோற்றத்திற்குப் பின்தான் ஏற்படுவது
என்பது வரலாற்று நியதி.
அப்படியானால் அகத்தியத்திற்கு முன்
எழுத்து வளர்ச்சி அதற்கு முன் பேச்சு
வளர்ச்சி... இப்படியே
விரிந்துகொண்டு போகையில்,
கல்தோன்றிய காலம் வந்துவிட,
தமிழின் தோற்றம் பற்றிய ஆய்வு
இந்தளவோடு நின்று விட்டது.
சங்ககாலம்,
சங்கம் அமைத்துத் தமிழ்வளர்த்த
பண்பு மிக்கதோர் சமூகத்தின்
அற்புதமான காலகட்டம் சங்ககாலம்.
விண்ணோடும், முகிலோடும்,
மலையோடும், நதியோடும்,
அன்னைத்தமிழ்
சங்கமித்துப்போயிருந்த தங்கநிகர்
காலம் இக்காலம்.
திசைகளின் எல்லைகளைத்
தெரிந்திருக்காத அந்தக்
காலதேசத்தில், 'கணியன்
பூங்குன்றன்' என்ற ஒரு அரச கவிஞன்
அற்புதமாய் ஒரு பொதுமைக்
கருத்தைச் சொன்னான்.
"யாதும் ஊரே யாவரும் கேளீர்"
எல்லாம் எமது ஊர், எல்லோரும் நம்
உறவினர்கள்.
நமக்கு மண்ணிலும் எல்லைகள்
இல்லை. மனதிலும் எல்லைகள்
இல்லை என்று அழகாகச்
சொல்லியிருந்தான்.
கடல் கடந்த தேசமெல்லாம் இருக்கும்
கண்டங்களைக் கண்டறிந்த பின்பா
அவன் அப்படிச் சொன்னான்...?
இல்லை... அது அந்தக் கவிஞனின்
தீர்க்கதரிசனப் பார்வை.
இன்று உலகத்தில் தமிழன் இல்லா
நாடு இல்லை.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உலகின் பல்வேறு நாடுகளின் பல்லின கலாச்சார சூழல்களில் கணியன் பூங்குன்றன் வாக்குப்படி தமிழ்ச்சமூகம் வாழப் பழகிக்கொண்டிருக்கின்றது. அந்தக் கவிஞன் இன்றிருந்தால் அதைக் கண்டு பூரித்துப் புளகாங்கிதம் அடைந்திருப்பான். ஆனால்... அன்னைத்தமிழ் அந்தச் சூழலில் தளர்ந்து போகப்போகின்றாள் என்ற உண்மை இக்கவிஞனுக்கு அன்று தெரியாமற் போய்விட்டது.

மேலே எழுதப்பட்டவைகள் தமிழின் பெருமைகள் அல்ல. அப்படிக் கருதினால் சிற்றெறும்பு சிறுதுகள் சுமந்து இமயத்தை உயர்த்த எடுக்கும் முயற்சிக்கும்தான் இது சமனாகும். தான் பெற்ற நிறைவில் மிகச்சிறுகுறையேதுமற்ற பெரும் பெருமை கொண்டது நம் தமிழ்.

இந்த எழுத்துக்களின் நோக்கம், உலகளாவி வாழும் அழகுதமிழ் மாந்தருக்கு, தூசு படிந்திருக்கும் அவர்கள் தாய்வீட்டு நினைவுகளைத் தூசுதட்ட உதவமுடியுமா என்பதே! அவர்களுக்குள்ளே முடங்கிக்கொண்டிருக்கும் மொழி, கலாச்சார உணர்வுகளுக்கு புத்துணர்ச்சி எற்படுத்த முடியுமா என்பதே!

நாம் வசதியைத் தேடி இங்கு வரவில்லை. வாழக்கையைத் தேடி வந்தவர்கள். நிர்ப்பந்தங்களால் துரத்தப்பட்டவர்கள். உடைந்து சிதறிய தேங்காய்த் துண்டுகளாய் தேசங்கள் எங்கும் சிதறியவர்கள். அகதிகளாய் இங்கு வந்து விழுந்தபோது நாம் என்ன கொண்டு வந்தோம்? கற்றறிந்த தாய்மொழியையும், கவின் பெட்டகமான கலை, கலாச்சார பண்பாட்டையும் தவிர.

வந்த இடத்திலே இருந்தவர்களுக்கு சமமாக வாழவேண்டிய நோக்கில் கொஞ்சம் வசதி கிடைத்தது. பௌதீக சூழல் சில நாகரீகங்களை நமக்கு நிர்ப்பந்தித்தது. இவைகள் காலத்தின் கட்டாயம். தவிர்க்க முடியாது ஏற்றிருக்கின்றோம். ஆனால்... நாம் கைகளிலோ பைகளிலோ கொண்டல்ல; உயிரோடும் உடலோடும் கலந்து சுமந்து வந்த தமிழையும், கலாச்சாரத்தையும் சுமை எனக்கருதும் ஒரு சூழல் கருக்கட்டுவதையல்லவா நாம் இங்கு காணவேண்டியிருக்கின்றது.

நாம் இங்கு 'ஆல்'போல் செழித்து வளரலாம். ஆனால் நம் ஆணிவேர் இன்னமும் அந்தத் தமிழ் தேசத்திலேதான் இருக்கின்றது. தம்மை அசுத்தப்படுத்தி எம்மைச் சுத்தப்படுத்திய அந்தத் தமிழ்த்தேசக் காற்று இன்னமும் எமது பெயரை உச்சரித்துக்கொண்டிருக்கின்றது. நாம் வாசிக்க மறந்தாலும் அந்த மொழி நம்மை நேசித்துக் கொண்டுதானிருக்கின்றது.

உடலுக்குத் தலை சுமையென கழுத்து ஒருபோதும் கவலைப்பட்டதில்லை. பெண்ணுக்கு கரு சுமையென கர்ப்பம் ஒருபோதும் ஏற்க மறுத்ததில்லை. மலருக்கு மகரந்தம் சுமையென மரம் ஒருபோதும் பூக்க மறந்ததில்லை. ஆனால் மனிதர்கள் நாங்கள் மட்டும் இவற்றைச் சுமையென எண்ணி இறக்கிவிட இடம் தேடும் செயல்தான் நெஞ்சை நெருடுகின்றது.

இன்று மொறிசியஸ் தீவிலும், கயானா நாட்டிலும் வாழும் இந்தியர்களின் "திரிசங்கு" நிலை நாம் நோக்கவேண்டியதொன்றாகும். அவர்கள் தாய்மொழியையும் மறந்து, கற்ற வேற்று மொழியாலும் அங்கீகரிக்கப்படாத நிலையில் தமக்கென உண்டான தனித்தன்மைகளை இழந்து, தம்மைத்தாமே அடையாளப்படுத்த முடியாத நிலை, நாளை நம் சந்ததியினருக்கு ஏற்பட்டுவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு நமக்குத்தேவை.

இந்தப் பல்லின கலாச்சாரத்துக்குள் நம்மை அடையாளப்படுத்த நம்மிடம் இருக்கும் ஒரே சாதனம் மொழியும், நமது கலை கலாச்சாரப் பண்பாட்டு வடிவங்களுமே. அதையும் நாம் தவறவிட்டுவிட்டால் நாளை வேற்றினமக்கள் எப்படி எம்மை அடையாளப்படுத்தப் போகின்றார்கள்? பேச்சுமொழி ஆங்கிலமும், வெளிநாட்டுக் கலாச்சாரமும் நம்மை ஆக்கிரமித்து அதற்கு நாம் முழுமைப் படுத்தப்பட்டுவிட்டால், இங்குள்ள இனவாத அமைப்புகள் நம்மை ஏற்றுக்கொண்டுவிடுமா?

தமிழ், கலாசாரம் என்பனவற்றை மறந்துவிடப்போகும் நம் சந்ததியினருக்கு எற்படப்போகும் இனவாத எதிர்ப்புக்களுக்கு, எவ்வித தனித்தன்மையும் அற்ற நம் வழித்தோன்றல்கள் எப்படித் தாக்குப்பிடிக்கப்போகின்றார்கள்? ஆங்கிலம், வெளிநாட்டுக் கலாச்சாரம் அவர்களைக் காப்பாற்றாது. தமிழ், கலாச்சாரம், பண்பாடு என்ற வகையிலான ஒரு ஐக்கிய ஒருமைப்பாடே அவர்களுக்காகக் குரல் கொடுக்கும் ஒரு சக்தியாக இருக்கமுடியும்.

நாம் இங்கு வருகையில் கொண்டு வந்தவை இவைதான். நாம் ஒரு சந்ததிக்காக விட்டுவிட்டுப் போவதும் இவையாகவே இருக்கட்டும். நாளைகளில் அவர்களுக்காக நாம் சேர்த்து வைக்கப்போகும் பொருட்களைவிட அவர்களை வளர்த்து வைக்கும் விதமே, பிற்கால சமூக தலைநிமிர்விற்கு உறுதுணை யாகவிருக்கும். நாம் சிந்திப்போம். செய்வோம். பயனை அடுத்த தலைமுறை அனுபவிக்கட்டும்.

**-காப்பியாற்று காப்பியன்-**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர் மரபுவழித் தாயகக் கோட்பாடு

## -சிங்கள வரலாற்றாசிரியரின் சான்று-

யாழ்ப்பாண இராட்சியத்துடன் தமக்கு எவ்வித தொடர்பும் இல்லை என்று கருதியதாலேயே சிங்கள மன்னரோ அல்லது சிங்கள மக்களோ போத்துக்கேயப் படைஎடுப்பை எதிர்த்துப் போராடிய சங்கிலி மன்னனுக்கு உதவ முன்வரவில்லை எனக் கருத்து வெளியிட்டுள்ளார் கே. எம். டி. சில்வா எனும் சிங்கள வரலாற்று ஆய்வாளர். "சிறீலங்காவின் பிரிவுத் தத்துவம் வரலாற்று ஆய்வு" என்னும் வெளியீட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தமிழர் தாயகக் கோட்பாடுபற்றி தமிழர் எனச் சொல்லிக் கொள்ளும் பலரே தெளிவற்று இருக்கின்ற நிலையில் சிங்கள வரலாற்றாளர் மேற்படி கருத்தினை வெளியிட்டுள்ளார். 15ஆம் நூற்றாண்டில் இருந்து போத்துக்கேயரும், ஒல்லாந்தரும் இத்தமிழர் பிரதேசங்களை தமது ஆட்சியின் கீழ் தனிநிர்வாக அலகாகவே வைத்திருந்தனர். ஆனால் பிரித்தானியர் கோல் - புரூக் - கெமரன் ஆணைக்குழுவின் சிபார்சின்படி பலவந்தமாக தமது நலன்களுக்காக சிங்கள அரசுகளுடன் இணைத்து, ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். 1948ஆம் ஆண்டு சுதந்திரத்தின் பின் தமிழர் பிரதேசம் சிங்களவரின் காலனியாகவே மாற்றப்பட்டது. நிலப்பறிப்பின் மூலம் தமிழர் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். சிங்களவர்களிடம் ஆட்சிப்பொறுப்பு வழங்கப்பட்டு ஆறு மாதங்களிலேயே இந்தியத் தமிழர் வாக்குரிமை, பிரஜாஉரிமை என்பன பறிக்கப்பட்டன. தமிழ் மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். சிங்கள மொழி மாத்திரமே அரச மொழியாக செயற்படும் தனிச் சிங்கள மொழிச்சட்டம் 1956இல் உருவாக்கப்படடது. 1972இல் இதற்கு அரசயாப்பு அந்தஸ்து கொடுக்கப்பட்டது. பௌத்த சமயத்துக்கு அளவிற்கு மீறிய அந்தஸ்து கொடுக்கப்பட்டமை தமிழ் அரசியல் வாதிகளுடனான உடன்படிக்கை, பேரினவாதத்தின் எதிர்ப்பினால் கிழித்தெறியப்பட்டமை என்பனவே தமிழ் மக்கள் சுதந்திரத் தமிழீழத்தை ஸ்தாபிப்பதற்காக போராடும் நிலையை ஏற்படுத்தியது என பேராசிரியர் கே. எம். டி, சில்வா தெரிவித்துள்ளார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம்தொட்டே இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு அரசு ஒன்று இருந்தது. அதேவேளை இலங்கையில் சிங்களவர் வருகைக்குப் பின்னும் தமிழ் மன்னர்கள் சிலர் இலங்கை முழுவதையும் ஆண்டிருக்கிறார்கள். "தமிழர் தாயகம்" எனப்படும் பிரதேசத்தில் 13ஆம் நூற்றாண்டில் ஒரு தமிழர் இராச்சியம் தோன்றியுள்ளது. சிலாபம் முதல் கிழக்கே கும்புக்கண் ஆறுவரை பரந்த இலங்கையின் பரப்பில் மூன்றில் ஒரு பங்குகொண்ட பிரதேசத்தை தமிழர் ஆட்சி செய்தனர். 13ஆம் நூற்றாண்டில் இருந்து 17ஆம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாணத்தில் சுதந்திர தமிழ் அரசு இருந்ததை பேராசிரியர் சில்வா ஏற்றுக்கொண்டுள்ளார். எனினும் பல வரலாற்றாசிரியர்கள் இதனை மறுதலிப்பதினூடாக தமிழர்களின் மரபு வழிவந்த தாயகக் கோட்பாட்டை எதிர்க்கின்றனர். தமிழர் தாயகக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இதற்குக் காரணமாகும்.

13ஆம் நூற்றாண்டில் சோழர் படை எடுப்புக்கள் சிங்கள மன்னர்கள் மீது பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது. இப்படை எடுப்புகளின்போது வந்த ஒரு பகுதி வீரர்கள் வன்னி மற்றும் கிழக்குப் பகுதிகளில் பலமான சின்ன சின்ன அரசுகளை ஏற்படுத்தி தமிழர் இராட்சியத்தை விரிவுபடுத்தினர். 14ஆம், 15ஆம் நூற்றாண்டில் வடக்கு நோக்கி சிங்கள அரசுகளின் படைஎடுப்பு நெருக்கடிகளுக்கு சிற்சில வேளைகளில் உட்பட்டிருந்தபோதும் பலமான தமிழர் இராட்சியம் தொடர்ந்து இருந்ததை மறைக்கவோ அன்றி மறுக்கவோ முடியாதுள்ளது.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் புதிய புதிய முகங்கள் தமிழர் தாயகக் கோட்பாட்டை துடைத்தொழித்து இல்லாமல் செய்வதற்கு எடுக்கின்ற பகீரதப் பிரயத்தனங்களின் மத்தியில் எமது வரலாற்று சான்றுகளை, ஆவணங்களை பாதுகாப்பதிலும், ஆவணப்படுத்துவதிலும் நாம் ஒவ்வொருவரும் அக்கறைப்பட வேண்டியது எமக்குரிய வரலாற்றுக் கடமையாகும்.

-சஞ்சிகா-




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நம்பிக்கை நாற்றுக்கள்!



நம்பிக்கை நாற்றுக்களை!
நம் தமிழர் வரலாற்றை
நாலுவரி கவியாய் தருவேன் கேளீர்!
ஐந்நூறு ஆண்டுகளாக
நய வஞ்சகர்களுக்கு அடிமையாய் இருந்ததால்;
நலம் கெட்டோம்! நம்பிக்கை இழந்தோம்!
குறை கூறுவதே நம் குல நோயானது!

முதலில் மற்றவனைக் குறை கூறினோம்!
பின் அடுத்தவனைக் குறை கூறினோம்!
கடைசியில்;
தமிழ்ச்சாதி திருந்தாதென
நம்மையே நாம் குறை கூறினோம்!
விளைவு;
நாடிழந்தோம்! வீடிழந்தோம்!
அகதியாய் அவனியில் அலைந்தோம்!

கொலு கொலுத்த இனத்தை
கூட்டியள்ளி நம்பிக்கை தந்தான் எம் தம்பி!
தவளைப் பாய்ச்சலால்
பூநகரியில் நட்டனர் நம்பிக்கை நாற்றுக்கள்!
முல்லைத் தீவினை மீட்டபோது
அது முளைவிடக் கண்டோம்!
கிளிநொச்சி அடியில் அது கிளைவிடக் கண்டோம்!
ஓயாத அலைகளால் ஓடியோடி நீர்பாய்ச்சி
ஆனையிறவு பளையோடு அது தோப்பாகக் கண்டோம்!
நாவற்குழி, நாகர்கோவில்
பகை முடிக்கும் பலாலியென தொடரட்டும் நாற்றுக்கள்!

போத்துக்கேயனை இலங்கையில் கால்பதிக்க வைத்தவனே!
ஒல்லாந்தனே ஓடிப்போய் அழைத்து வந்தவனே!
ஆங்கிலேயனிடம் ஆட்சியை ஒப்படைத்தவனே!
இந்தியனையும் இலங்கைத்தீவில் இறங்க வைத்தவனே!
இனி யாரைக் கூட்டிவரப்போகின்றாய்?
இருபது நூற்றாண்டுகளாக இந்த தீவிற்குள் நீ கூட்டி வந்து
உன்னோடு நாமும் அடிமையானது போதும்!

வழி விடு! இது தமிழர் யுகம்!
எங்கள் தம்பியும் அவன் வழியுமே
எங்கள் நம்பிக்கை நாற்றுக்கள்!
வெற்றி வேற்று நாட்டான் தருவதல்ல; விளங்கிக் கொள்!
உன் விடிவும் எம்மிடந்தான் எழுதிக்கொள்!
இவை வெற்று வரிகளல்ல தமிழினத்தின் நம்பிக்கை ஊற்றுக்கள்!

*— கி.செ.துரை —*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# தமிழன் வா
# மண்ணுக்க
# என்றிருக்கட

அப்பு செவிவளைந்தானைத் தடவிக்கொடுத்துக்கொண்டே சுருட்டைப் புகைத்துக்கொண்டிருந்தார். அவருடைய முகத்தில் விழுந்திருந்த அதிகப்படியான சுருக்கங்கள் அவர் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதை எடுத் தியம்பின.

நவத்தின் குரலால் அப்புவின் சிந் தனை கலைந்தது.

"அப்பு என்ன கடும் யோசினையாக் கிடக்கு?"

"இவள் பவளத்தின்ரை பெட்டை யின்ரை ஞாபகம் வந்தது. அவளைப் பற்றி மட்டுமெண்டில்லை... இந்த எதிர் கால தமிழ் சந்ததியை நினைக்க எனக்கு ஒரே யோசினையாக் கிடக்கு" கிழவரின் குரலில் கவலை தொனித்தது.

"சிங்களவங்கள் பொருளாதாரத் தடை, மருந்துத்தடை அப்படி இப்பிடி யெண்டு திட்டம்போட்டு எங்கடை வள ரும் சந்ததியைப் படிப்படியா அழிக்கப் பாக்கிறாங்களடா... வளரும் பருவத் திலையே பூச்சி பிடிச்ச மிளகாய்ச்செடி மாதிரி கருகிப் போகுதுகளடா..." ஆற்றாமையோடு சொன்னார்.

"ஒழுங்கான சாப்பாடு இல்லாததாலை போசாக்கில்லாமலும் மருந்தில்லாத தாலை வருத்தத்தைக் குணமாக்க முடி யாமலும் எத்தினையோ பிஞ்சுகள் சாய்ஞ்சு போய்ச்சுதுகளடாம்பி..." தொடர்ந்து கூறினார்.

"அப்பு! நாங்களே ஒழுங்கா இருக்க முடியேல்லை... இதுக்குள்ளை எதிர் காலச் சந்ததி அது இது எண்டு அலட்டிக் கொண்டிருக்கிறியள்"

"டேய்! என்ரை காலத்து அரசியல் வாதியள் எங்கடை அலுவலை நாங்கள் பாத்தாக் காணும்... இப்போதைய பிரச் சனையைத் தீர்த்தாக்காணும் எண்டு சுயநலத்தோட சிந்திச்சபடியாத்தான் அப் போதைய பிரச்சனையையும் தீர்க்க ஏலாம இப்போதைய பிரச்சனைக்கு வழி கோலினவை கண்டியோ... அந்தத் தவறை இப்பத்தையான் சந்ததிவிடக் கூடாதெடா மோனை... வாழ வேண்டிய வயதிலை இந்தப் பிஞ்சுப் பெடிபெட்டை யள் வெடிச்சுக் காத்தோடை காத்தாக் கலைஞ்சுபோறது இதுக்காகவாடா... பதினையாயிரத்துக்கும் மேலை அந்தப் பிஞ்சுகள் காயாகாமல் விதையானது எதுக்காக...? இந்த இலட்சக்கணக்கான சனங்கள் சொந்த மண்ணிலேயே விலங் குகள்போலை இடம் மாறி இடம் பெயர்ந்து திரியிறது எதுக்காக? கோடிக் கணக்கான சொத்துக்களை இழந்து ஏதிலிகளாகத் திரியிறது எதுக்காக எண்டு நினைச்சாய்? வாழவேண்டிய வயசிலை தாலியைத் தொங்கவிடுற கழுத்திலை சயனைற் குப்பியளைத் தொங்கவிடுற பெண் பிள்ளையளைப் பாக்கேலையா...? அப்பு உரக்கச் சத்தம்போட்டு உணர்ச்சி வயப்பட்டுக் கூறியபோது ஆலமரத்தடி யில் ஒரு கூட்டமே கூடிவிட்டது. செவி வளைந்தான்கூட அப்புவின் குரல் உயர்ந்ததைக் கேட்டு உணர்ச்சிவயப் பட்டுவிட்டதுபோல உடல் சிலிர்த்தது.

நவம் உட்பட ஆலமரத்தடியில் நின்ற பல இளைஞர் யுவதிகளின் உள்ளத் தைத் தொட்டது அப்புவின் பேச்சு.

"அதுக்கு நாங்கள் என்னதான் செய் யிறது அப்பு... இங்கை இருக்கிற நாங் கள்தான் ஆண் - பெண் வேறுபாடில்லா மல் எல்லைப்படை வீரர்களுக்கான பயிற்சி எடுத்து ஓயாத அலைகள் மூண்டு மூலம் ஓங்கியடிச்சு சிங்கள இராணுவத்தைக் கிலிகொள்ள வச்சு பெடியளுக்கு உதவினனாங்கள்... இதை விட எங்களை என்ன செய்யச்சொல்லு றீங்கள்"

"ஓயாத அலைகள் இதோடை முடி யேல்லை கண்டியோ தொடர்ந்து அடிக் கும். இங்கை இருக்கிற நாங்கள் எல் லாரும் தம்பியவையோடை சேர்ந்து போராடவேணும்... தமிழன் வாழ்ந்தான் இல்லையெண்டா மண்ணுக்காகப் போராடி வீழ்ந்தான் எண்டிருக்கட்டும்... இது இந்த மண்ணிலை இருக்கிற வைக்கு மட்டுமெண்டில்லை வெளிநாடு களிலை இருக்கிற தமிழர்களுக்கும்

-ஆலமரத்தடி அப்பு-



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ..ந்தான் இல்லையேல் ..கப் போராடிவீழ்ந்தான் ..டும்

பொருந்தும் கண்டியோ..."

"அப்பு அவை சிற்றிசன் எடுத்திட்டினம்... இனியேன் நாட்டைப் பற்றிச் சிந்திக்கப்போகினம்..."

"டேய் நவம்... உனக்குமட்டும் சொல்லேல்லை... எல்லாருக்கும் தான் சொல்லுறன்... ரெண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த எங்களை எங்கடை சொந்த மண்ணிலையே வந்தேறு குடியள், கள்ளத் தோணியள் எண்டு சிங்களவன் சொல்லுறான். இப்பிடியிருக்க நேற்று அகதியாப் போன வேற்று நாட்டிலை வாங்கின சிற்றிசனுக்கு நாளைக்கு என்ன மதிப்பிருக்கப் போகுது... அந்த நாட்டவங்கள் நாளைக்கு எங்கடை சனத்தை என்னெண்டு சொலுவாங்கள் எண்டு நான் சொல்லத் தேவையில்லை... அதாலை எங்களுக்கெண்டொரு நாடு வேணும். நாங்கள் உயிரைக் குடுத்துப் போராடுவோம். வெளிநாட்டிலை இருக்கிற எங்கடை சனங்களும் தங்களை வருத்தி உதவி செய்ய வேண்டிய காலம் வந்திட்டுது கண்டியோ"

"அப்பு நீங்கள் வெளிநாட்டைப் பற்றிக் கதைக்கத்தான் எனக்கு ஞாபகம் வருகுது. நீங்கள் எப்ப வெளிநாட்டுப் புதினம் செல்ல வெளிக்கிட்டாலும் திடீர் திடீர் எண்டு கதை வேறை திசையிலை மாறிப்போகுது" நவம் குறைப்பட்டுக் கொண்டான்.

"நீ சொல்லுறதைக் கேக்க ஐரோப் பான்ற காலநிலைதான் நினைவுக்கு வருகுது"

"ஏனப்பு? "

ஐரோப்பாவின்ற காலநிலைதான் அடிக்கடி மாறுமடா"

"அது சரி அப்பு... அண்டைக்குக் கதைக்கேக்குள்ளை ஐரோப்பாவிலை எங்கடை சனங்கள் எப்பிடி உதவி செய்யினம் எண்டு கேட்டனான் ஞாபகமிருக்கோ? "

"ஓமோம்... வயசு போட்டுது எண்டு இப்பிடிக் குத்திக் காட்டாதையடா பெடி... விஷயத்துக்கு வா"

"ஐரோப்பா புதினம் சொல்லுறன் எண்டியள்"

ஐரோப்பா புதினம் என்றதும் செவி வளைந்தானும் தனது வளைந்த செவியை ஒருகணம் உயர்த்தி உசாரடைந்தது.

"நீ ஐரோப்பா சனத்தைப் பற்றிக் கதைக்கத்தான் ஒருவிஷயம் நினைவுக்கு வருகுது... ஐரோப்பாவிலை என்ரை பேத்தியின்ரை பிறந்தநாள் பார்ட்டி நடந்த அடுத்தநாள் நடந்த சம்பவம் ஒண்டு நினைவுக்கு வருகுது"

"என்ன சொல்லுங்கோவனப்பு" நவம் அப்புவை நெருங்கி உட்கார்ந்தான்.

"பிறந்தநாள் பார்ட்டி நடந்து அடுத்தநாள் என்ரை மகனும் மருமகளும் பிறதநாள் கொண்டாட்டம் பற்றி மாறி மாறிப் புளுகிக்கொண்டிருந்தினம்... பார்ட்டிக்கு ஐந்நூறு பேர்வந்தவையாம். சாப்பாடு, படம், வீடியோ, மண்டபம் உட்பட எல்லாமாக ஐயாயிரம் டொலருக்குக் கிட்ட முடிஞ்சுதாமெண்டு கணக்குப் பாத்துக் கொண்டிருந்தினம்"

"அப்பு ஐயாயிரம் டொலர் எண்டா இலங்கைக் காசுக்கு எவ்வளவு வருமப்பு?"

"மூன்று இலட்சம் ரூபாய்க்குமேலை இருக்கும் நவம்"

நவத்திடமிருந்து நீண்ட பெருமுச் சொன்று வெளியேறியது.

"அதிலை அரைவாசியெண்டாலும் மிச்சம் பிடிச்சு அனுப்பியிருந்தால்... இந்த மருந்தில்லாமச் சாகிற சனத்திலை ஐஞ்சு உயிரை எண்டாலும் காப்பாற்றலாம்"

"நவம் நான் கதைக்கேக்கை இடையாலை இடையாலை கதையாதை... பிறந்தநாள் கொண்டாட்டம் பற்றி அவையள் மாறி மாறிப் புளுகிக்கொண்டிருக் கேக்கை ஆரோ கதவிலை தட்டுற சத்தம் கேட்டுது... மருமகள்தான் எழும்பிப் போய் கதவிலை இருக்கிற சின்ன ஓட்டைக்குள்ளாலை பாத்தா"

"ஏனப்பு அவேன்ரை கதவை அவை திறக்கிறதுக்கு என்ன பயம்? இஞ்ச தானே ஆமிக்காரன் அது இதெண்டு பயம்"

"டேய் நவம்! நாங்கள் முன்னம் வீடே பூட்டுறேல்லையே அவ்வளவு சுதந்திரம் இருந்துது... அங்கை எல்லாம் சுதந்திரம் இருக்கிறமாதிரித்தான் தெரியும்"

"அப்ப சுதந்திரம் இல்லை எண்டி றீங்களோ...?" நவம் ஆவலோடு கேட்டான்.

"அங்கை எங்கடையாக்கள் இருக் கிறது வீட்டிலை இல்லை... ஆடம்பர சிறைச்சாலையளிலை... மருமகள் ஓட்டைக்குள்ளாலை பாத்திட்டு என்ரை மகனிட்டை வந்து காதுக்குள்ளை ஏதோ குசுகுசுத்தாள்... அவனோ முளுசுறான். இதென்னடா கூத்தாக் கிடக்கு எண்டு நானும் போய் அந்தச்சின்ன ஓட்டைக் குள்ளாலை பாத்தன்... எங்கடையாக் களின்ரை முகம் போலை கிடந்தது... பின்னை நான் கதவைத்திறந்தன்... நான் வணக்கம் சொல்லாமலே அவையள் வணக்கம் சொல்லிச்சினம்"

"எட! அப்ப ஐரோப்பாவில வணக்கம் நன்றி எண்டு சம்பிரதாயங்கள் எல்லாம் இருக்கெண்டிறியள்"

"சும்மா சொல்லப்படாது... அநேகம் பேர் ஒழுங்காத் தமிழ் கதைக்கினமோ இல்லையோ வணக்கம் சொல்லுவினம்... அதிருக்கட்டும் "வணக்கம் பெரியவரே" எண்டு சொன்னவுடனை நானும் பதில் வணக்கம் சொன்னன்... அவையள் நாங்கள் தமிழர் ஒருங்கினைப்புக் குழுவில இருந்து வந்திருக்கிறம்... உங்களோடை கொஞ்சம் கதைக்கலாமோ எண்டு பணிவோடை கேட்டிச்சினம்... எனக்கு அவையைப் பாத்தவுடனை இங்கை இருக்கிற எங்கடை தம்பியவையைப் பாத்த மாதிரிக் கிடந்துது... அப்ப நான் உங்களை ஆர் எண்டு எனக்கு விளங்கேல்லை எண்டு கேட்டன். அவை சொன்ன பதிலிலை இருந்து நான் ஊகிச்சது சரிதான் எண்டது எனக்கு விளங்கிப் போச்சுது"

"அங்கை அப்பு..." நவம் எழுந்து கைகாட்டிய திசையில் பவளத்தின் இளைய மகள் ஓடிவந்துகொண்டிருந்நாள்.

அப்புவும் பதைத்துப் போனவராக எழுந்தார்.

"அக்கா ஆஸ்பத்திரியிலை... அக்கா ஆஸ்பத்திரியிலை..." அந்தச் சிறுமியின் வார்த்தைகளை அழுகை விழுங்கிக் கொண்டது.

அப்பு அந்தச் சிறுமியின் கையைப் பற்றிக்கொண்டு வைத்தியசாலையை நோக்கி வேகமாக நடக்கலானார். செவி வளைந்தானும் அவர்களைத் தொடர்ந்து ஓடிற்று.

மீண்டும் வருவார்...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# இந்தியாவின் நேச சக்தி தமிழீழம்

## -தமிழீழ ஆதரவாளர் வைகோ-

இலங்கைத் தீவில் தமிழர்களுக்கென்று நாடு அமைவது அத்தியாவசியமான ஒன்று. அதனையிட்டு இந்தியாவில் இருந்து தமிழ்நாடு பிரிந்து சென்றுவிடும் என்று பயப்படுவது அபத்தமானது. தமிழீழத்திற்காக நானும் எனது கட்சியினரும் என்றும் எங்கும் ஓங்கிக் குரல் கொடுப்போம் என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழின உணர்வாளருமான திரு. வைகோ அவர்கள் தெரிவித்தார். கடந்தவாரம் பிரபல இந்திய ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் வழங்கிய பேட்டியின் முழுவிபரமும் வருமாறு.

இனி வருங்காலத்தில் தமிழீழம் அமையும் இது வரலாற்று நியதி. ஈழம் எப்போதும் இந்தியாவின் நேச சக்தியாகவே இருக்கும். ஈழத் தமிழர்கள் இலங்கைத்தீவின் பாரம்பரியக் குடிகள். இலங்கைத்தீவில் சிங்களவர்களுக்கு என்ன உரிமை உள்ளதோ அதே போன்று ஈழத் தமிழர்களுக்கும் உண்டு. சிலர் இந்தியாவிலிருந்து 18 ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் பெருந்தோட்ட வேலைகளுக்கு சென்ற தமிழர்களின் வரலாற்றோடு ஈழத் தமிழரின் பிரச்சனையை ஒப்புநோக்குகின்றார்கள். இது தவறானது. இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம்.

கடந்த இரு தசாப்தங்களாக சிறீலங்கா அரசு ஈழத்தில் தமிழர்களை வதைத்து வருகின்றது.

அப்போதெல்லாம் இந்தியாவைச் சட்டைபண்ணாத சிறீலங்கா இப்போது புலிகள் மேலோங்கி நிற்கின்ற வேளையில் இந்தியாவிடம் உதவி கேட்கிறது. யாழ். குடாநாட்டில் சிக்கியுள்ள 30,000க்கு மேற்பட்ட படையினரை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கே இவ் உதவியைக் கோருவதாகக் கூறியுள்ளது சிறீலங்கா அரசாங்கம். தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் குடாவிலிருந்து பாதுகாப்பாக சிறீலங்காப் படையினர் வெளியேற யுத்த நிறுத்தம் செய்யத் தயாரெனக் கூறியுள்ள போதிலும் அதற்கு சிறீலங்கா அரசதரப்பு மறுத்துள்ளது. இதிலிருந்து சிறீலங்கா அரசிற்கு தமிழர் பிரச்சனையை சமாதானமாகத் தீர்ப்பதற்கு தயாரில்லை என்பதும், தற்போதய அலறல் எல்லாம் தனது படைகளைப் பலப்படுத்தி போரைத் தொடர்வதற்கே என்பதும் இப்போது தெளிவாகியுள்ளது.

இந்தப் பிரச்சனைக்கு ஈழமே தீர்வு



இனி வருங்காலத்தில் தமிழீழம் அமையும் இது வரலாற்று நியதி

ஆனால் நாங்கள் தற்சமயம் மத்திய அரசிடம் இது சம்மந்தமாக எதுவும் கோரமாட்டோம். பாக்கிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமிருந்து பெருந்தொகை ஆயுதங்களை இறக்கி வைத்து சிறீலங்கா அரசு தமிழரழிப்பு யுத்தத்திற்கு தயாராகி வருகின்றது. இந்நிலையில் இந்தியா ஒருபோதும் எவ்வித உதவியையும் சிறீலங்காவிற்கு வழங்கக் கூடாது. முன்னர் இருந்த காங்கிரஸ் அரசு மறைமுக உதவிகளை சிறீலங்கா அரசிற்கு வழங்கி வந்தது. இது போன்ற காரியங்களை தற்போது வாஜ்பாய் செய்யமாட்டார்.

ஈழத் தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையானது ஆயுதப்போராட்டத்தோடு ஆரம்பமானதல்ல. ஆரம்பகாலங்களில் முன்னெடுக்கப்பட்ட அறவழிப் போராட்டங்கள் கொடூரமாக சிங்கள ஆட்சியாளர்களால் அடக்கப்பட்ட காலத்திலேயே தனிநாட்டுக்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

1957, 1965களில் தந்தை செல்வநாயகம் அவர்களுடன் சிங்கள ஆட்சியாளர்கள் செய்த ஒப்பந்தங்கள் அனைத்தும் கிழித்தெறியப்பட்டன. 1987இல் இடம்பெற்ற இந்தியா சிறீலங்கா ஒப்பந்தத்தினால் பலனைடந்ததும் சிங்களவரே. இப்போதய சிங்கள ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் தீர்வுப்பொதியும் தமிழர்களுக்கு உரிமை எதனையும் தருவதாக இல்லை.

1995இல் யாழ் குடாநாட்டில் தமிழர்கள் பாரிய இடப்பெயர்வைச் சந்தித்து அழிவுகளை சந்தித்த வேளையில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை பாராமுகமாக இருந்தது. அப்போது தமிழ்நாட்டு மக்கள் அனுப்பிய மனிதாபிமான உதவிகள் யாவும் தடுத்து நிறுத்தப்பட்டன. தற்போது சிறீலங்காப் படையினருக்கு உதவுவதற்கு இந்தியப்படைகள் செல்லுமாயின் தமிழக மக்கள் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்.

தமிழீழத்திற்காக குரல் கொடுப்பது ஒவ்வொரு தமிழனதும் கடமை. நாங்கள் எப்போதும் ஈழத் தமிழர்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆதரிப்போம்.

என்றும் தமது பேட்டியில் குறிப்பிட்டிருந்தார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலை வேண்டி

காற்றோடு கை கோர்த்து
ஊர்க்கோலம் போகின்ற
மகரந்தத் துகள்களுக்கு
என் நாசித்துவாரமும்
பாதையாகிப் போனதில்
தொண்டைக் குழிவரை
மசமசத்தது

"அக்கா!
சித்திரைக்குப் பொங்கியாச்சே?"
பாதையில் ஒரு தமிழன்
பாசமாய் கேட்டான்

"... ம் ம் ம்..."
காலைப் பரபரப்பில்
பாணைக் கடிக்கவே
மறந்தேன் என்றால்
நம்புவானா...!

பாதி இரவில் விழித்திருந்து
ஊரில் வாழும் உறவுக்காய்
அழுதேன் என்றால்
நம்புவானா...!

கற்தரையில் எம்மவர்
நித்திரை கொள்வதை
ஊர்க்கடிதம்
சொன்னதில் தொடங்கி
இந்திய வல்லூறுகள்
எம்மவரை
உயிர் வதம் செய்வதில்
தொடர்ந்து

செம்மணிப் புதைகுழியில்
எம் பெண்மணிகள்
புதைகுழிகள்
தொடர்வது வரை

சத்தியமாக நான்
சித்திரைக்கு
பொங்கவில்லை என்றால்
நம்புவானா...!

"ஓம் தம்பி பொங்கியாச்சு"

என் பொய்யில்
முகம் மலர்ந்து
முன்னேறிப் போறவனும்
மூக்கைத்தான் தேய்க்கிறான்
கண்களையும் கசக்குகிறான்

அழகிய மலர்களின்
நுண்ணிய மகரந்தங்களுக்கு
இவன் மூக்கும் பலிதானோ...!

காற்றோடு கை கோர்த்து
ஊர்க்கோலம் போகின்ற
மகரந்தத் துகள்களிடமிருந்தாவது
அந்நிய மண்ணில்
அடைக்கலம் தேடும்
எங்கள்
மூக்குகளுக்கும் கண்களுக்கும்
விடுதலை வேண்டுமென
இயற்கையை வேண்டிநின்றேன்.

- சந்திரவதனா
ஷா - ஜேர்மனி


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


வியட்நாமிய தலைநகருக்குள் வெற்றிகரமாக நுழையும் வியட்கொங் படையினர் 30.04.1975

# வியட்நாம் ஒன்றுபட்ட மக்களின் தேசம்

## சுதந்திரம் அடைந்து 25ஆம் ஆண்டு நிறைவு

கிழக்காசியாவின் நெற்களஞ்சியம் எனப்படும் வியட்நாமிலிருந்து ஆக்கிரமிப்பு சக்திகள் விரட்டியடிக்கப்பட்டு இம்மாதம் 30ஆம் திகதியுடன் 25 வருடங்களாகின்றது. 30ஆம் திகதி ஏப்பிரல் 1975 ஆம் ஆண்டு அமெரிக்க, பிரான்சிய ஆக்கிரமிப்பாளரின் கூட்டுக்கைப்பொம்மையாட்சியாளரின் கட்டுப்பாட்டிலிருந்த சைகோன் தலைநகரம் (ஹோ சி மின் நகரம் தற்போதய பெயர்) வியட்கொங் தேசபக்த படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அந்நியரினால் துண்டாடப்பட்ட வியட்நாம் மீண்டும் வியட்நாமிய மக்களதும், வியட்நாமிய கம்யூனிஸ்ட் கட்சியினால் அமைக்கப்பட்ட வியட்கொங் கொரில்லாக்களினதும் அயராத முயற்சியினால் ஒன்றிணைக் கப்பட்டு விடுதலையடைந்தது.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் காலனித்துவ ஆசைகொண்ட பிரான்சிய பேரரசனான மூன்றாம் நெப்போலியன் தென் கிழக்காசியப் பிராந்தியங்கள் மீது தனது கவனத்தை திருப்பி பட்டுக்கும், அரிசிக்கும் பேர் போன வியட்நாமை பிரான்சின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தான். ஒன்றுபட்ட வியட்நாமை கைப்பற்றிக் கொண்ட பிரான்சியர், வியட்நாம் ஒன்று பட்டிருப்பது எதிர்காலத்தில் தமக்கு ஆபத்தானது எனக்கருதி அதனை மூன்றா கத் துண்டாடினர்.

சைகோனை தலைநகராகக் கொண்ட தென் வியட்நாமை கொச்சின் சீனா என்ற பெயரில் தமது நேரடி கொலனியாகவும். வடக்கு மற்றும் மத்திய பகுதிகளான வியட்நாமிய பகுதிகளை ரொங்கின், அனாம் என்று இரு பிரதேசங்களாக்கி தமது கட்டுப்பாட்டிலிலுள்ள பாதுகாப்பு பிரதேசங்களாக்கினர்.

வியட்நாம் நீண்டகாலமாக அந்நியர் அடக்குமுறைகளுக்குள் சிக்குண்டு தவித்தது. கி.மு 39ஆம் ஆண்டிலிருந்து கி.பி 939 வரைக்கும் வியட் இன மக்கள் மீது சீனர்கள் அதிகாரம் செலுத்தினர். பின்னர் மீளவும் ஆட்சி செய்ய வந்த சீனர்களை 15ஆம் நூற்றாண்டில் மீனவர் தலைவரான லீ லோய் தலைமையில் திரண்ட மக்கள் விரட்டியடித்தனர். சில நூற்றாண்டுகள் மாத்திரம் சுதந்திரக் காற்றைச் சுவாசித்த வியட்நாம் மக்கள் மீளவும் டச்சுக்காரரின் ஆக்கிரமிப்பிக்குள்ளாகினர்.

இறுதியாக வியட்நாமைச் சுரண்ட வந்த பிரான்சியரை விரட்ட பல்வேறு அமைப்புக்கள் வியட்நாமிய மக்களிடையே கருக் கொண்டு கிளர்ந்தெழுந்து போராடின. 1885 கான் வுங் (Can Vuong ) தலைமையிலான முடியாட்சி முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பிரான்சிய இராணுவத்தால் திட்டமிட்ட முறையில் ஒடுக்கப்பட்டது.

பிரான்சியரின் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போரடிய மக்களுக்கு உறுதியான வழிகாட்டியான ஹோ சி மின் வீரம் செறிந்த விடுதலைப்போரட்டத்தை நிதானமாக ஆனால் உறுதியாக வழிநடாத்தினார். 1890ஆம் ஆண்டு வைகாசி மாதம் 19ஆம் திகதி வியட்நாமின் அழகிய கிராமங்களில் ஒன்றான கொங்சூவில் ஏழைப் பள்ளி ஆசிரியரின் மகனாக பிறந்தார். முடியாட்சி வியட்நாமின் தலைநகர்களில் ஒன்றான கூயில் தனது மேற்படிப்பை மேற்கொண்டார். பல்வேறு நாடுகளுக்கு சென்று விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டினார். 1925ஆம் ஆண்டு யூன் மாதம் வியட்நாம் இளைஞர் முன்னணி என்ற அமைப்பைத் தோற்றுவித்து விடுதலையை போராட்டத்திற்கான ஆக்கபூர்வ முயற்சிக்கு அத்திவாரமிட்டார். இதுவே வியட்கொங் விடுதலைப்படைக்கு முன்னோடி அமைப்பாக அமைந்தது. Ngugen Sinh Chung என்ற இயற்பெயரைக் கொண்ட ஹோ சி மின் பின்னரே தேசத்தின் பிதா என்று பொருள்படு முகமாக ஹோ சி மின் என்று வியட்நாமிய பாமர மக்களால் அழைக்கப்படலானார்.


1941ஆம் ஆண்டு நாடு திரும்பிய ஹோ சி மின் பிரான்சியரை நாட்டைவிட்டகற்றும் படை நடவடிக்கை களை விரைவுபடுத்தினார். 1944இல் திடமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அரசாங்க நிர்வாக முறைமையுடன்கூடிய வியட்நாமிய


வியட்நாமின் தந்தை ஹோ சி மின்
1890.5.19 - 1969.9.3

தேசிய இராணுவம் அமைக்கப்பட்டது. இதனிடையே ஒரே சந்தர்ப்பத்தில் நீண்ட கால ஆக்கிரமிப்பாளரான பிரான்சியருக்கும், புதிதாக படையெடுத்த யப்பானியருக்கு எதிராக பலமான எதிர்ப்பை வெளிப்படுத்தி வியட்நாமிய மக்கள் போராடினர். 1945 செப்டெம்பர் 2இல் ஹனோய் நகரபந்துங் சதுக்கத்தில் பலநூற்றாண்டு காலம் அடிமையாக வாழ்ந்த வியட்நாமிய மக்கள் ஹோ சி மின் தலைமையில் சுதந்திரப் பிரகடனம் செய்தனர். வியட்நாமிய மக்களின் சுதந்


www.tamileelamarchive.com


தமிழீழ ஆவணக் காப்பகம்




# தியன் பியன் பூ
# Dien Bien Phu

## பிரான்ஸ் படைகளின் பெருந்தளத் தகர்ப்பு நவம்பர் 1953- மே 1954

ஒப்பரேசன் கஸ்டோர்( Operation Castor) எனப் பெயர் சூட்டப்பட்ட படைநடவடிக்கையை ஆரம்பித்த பிரான்சுத் துருப்புக்கள் 20-11-1953இல் வியட்நாமிய விடுதலைப்போராளிகளின் வழங்கலை முடக்கும் நோக்கில் சிமோன் மற்றும் நட்சா பிரதேசத்தில் தரையிறங்கி தியன் பியன் பூவில் பெருந்தளமிட்டுக் கொண்டனர். 1954 மார்ச்சில் ஜெனரல் ஜியாப் அவர்களின் தலைமையிலான வியட்நாம் விடுதலைப்படையினரின் தாக்குதலுக்குள்ளானது.




### Gabrielle - Béatrice
### முகாங்கள் தகர்ப்பு

**13.03.1954- பி.ப 5.00** வியட்நாம் படையினர் பேற்றைஸ் தாக்குதல் ஆரம்பமானது.

**14 மார்ச் -** பேற்றைஸ் தளம் வீழ்த்தப்பட்டது.

**15 மார்ச் -** வியட்நாமின் படையினரின் தாக்குதலில் காபிரியல் முகாமும் வீழ்ந்தது.

### Dominique, Eliane
### இராணுவப் பகுதிகள் மீதான தாக்குதல்

**17 மார்ச்** வியட்நாம் படைகள் டொமினிக்கு, எலியானே பகுதிகளை நோக்கி முன்னேறின.

**30 மார்ச்** டொமினிக்கு, எலியானே பகுதிகள் வியட்நாமிய 312,316 இலக்க படையணிகளின் தாக்குதலுக்கு உள்ளாகின.

**31 மார்ச்** பிரான்சியர் இப்பகுதியை மீளக் கைப்பற்றிக் கொண்டனர்.

### Isabelle முகாம் தகர்ப்பு

**30 மார்ச் - 1 ஏப்பிரல்** வியட்நாம்படையினர் கேணல் லாலன்டே தலைமையிலான பிரான்சிய படையணிகள் தங்கியிருந்த இசபெல் முகாம் தகர்க்கப்பட்டது. முற்று முழுதாக முகாம் தகர்ப்பில் வியட்நாம் படையினர் வெற்றி பெறவில்லை.


**2 மே-** இசபெல் முகாம் கடுமையான எறிகணைத் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டது.

### இறுதிக் கட்டத் தாக்குதல்

**3 மே -** வியட்நாம் அணிகள் கூகுற்றே, கிளாவோடின் பகுதி மினி முகாம்களை கைப்பற்றிக் கொண்டன.

**6 மே -** எலியானே தொடர் அரண்கள் கைப்பற்றப்பட்டன. இசபெல் மத்திய பகுதிகள் மீளவும் பிரானஸ் படைகள் ஆக்கிரமித்துக்கொண்டனர்.

**7 மே -** பிரான்சிய பிரிகேடியர் ஜெனரல் டு காஸ்ரறிஸ் தமது படைகளையும் சரணைடையும் படி அறிவித்தார். இரவு 10.00 மணிக்கு கேணல் லாலன்டேயின் படையினரும் இசபெல் பகுதியிலிருந்து பின்வாங்கினர் .




பிரெஞ்சு நிலைகள்

பிரெஞ்சுப் படைகளின் தாக்குதல்

வியட்நாமியரின் தாக்குதல்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திரப் பிரகடனத்தை வியட்நாமின் வளங்களைச் சுரண்டி ருசி கண்ட பிரான்ஸ் அங்கீகரிக்கவில்லை. அத்தோடு மீளவும் தனது நிர்வாகத்தை அமுல் படுத்த முற்பட்டது.

எட்டு ஆண்டு காலம் பிரான்சியரை வியட்நாமை விட்டு வெளியேற்றும் யுத்தத்தில் உக்கிரமாக வியட்நாமியர் ஈடுபட்டனர். ஜெனரல் ஜியாப் தலைமையிலான வியட்கொங் படையணி களால் 1954 மே 7ல் வியட்நாமிலிருந்த மிகப்பெருந் தளமான தியன் பியன்பூ தளம் முற்றாக தாக்கியழிக்கப்பட்டது. வட வியட்நாமை விட்டு பிரான்சியர் முற்றாக விரட்டப்பட்டனர்.

இதன் பின்னர் 1954 யூலை 22 இல் ஜெனிவாவில் ஐ.நா மத்தியத்துவத்துடனான ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன் பிரகாரம் 17 வது சமாந்திரக்கோட்டை மையமாக வைத்து வியட்நாம் இரண்டாகத் துண்டாடப்பட்டது.



வியட்கொங்கின் படையணிகளின் T 54 யுத்த தாங்கி சேற்று வழியினூடாக மக்கள் உதவியுடன் களமுனைக்கு நகர்த்தப்படுகின்றது.

இதற்கு மூலகாரணமாக இருந்தது அமெரிக்காவே. தென் வியட்நாமில் அமெரிக்க சார்பு பொம்மை அரசொன்று நிறுவப்பட்டது. இது வெறும் தற்காலிக ஏற்பாடு தான் வெகுவிரைவில் இருநாடுகளும் இணைக்கப்படும் என்று ஐ.நா முன்னிலையில் அமெரிக்கத் தரப்பால் உறுதி கூறப்பட்ட போதிலும் இவை எதுவுமே நடைபெறவில்லை. அமெரிக்காவினால் நியமிக்கப்பட்ட பொம்மை அரசின் சனாதிபதியான நுகோ திங் டியெம் தனது அரசைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த சம்மதிக்கவும் இல்லை. நிலபிரபுத்துவ கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த அமெரிக்க சார்பு டியெமினால் தென் வியட்நாமிய ஏழை விவசாயிகளின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கமுடியவில்லை. மாறாக அவர் தமது குடும்ப நலன்களை மாத்திரம் கவனித்துக் கொண்டார்.

தென் வியட்நாமிய மக்கள் தமது விடிவிற்காவும் தமது சகோதர்களுடன் சேர்ந்து வாழவும் தேச விடுதலை முன்னணி (வியட்கொங்) என்ற பெயரில் அமைப்பொன்றைத் தொடங்கி பொம்மை அரசை அகற்றும் போரைத் தொடங்கினர். வெகுசன மக்கள் விடுதலைப்போராட்டத்தின் முன் முகங்கொடுக்க முடியாத பொம்மையாட்சியாளர் டியெமை அமெரிக்க சார்பு இராணுவகுழு படுகொலை செய்தது. தொடர்ச்சியான மக்கள் எழுச்சிப் போராட்டத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாத இராணுவ ஆட்சியாளருக்கு ஆதரவாக. அமெரிக்க இராணுவத்தினர் வியட்நாமில் இறக்கிவிடப்பட்டனர். வியட்நாமிய மக்கள் இராணுவம் இறுதியாக தமது தாய் மண்ணை அடிமைப்படுத்த வந்த அமெரிக்கர்களுக்கு எதிராகவும் வீரம் செறிந்த போராட்டமொன்றை முன்னெடுத்தது.

## வெற்றிக்கு வித்திட்ட தளபதி ஜியாப்



வியட்நாமிய ஜெனரல் வோ நியூ கியன் ஜியாப் (1912–)

வியட்நாமிய விடுதலைக்காக முதலில் பிரன்சியருக்கு எதிராகவும் பின்னர் அமெரிக்கருக்கு எதிராகவும் இறுதியில் வியட்நாமின் ஒருமைப்பாட்டிற்காக தென்வியட்நாம் படைகளுக்கு எதிராகவும் வெற்றிகரமாக வியட்நாமியரை வழி நடாத்தியவர். வியட்நாமிய விடுதலைப் படையணிகளால் வெற்றி கொள்ளப்பட்ட தியன் பியன் பூ பெருந்தளக் கைப்பற்றுகை தொடக்கம் பெப்ரவரி 1971இல் தொடங்கப்பட்ட அமெரிக்கரை வெளியேற்றும் நோக்கிலான லாம் சொன் 719 நடவடிக்கை வரையும் இவரின் நேரடிவழிகாட்டலிலும் திட்டமிடலிலுமே நடைபெற்றன. பள்ளி ஆசிரியராக இருந்த ஜியாப் பிரான்சியரின் ஒடுக்கு முறைகளால் போரளியானார். ஹோ சி மின்னின் தலைமையை ஏற்று போரியற்கலையின் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியவர். உலகின் மிகப்பெரிய வல்லரசு நாடுகளிடமிருந்து வியட்நாமை மீட்ட ஜெனரல் ஜியாப் இன்று பொது வாழ்விலிருந்து ஒதுங்கி தமது இளைய தலைமுறைக்கு இடம் கொடுத்து வழி காட்டுகிறார்.



## உலகை உருக்கிய நிழற்பட

அமெரிக்கப் படைகளின் நேபாம் குண்டு தாக்குதலில் அகப்பட்டு காயங்களுடன் ஓ கின்ற கிம் புக் (Kim Phuc)சிறுமியின் நிழற்பட வியட்நாம் போர் தொடர்பான நிழற்படங்களில் உலகை உலுக்கிய படமாகும்.

இப்புகைப்படம் 8/6/1972 ஆண்டு கிம் ஒன்பது வயதாக இருக்கும் பொழுது அச் சிறுமியின் வா வில் இடம்பெற்ற துயரச் சம்பவமாகும்.

இப்பொழுது கிம் புக் வியட்நாமிற்கான ஐ.நா கல்



www.tamileelamarchive.com


சிறைப்பிடிக்கப்பட்ட கூலிப்படையினரை காவல் காக்கும் வியட்கொங் பெண் போராளி.

வியட்கொங் படைகளின் வீரமிகு தாக்குதலின் முன் ஈடுகொடுக்கமுடியாத அமெரிக்க அரசு தனது விமானங்கள் மூலம் வடவியட்நாம் வயல்கள், தொழிற்சாலைகள் மீது தொடர் விமானக் குண்டுத் தாக்குதல்களை (Carpet Bomping) நடத்தியது. வியட்நாமிய வனங்கள் அமெரிக்க நேபாம் குண்டுகளால் கருக்கப்பட்டன. இரண்டாம் உலக யுத்தத்தில் பயன்படுத்தப் பட்டதிலும் பார்க்க இரு மடங்கு விமானக் குண்டுகள் அமெரிக்க மிகையொலி குண்டு வீச்சு விமானங்களால் வியட்நாமிய மண்ணில் கொட்டப்பட்டன.

1969 வியட்நாமின் தேசியத் தந்தை ஹோ சி மின் இறந்த போதிலும் வியட் கொங் படைகளுக்கு ஜெனரல் ஜியாப் சிறந்த வழிநடாத்துகையை மேற்கொண்டார்.

500,000 அமெரிக்கத்துருப்புக்கள், 50,000 தென்கொரியர்கள், 750,000 பொம்மையரசின் படைகளுக்கு எதிராக 500,000 வியட்கொங் தேசிய விடுதலைப்படையினர் சமராடினர். வீரஞ்செறிந்த வியட்நாமியப் படைகளை எதிர்த்து நிற்கமுடியாமல் இறுதியாக 1972இல் கூடுதலான தென்வியட்நாமியரை வலுக்கட்டாயமாக பயிற்சியளித்து சகோதர அழிப்பு யுத்தத்திற்கு வித்திட்டு அமெரிக்கா தனது துருப்புக்களை காப்பாற்ற முற்பட்டது. ஒன்று பட்ட வியட்நாமின் விடுதலை என்பதை ஒரே தாகமாகக் கொண்ட வியட்கொங் படைகளின் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியவில்லை.

இறுதியில் 1975 ஏப்பிரல் 30ஆம் திகதி வியட்நாமியருக்கு அவலத்தைத் தர வந்த அமெரிக்கப் படையினர் அவலப்பட்டு அமெரிக்கத் தூதரக கூரைமீதேறி உலங்கு வானூர்திகளில் தப்பியோடினர். தலைநகர் சைகோனைக் கைப்பற்றிய வியட்கொங் படைகள் சுதந்திர செந்நட்சத்திரக் கொடி யேற்றி தலைநகருக்கு ஹோ சி மின்னின் பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். 1955 இலிருந்து 1975 வரையான காலப்பகுதியில் மாத்திரம் 55000 யிரத்திற்கு மேற்பட்ட துருப்புக்களை அமெரிக்கா இழந்தது. இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்னர் வியட்நாமிய மண்ணில்தான் அதிக அமெரிக்க படையினர் கொல்லப்பட்டனர்.

ஹோ சி மின் அவர்கள் தமது மக்களுக்கு கூறியதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருத்தமானதாகும்.

"எங்கள் மலைகளும் ஆறுகளும் என்றும் இருக்கும். நாங்கள் இங்கு இருப்போம். ஆதிக்க சக்திகள் விரைவில் விரட்டியடிக்கப் படுவர். எமது தாயகத்தை நாங்கள் முன்னரிலும் பத்து மடங்கு சிறப்பானதாகக் கட்டுவோம்."

ஆம் இன்று பூரண சுதந்திர நாடாக வியட்நாம் தலைநிமிர்ந்து நிற்கின்றது.



கலாச்சார நிறுவனத்தின் (Unesco) நல்லெண்ணத் தூதுவராக இருக்கிறார். அவர் தனது அனுபவத்தை பிபிசி செய்தியாளரிடம் கூறியிருந்தார். அதன் சுருக்கம் வருமாறு.

எனக்கு நன்றாக ஞாபகமாக இருக்கின்றது எனக்கு அப்போது ஒன்பது வயது. நான் கேள்விப்பட்டேன் வியட்கொங் கொரில்லாக்கள் எமது கிராமத்திற்கு வந்தார்கள்என்றும். பகல் வேளை அமெரிக்கப் படையினரும் வந்து பதில் தாக்குதலை நடத்தினர்.




எனது பெற்றோர் கோயில் பாதுகாப்பான தாகக் கருதி சென்றனர். திரண்டு வந்த விமானங்களின் இரைச்சல் மாத்திரமே எனக்குக் கேட்டது. தீடீரென நான் நெருப்பிற்கு நடுவில் நின்றேன். எனது ஆடைகள் அனைத்தும் கருகி விட்டன. உடலின் முக்கிய மாக எனது கைகள் பார்ப்பதற்கே சகிக்க முடியாமல் இருந்தது. என்னுடன் வந்த சித்தியும் இரு குழந்தைகளும் இறந்துவிட்டனர்.

நான் வந்த கோலத்தை திரு. நிக் உற் (Nick Ut) நிழற்படம் எடுத்தார். அவரே என்னை மருத்துவமனையில் சேர்த்தார்.

இன்று எல்லோரும் இந்த புகைப்படத்தை ஆச்சரியத்துடன் நோக்குகின்றனர். ஏனெனில் சிறுவர்கள் யுத்தங்களில் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர் என்பதை ஒரு பாடமாக உலகிற்கு இந் நிழற்படம் சொல்லுகின்றது.

அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சுக்களிலிருந்து பாதுகாக்கும்முகமாக வியட்கொங் விடுதலைப் படையினரால் அமைக்கப்பட்ட நிலக்கீழ் தொடர் பாதுகாப்பரண்.




1- சுடு தளம்
௨- காற்றுச் சுற்றோட்டத் தளம்
௩- முதலுதவிக் கூடம்
4- பன்ஜி மரணப்பொறி
5- ஓய்வறை
6- வெடிப்பதிர்வு வளைவுச் சுவர்
7- கிணறு
8- திட்டமிடற் கூடம்
9- உணவு, ஆயுதச் சேமிப்புக் கிடங்கு




**வியட்நாமியரின் தற்போதய பலம்**

வியட்நாம் சனத்தொகை.- 6,756,800
மொத்த படைவலு எண்ணிக்கையில்- 1,260, 000
தரைப்படை- 1,100,000
கடற்படை- 66,000
விமானப்படையினர்- 20,000

**பராத் துருப்புக்கள்:**

எல்லைக் காவற்படையினர் 60,000
கிராமிய மக்கள் படையினர்- 500,000
மக்கள் சுயபாதுகாப்புப் படையினர்- 1,000,000
பாதுகாப்புத்துறை தலைமையகம்- ஹனோய்

(1996 ம் ஆண்டு தரவுகள்)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# சிங்களப் பேரினவாதிகள்

தமிழரசுக்கட்சித் தலைவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் பண்டாரநாயக்க சிங்களஇனத்தின் நலன்களையே தாரைவார்த்துவிட்டார் என வானதிரக் கோசமிட்டு கண்டிக்குப் பாதயாத்திரை சென்றவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன. இதன் மூலம் அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படக் காரணமாயிருந்த அவர் தான் இறக்கும்வரை கண்டிப் பாதயாத்திரை சரியானதே என்பதில் உறுதியாக இருந்தார்.

அவர் ஐந்தின் நான்கு பெரும் பான்மையுடன் ஆட்சிக்கு வந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மாறிய பின் அதிகாரப் பரவலாக்கம் என்ற முத்திரையுடன் கொண்டு வந்த அமைப்பு மாவட்ட அபிவிருத்திச் சபைகளாகும். அந்த அபிவிருத்திச் சபைகள் பற்றி விசனமடைந்து தன்னிடம் வந்த பிக்குகளிடம் கூறிய சமாதானம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் கயிறு தன்னிடம் தான் உள்ளது என்பதாகும்.

இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் கூட மக்களின் ஆதரவின்மையால் அழிந்தொழிந்தபோதிலும் அதற்கென நடத்தப்பட்ட தேர்தல்களுக்கென யாழ் நகர் கொண்டுவரப்பட்ட ஐ. தே. க. காடையர்கள் தமிழீழ மக்களின் வரலாற்றில் என்றுமே மறக்கமுடியாத பேரழிவொன்றை நிகழ்த்தினர்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இளம் சீடன் காமினி திசநாயக்கவின் மேற்பார்வையில் தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகம் இக்காடையர்களால் 1981 மே மாதம் 31ஆம் திகதி தீமூட்டி எரிக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒருலட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல் நிலையம் சிங்களப் பயங்கரவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை அனைவருக்கும் ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுத்தியது எனலாம்.

இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச் செய்ய ஜே. ஆர். அரசாங்கம் எடுத்த முயற்சிகள் தமிழர்களால் முறியடிக்கப்பட்டன. இச்சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழு ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்டஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக் கூட வழங்க ஜே. ஆர் அரசாங்கம் முன்வரவில்லை.

இயற்கை அனர்த்தங்கள் மற்றும் காரணங்களுக்காக என அமைக்கப்பட்ட ஜனாதிபதி நிதியத்திலிருந்து சிறுதொகை நிதியையே அன்றைய ஜே. ஆர் அரசாங்கம் வழங்க முன்வந்தது. இந்த நூல் நிலைய அழிப்புடன் சேர்த்து மேற்கொள்ளப்பட்ட தமது சொத்தழிப்புகளுக்கு நட்டஈடு பெற்றுக்கொண்ட அன்றைய தமிழ்த் தலைவர்கள் இந்நூல் நிலையத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பிற்கு நட்டஈட்டைப்பெற திராணியற்ற நிலையிலேயே இருந்தனர்.

இந்நூல் நிலைய எரிப்பு மூலம் சிங்கள இனவாதம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்றே கூறவேண்டும். சர்வாதிகாரி கொடூர இனவாதி என வர்ணிக்கப்டும் ஹிட்லர் தமது படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல்நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜே. ஆரின் படைகள் அதனையும் விட்டுவைக்காமை அவர்களின் மனோநிலையை தமிழ் மக்களுக்கு உணர்த்தி மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனத்தில் ஏற்படுத்தியது.

இதற்காக மன்னிப்புக்கோரவோ நட்டஈடு வழங்கவோகூட முன்வராத ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பலசிறிய நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறுதான்.

சமாதான தேவதையாக வெள்ளைப் புறாவாக காட்சியளிக்க முயன்ற சந்திரிகா அம்மையார் தனது எதிராளி ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசநாயக்கவிற்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் எதிராக எடுத்த முக்கிய ஆயுதங்களில் ஒன்றாக இந்த நூல்நிலைய அழிப்பு இருந்தது. அவர் இதனை மனப்பூர்வமான பிரச்சினையாக கொள்ளவில்லை என்பதை பின்னர் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுத்துக்காட்டின. காமினி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





அறிவுப் பெட்டக அழிப்பின் சூத்திரதாரிகளான மறைந்த அப்போதய மகாவலி அமைச்சர் காமினி திசநாயக்கவும், நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும்

# ின் அறிவுப்பெட்டக அழிப்பு

திசநாயக்காவின் இறப்புக்குப்பின் அந்த ஆயுதத்தை கீழேபோட்ட சந்திரிகா தமிழரையும், உலகையும் ஏமாற்றமட்டும் அதனை இடையிடையே எடுத்து தூசு துடைப்பது வழமையாகும். சமாதானப் பிரியையாக அவர் தென்பகுதியில் நடத்திய வெற்றிக் களியாட்டங்களில் "புத்தகமும் செங்கல்லும்" என்பது அவர் முன் வைத்த ஏமாற்றுக் கோசங்களில் ஒன்றாகும். அவர் சேகரித்த செங்கற்களுக்கு நேர்ந்த கதி என்ன? என்பது தெரியாத போதும் அவர் சேகரித்த புத்தகங்களில் பெரும்பாலானவை சிங்களப் புத்தகங்கள் என்பது வெளிவந்த செய்தியாகும்.

யாழ் நூல்நிலையப் புனருத்தாரண நிதி என்ற பெயரில் அவர் ஆரம்பித்த நிதியத்தில் சேர்ந்த பணத்தின் ஒருபகுதி தென்பகுதி நூல்நிலையங்களுக்கு செலவிடப்படுகிறது என்பது இறுதியாகக் கிடைத்த செய்தியாகும். யாழ் மண்ணை ஆக்கிரமித்துக்கொண்ட நிலையில் "யாழ் மக்களின் மனங்களை வெல்". அவர் எடுத்த நடவடிக்கைகளில் ஒன்று அங்கு நூல்நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைத்ததாகும். இடிந்தழிந்த நூல்நிலையத்தை யாழ்ப்பாணத்திற்கு குறியீடாக அடிக்கடி தொலைக்காட்சியில் காட்டி வரும் சந்திரிகா அம்மையார் நூல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் ஒன்றை அமைக்கக்கூட முன்வரவில்லை. ஏற்கனவேயிருந்த கட்டடம் ஒன்றிற்கு வர்ணம் பூசிய தொலைக்காட்சி உரைமூலம் அதனைத் திறந்துவைத்தார்.

இன்னும்கூட சந்திரிகாவின் ஆக்கிரமிப்புப் படைகளால் அழிக்கப்பட்டுவரும் நூல்நிலையங்கள் - நிலைகொண்டுள்ள நூல்நிலையங்களின் எண்ணிக்கை கொஞ்ச நஞ்சமல்ல. தமிழினத்தை அழிக்க முயலும் சிங்கள இனவாதம் தமிழ்மக்களின் அறிவுத் தேடலுக்கான நூல்களையும் நூல்நிலையங்களையும் தேடித்தருவதாக கூறுவது கண்ணைக் குருடாக்கிய பின் உல்லாசப் பயணம் அழைத்துச் செல்லுவது போன்றதாகும்.

இன்றைய உலகு அறிவைத்தேடும் வழிமுறைகளில் பல மைல்கள் பயணம் செய்துவிட்டது. தமது வரலாற்றையும் பண்பாட்டையும் ஆவணப்படுத்தி எதிர் காலத்துக்கு வழங்குவதில் உலகிற்கு பறைசாற்றுவதில் நீண்ட நெடும் பயணம் செய்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் ஈழத்தமிழினம் இன்று ஒரு வரலாற்றைப் படைத்துவரும் நிலையில் அதனை ஆவணப்படுத்துவதிலும் தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருவது கண்கூடு. இதற்கு அனைவரும் உதவுவது இன்றியமையாத ஒன்றாகும். தமிழரின் விடுதலைப்போராட்டத்தில் அதனையும் ஒரு அங்கம் என்றே கூறமுடியும்.



தரப்படுத்தலோடு ஆரம்பமான தமிழர்கள் மீதான கல்வி ஒடுக்குமுறைகள்.இன்று தமிழர் கல்விக் கூடங்களே இராணுவ முகாம்களாக்கப்பட்டாலும், சிறிலங்கா விமானப்படையால் குண்டு வீசியும் அழிக்கப்பட்டு ஏதிலிகளாக்கப்பட்டாலும் மரநிழலும் கல்விக்கூடங்களாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அர்த்தமற்ற காத்திருப்பு

கூடு கலைந்து பறவைகள் ஆங்காங்கே திரிந்து இன்னுமொரு இடத்தில் கூடுகட்டும்போது, எழும் இந்த கீய்... காய்... என்ற ஒலிபோல இடம்பெயர்ந்து வந்த மக்கள் கூட்டம் இருப்பிடங்களைத்தேடி அமைத்துக்கொண்டிருந்தது... புதிதுபுதிதாக வெள்ளைத் தறுப்பாள்களில், சேலைகளில், வீடுகள் முளைத்துக்கொண்டிருந்தன. சிலர் உறவுகளைப்பிரிந்த சோகத்தில் சிந்தனைகளை எங்கோ விட்டிருந்தனர். இலையான்கள் கிசு கிசு என்று மொய்ப்பதுபோல சிறுவர் கூட்டம் அங்கும் இங்கும் பசியோடு திரிந்ததை அவர்களின் ஒட்டிய வயிறு காட்டியது. அந்த வெள்ளைத் தறுப்பாள்களினால் ஆனவீடுகளில் அடுப்புகள் மட்டும் புகையவில்லை...

சோவென்று வானுயர வளர்ந்திருந்த புளியமர நிழலில் தஞ்சம் புகுந்த ஒரு குடும்பம் அந்த வெள்ளை மாளிகை ஒன்றினுள்...

அந்தப் புளிய மரக்காற்று மெதுவாக அவர்களை வருடிக்கொடுத்திருக்க வேண்டும். நான்கு பிள்ளைகளைக் கொண்ட ஒரு குடும்பம். பசியினால் சுறுண்டு படுத்திருந்தது. அந்தக் குடும்பத்தில் மூத்தவளாக ஒளிநிலா, புளியமர வேரில் சாய்ந்து கொண்டாள். "ரிவிபல... ரி... வி... ப... ல..." ஆக்கிரமிப்பு யுத்தத்தால் அந்த நிலை... பறவைகள் காலத்திற்குக் காலம் காடுகளைத்தேடி இடம் மாறும். அவை தன் சுதந்திரத்திற்காக, ஆனால், நாம் இருந்த நிம்மதியும் இழந்து, கயவர் கூட்டத்தினால் நாளுக்கு நாள் கூடு கலைந்து ஒவ்வொரு மரங்களைத்தேடி தஞ்சம் அடைகின்றோம்— ஒளிநிலாவின் மனம் ஒவ்வொரு நினைவாக எழுப்பத்தொடங்கியிருந்தது. ஏதும் அறியவாய்ப்பில்லாத இரு தங்கைகளும், நிம்மதியாய் உறங்கிக்கொண்டிருந்தார்கள்.

விடிந்தால் ஓ/எல் பரீட்சை. என்ன செய்வது? படிக்கப் புத்தகம்கூட கொண்டுவரவில்லை. ஆமிவந்திட்டானாம் என்றவுடன் கையில் வைத்திருந்த ஒரு கொப்பியுடன் ஓடிவந்திருந்தாள் ஒளிநிலா. அவள் இருள் நிலாவாகி தெருவை வெறித்து அந்த புளியமர அடியில் சாய்ந்து கொண்டாள்.

சாப்பாடு கொடுக்கின்றார்களா? என்று பார்க்கப்போயிருந்த தம்பி சோர்ந்த நடையுடன் வந்து ஒளிநிலாவின் பக்கத்தில் அமர்ந்தான்.

"அக்கா"... என்று தம்பி கூப்பிட, ஒளிநிலாவின் பார்வை அவனில் நிலைத்துக்கொண்டது. "அக்கா, மூன்று மணிக்குத்தான் சமையல் முடியுமாம். இன்றைக்குச் சோறும் பருப்பும்தான் சாப்பாடாம்..."

ஏதோ பசியின் கொடுமையால்




நிறையக் கதைத்துக்கொண்டு போனான் தம்பி. 'இடம்பெயர்ந்து ஓடியதில் இருந்து மனிதாபிமானிகள் ஊற்றிய கஞ்சியினால், இன்னும் எம்முயிர் போகாமல் பிடித்துக்கொண்டிருக்கின்றது. சின்னச் சோமாலியாவாக... அந்த வன்னி மாறினால்...?' அவளின் சிந்தனையைக் கலைத்தது தம்பியின் குரல். "அக்கா! அங்க பார்... உனக்குப் படிப்பிச்ச கௌரி ரீச்சர்" எழும்பி தெருவுக்கு ஓடினாள் ஒளிநிலா... கௌரி ரீச்சர் இடம் மாற்றத்தினால் புதுக்குடியிருப்புக்கு முன்பே வந்து குடியமர்ந்தவர்.

ஒளிநிலாவைக் கண்ட கௌரி ரீச்சர்... "என்ன ஒளிநிலா! எல்லோரும் வந்திட்டீங்களா...? இந்த இடத்திலா இருக்கிறீர்கள்..."

ஒளிநிலாவிற்கு மனம் பாறாங்கல்லாய் கனத்தது. வெற்றுப் பார்வை ஒன்றை உதிர்த்துவிட்டு, மெதுவாகத் தலையசைத்தாள். "ஓம்" என்ற குரல் அவளிற்குள்ளேயே அடங்கி வெளியில் வர மறுத்தது. அடுத்து கௌரி ரீச்சர் கேட்டகேள்வி, ஒளிநிலாவை செல்போட்டு நொருக்கியது போல இருந்தது...-

"என்ன ஒளிநிலா! நாளைக்குச் சோதினை அல்லவா... இடம்பெயர்ந்த பிள்ளைகளிற்கு, இரணைப்பாலைப் பள்ளிக்குடத்திலையாம். படிக்கின்றாயா?" வறண்ட புன்னகையுடன்...

"ஓம் ரீச்சர்! இந்த உடுப்பும், இன்னும் ஒரு உடுப்பும்தான் கொண்டு வந்தனான். ஒரு பேனாகூட கொண்டுவரவில்லை ரீச்சர். பிறகு என்னவென்று பரீட்சை எழுதுவது... ஓடும்போது நேர அட்டவணை மட்டும் என்கையில் இருந்தது. அதோடு ஓடி வந்தனான். யாழ்ப்பாணத்தில் இருந்து எத்தனைதரம் இடம்பெயர்ந்திட்டம் ரீச்சர். அதுகூட என்னைப் பாதிக்கவில்லை. ஆனால், இந்த இடம்பெயர்வு... என் எதிர்காலத்தையே விழுங்கிவிட்டது"என்றபோது ஒளிநிலாவின் கண்ணில் இருந்து கண்ணீர் நிலத்தைத் தொட்டது.

"அழாதீங்கம்மா, கடவுளுக்கும் கண்ணில்லை. இந்தப் பேனாவை வைச்சிருங்கோ, நாளைக்கு படிச்சதை வைச்சாவது சோதினையை எழுதுங்கோ... போகாமல் மட்டும் விட்டிடாதையம்மா... நாளைக்கு நாமும் இங்கிருந்து எங்க ஓடுறதோ தெரியாது" என்று ரீச்சர் ஆறுதலுக்கு நாலு வார்த்தை கூறிவிட்டு, "நான் வாரனம்மா" என்ற வார்த்தையோடு கௌரி ரீச்சரின் சைக்கிள் உயிர்பெற்றுக்கொண்டது.

ஒளிநிலாவின் மனதில் ஆயிரம் மின்னல்கள் ஒன்றாகி மோதியது. திடீரெனக் கேட்ட வாகனக் கோண் சத்தத்தினால், நினைவுக்கு வந்தாள் ஒளிநிலா. காலில் தட்டுப்பட்ட கடதாசிப் பேப்பரை எடுத்துக்கொண்டு அந்த புளியமர அடியில்போய் அமர்ந்தாள்.

பொழுது புலர்ந்துகொண்டு இருந்தது.

படித்ததையாவது திரும்ப ஒருக்கால் செய்து பார்ப்போம்! என்று நினைத்தவாறு அந்தப் பேப்பரில் கீறத்தொடங்கினாள். திடீர் என மூளையில் தட்டியது. அடக்கடவுளே! ஒரு பேனாதானே இருக்கிறது. மை முடிந்தால் பரீட்சை எழுத முடியாமல் போய்விடும்.

மடியினில் பேனாவைப் போட்ட ஒளிநிலா, விரல்களினால் மண்ணில் கிறுக்கத்தொடங்கினாள். அவமானம் அவளைத் தின்று கொண்டிருந்தது.

'கடவுளே'...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஐந்து வயதிலும் மண்ணில்தான் கிறுக்கிக்கொண்டேன். அது அறியாத பருவம்... இப்போ... பதினாறு வயதிலும் மண்ணில்தான் எழுதிப்படிக்க... "ம்"... நெடுமூச்சோடு அவளுக்குள் அந்த வார்த்தைகள் வெந்துபோனது. அவளின் மனம் மட்டும், முகாரிராகம் இசைத்துக் கொண்டிருந்தது.

கண்கள் நீரைச்சொட்ட அந்த வேரோடு படுத்துக்கொண்டாள். அந்த மரம் அவளிற்கு வருடிக் கொடுத்தது. வெள்ளையன் கொடுத்துப்போன, வெள்ளைக்கூரை அவளைப்பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது.

"நிலாம்மா... நிலாம்மா...".

என்று செல்லமாக அழைத்தவாறு, அந்த வெள்ளைக் கூரைக்குள் இருந்துவந்து நின்றாள் அம்மா. அவளின் கையில் ஒரு பெரிய சட்டி---

"நிலாம்மா... சாப்பாடு வாங்கிக்கொண்டு வருவமா? எல்லாரும் போனாத்தான் சாப்பாடு தருவாங்கள் இல்லை என்றால், சட்டி கொண்டு போறாளுக்கு மட்டும்தான் தருவார்கள்."

அம்மா கரகரத்தகுரலில் கூறிக்கொண்டபோது, இரு தங்கைகளும் சட்டியோடு தயாராக வந்து கொண்டிருந்தார்கள்...

"அம்மா எனக்குப் பசிக்கேல்ல... நீங்கள் போய்வேண்டிச் சாப்பிடுங்கோ"

"அக்கா உனக்கு பசிகேல்ல எண்டா வேண்டிவைச்சு விடியச் சாப்பிடலாம் தானே" என்று இரந்து நின்ற சிறிய தங்கையைப்பார்த்து ஒருவாறு சமாளித்து அனுப்பி வைத்தாள். மனம் தாங்கிக்கொள்ள முடியமல், ஓ--- வென்று தனக்குள் குரலெடுத்து விம்மி விம்மி அழுது தீர்த்தாள்.

என்ன அவலவாழ்க்கை ஒரு நேர உணவுக்கே ஆலாய்ப்பறக்கும் நிலை.

கடவுளே! எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ள எனக்கு உறுதியான மனதைக்கொடு, நான் பட்டினியால் சாகலாம். என் தங்கைகள் தாங்குவார்களா? நீ கொஞ்சம் கொஞ்சமாய் எம்மையெல்லாம் சாகடிக்கின்றாயே--- எல்லோருடைய வாழக்கையிலும் மரணம் வரும். ஆனால், எம்வாழ்க்கையை மரணத்திற்குள் தேடிக்கொண்டு இருக்கின்றோமே---!

ஒளிநிலாவின் மனம் புலம்பிக் கொண்டிருந்தது. அப்படியே அவள் தூங்கியும் விட்டிருந்தாள்.

வானமே கூரையாய் இருந்ததால் நேரத்துடன் விடிந்து இருந்தது. எழும்பிக் குந்திக்கொண்ட ஒளிநிலா தன் தங்கைகளைப் பார்த்தாள். போர்வை இல்லாமல் தாங்கள் போட்டிருந்த சட்டைக்குள் குறண்டிப்படுத்திருந்தார்கள். வானத்திற்கும் பொறுக்க முடியாமல், அதில் இருந்து வெளியேறிய கண்ணீர் பூமியை நனைக்கத் தொடங்கியது. தூவானம் எத்தியதால் எழும்பிக் குந்தி தூங்கி வழிந்து கொண்டிருந்த சகோதரனைப் பார்த்த ஒளிநிலாவின் நெஞ்சு கலங்கியது.

நேரம் போய்க்கொண்டிருந்தது. மழை விட்டபாடில்லை. வெள்ளைக்கூரையால் வடிந்த தண்ணீரை ஏந்தி முகம் கழுவினாள் ஒளிநிலா. உடுப்பு மாற்றுவதற்காக கொண்டுவந்திருந்த சாக்கு மூட்டையில் இருந்து சட்டையை இழுத்தெடுத்துக்கொண்டாள்.

உடைமாற்ற மறைவான இடமில்லை!

அவளிற்கு யாழ்ப்பாணத்து வாழ்வை நினைவுபடுத்திப்போனது. எத்தனை வசதியான வீடு... ம்... என்ற பெருமூச்சோடு ஒருவாறு அந்த உடுப்பை மாற்றிக்கொண்டபோது மானம் பறிபோய்க்கொண்டிருந்த உணர்வு அவளை வாட்டியது.

தாயின் குரல்கேட்டுத் திரும்பினாள்...

"எங்க நிலா மழைக்க போகப் போறாய்"

"இன்றைக்கு பரீட்சை அதுதானம்மா"

"அக்கா பள்ளிக்கூடத்தில எல்லாம் இடம்பெயர்ந்த சனங்கள்தான் இருக்கின்றார்கள்." தனக்குத் தெரிந்த செய்தியினை தம்பி உரத்துச்சொல்லிக் கொண்டிருந்தபோது, ஒளிநிலா தெருவை அடைந்திருந்தாள்.

மழை கொட்டிக்கொண்டிருந்தது. ஓட்டமும், நடையுமாக நிலா இரணைப்பாலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தாள்.

எந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாலும் வாசகங்கள் தொங்கிக் கொண்டிருந்தது. அவசர போர்க் காலத்திற்கான அறைகூவல் அது.

'ஆ... எவ்வளவு உண்மை!...

அந்தச் சுலோகங்கள் அவளைச் சாட்டையால் அடிப்பதுபோல் உணர்வு. ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு பாடசாலையை அடைந்தாள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சுட்டிலக்கத்தைத் தேடிப்பிடித்து தனக்குரிய மேசையில் அமர்ந்து கொள்ளவும், பரீச்சைத்தாள்கள் கைகளில் கிடைக்கவும், நேரம் சரியாக இருந்தது. அன்று தமிழ்மொழிப் பாடம்... இந்த தமிழ்மொழிக்குத்தான் இந்த அடிமை வாழ்க்கை. எம் தாய்மொழி பறிபோகும் விதம்... எம் மண்ணையே பறிப்பவனுக்கு எம்மொழியைப் பறிப்பது பெரிய பிரச்சினையாக இருக்காது. இதைப் பார்த்துக் கொதித்தவர்கள்தான் எம் வீரமறவர்கள். களப்போரில் நிற்கின்றார்கள், நாம் இங்கு...

ஒளிநிலாவின் மனம் பரீட்சை வினாக்களை விட்டு வெளியில் தாவிக் கொண்டிருந்தது. தமிழன் வரலாறுகள் அடுக்கடுக்காய் வந்து சிந்தனையை சீண்டிவிட்டுக் கொண்டிருந்தன. தமிழன் வரலாறுகள் அடங்கிப்போய்க் கொண்டிருக்கின்றதே... இந்தத் தேசத்தின் தந்தை யாரென்றால்...? டீ. எஸ். சேனநாயக்காவென சிறுபிள்ளையில் இருந்து திணிக்கப்பட்டிருந்ததால், அவன் தமிழனுக்கு இழைத்த கொடுமை என்னென்றறிவார்கள். வேதம் போல் பாடசாலைகளில் ஓதிவிடுவார்கள். அந்த அறிவிலிகளும், உண்மை தெரிந்தும் தெரியாதது போல் தப்பித்துக் கொள்கின்றார்கள். இதற்குப் போரே ஒரு வழி... தமிழன் தார்மீகத்தை நிலை நாட்டுவதற்கு ஒரு தர்மயுத்தம்... எவ்வளவு உண்மையானது. டக்... டக்... என்று பக்கத்து மேசையில் இருந்த அறிமுகமாகாத ஒரு மாணவன் பேப்பருக்காக மேசையைத் தட்டியபோது, நினைவுக்கு வந்தாள். நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது. மனதை ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டு தெரிந்த வினாக்களை கடகடவென எழுதிக்கொண்டிருந்தபோது நேரம் சரியாக பரீட்சைத்தாள்கள் பறிபோயின...

'ஓ' என்று அவள் மனம் கத்திக்கொண்டது. ஆனால், வெளியில் சத்தம் வரமறுத்தது. சோதனை...எத்தனையோ சோதனைகள்... வேதனைகள்... இவற்றை மனதில் தாங்கி சோதனை எழுதவேண்டும்.

பட்டினி கிடந்து படிக்கப் பாடசாலை இன்றி, மரங்களின்கீழ் தஞ்சம் அடைந்து, கொட்டும் மழையில் நனைந்து பரீட்சை மண்டபத்தில் அமர்ந்து ஈரத்தால் நனைந்துகொண்டு பேனாபிடித்து சோதினை எழுதவேண்டும். இதுதான் எமக்காக நடாத்தப்பட்ட க. பொ. த. சாதாரண பரீட்சை...!

ஒளிநிலாவின் மனம் வேதனையில் வெந்துகொண்டிருந்தது. கால்கள் மாத்திரம் சோர்ந்த நிலையில் நடையைத் தொடர்ந்தது.

வீடுபோக அவசரமில்லையே! வீட்டிற்குப்போனால் சாப்பாடில்லை. வேலைகள் இல்லை. என்ன அவசரம்.

மெதுவாக நடந்து கொண்டிருந்தாள். சிந்தனைகள் சிறகொடிந்த பறவையாக தத்தளித்துக் கொண்டிருந்தன.

"ஒளிநிலா ஏய்"

குரல் கேட்டுத் திரும்பினாள். இடம்பெயர்ந்து ஓட்டுசுட்டானில் இருந்தபோது சினேகிதியான சாந்திதான்.

சிரிக்க முயன்றாள் ஒளிநிலா முடியவில்லை. நெருங்கி வந்த சாந்தி...

"என்ன ஒளிநிலா ஒருமாதிரி இருக்கின்றாய். பரீட்சை எழுதினாயா?..."

"ம்" என்ற பெருமூச்சை உதிர்த்தபடி...

"ஓம் எழுதினான்"

பேப்பர் நிறைய என் வேதனைகளை சோதனையில் எழுதினேன். கண்ணில் இருந்து சுட்டநீர் கன்னத்தைத் தொட்டபோது உணர்வு அவளைத்தட்டியது. தெருநிறைய சனங்கள் போய்வந்து கொண்டிருந்தார்கள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

"ஏன்!, எங்களுக்குத்தான் இந்த நிலை... நானாவது ஒருமுறை இடம்பெயர்ந்தே இந்தக்கொடுமையைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

நீ எத்தனையாவது இடப்பெயர்வு, என்னென்றுதான் நீ தாங்கிக் கொள்கின்றாயோ?"... என்று ஒளிநிலாவின் வேதனையில் பங்கெடுத்துக்கொண்டாள் சாந்தி.


மீண்டும், அந்தப் போருக்கான அறைகூவல் வாசகம் கண்ணில்படுகின்றது. "இது சிந்திக்கும் நேரமில்லை. போராடுவோம் வா" கால்கள் அசைய மறுக்கின்றன. இதற்குப்பிறகும் நான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றேன்... என் சுயநல வாழ்க்கைக்காக என்று மனம் கூறிக்கொண்ட போது, சாந்தியின் பார்வையும் அந்த வாசகத்தைப் படித்துவிட்டு திரும்பியது

"ஒளிநிலா... போருக்குப் படிப்பா...? படித்திடப் போரா...?" ஒளிநிலா கேள்வியோடு சாந்தியைப் பார்த்தாள். பின் ஒரு முடிவிற்கு வந்தவளாக... "இந்தப் பரீட்சையே என் இறுதிப்பரீட்சை. இந்தப் பரீட்சை முடிவதற்குள், அடுத்த இராணுவ நடவடிக்கை தொடரலாம். இனி இடம்பெயர இடமேயில்லை..." என்று கூறிக்கொண்டு வந்தபோது போராளிகள் இணையும் செயலகம் நெருங்கிவிட்டிருந்தது. சாந்தி கேள்வியோடு ஒளிநிலாவைப் பார்த்தாள்

"இப்போ வேண்டாம். இன்னும் கொஞ்ச நாள்பார்ப்போம்" என்றாள் சாந்தி. "வீணாக இந்த உடம்பு ஒரு குண்டுக்கோ, நோய்க்கோ அழிந்து போகலாம். இன்று இந்தச் சோதனையில் வெற்றி பெறாமல் விடலாம்... ஆனால்" என்றபோது அவள் விழிகள் தெருவை வெறித்தது.

"சாந்தி இது என்றும் அர்த்தமற்ற காத்திருப்பே..."

"நான் போறன்..." என்ற சொல் காற்றோடுதான் வந்து சாந்தியின் செவிகளில் மோதிக் கொண்டது. ஒளிநிலா போய்க்கொண்டே இருந்தாள்.






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அன்பான வாசகர்களே!
"உணர்வுப்பாலமாக"
"உறவுப்பாலமாக" வெளிவரும்
எரிமலை இதழ், உலகமெலாம்
பரவி வாழும் நம்மவர்
எல்லோரையும் சென்று எட்ட
வேண்டும் என்பது எமது ஆவல்.
உங்களை வந்தடையும்
எரிமலை உங்கள்
உறவுகளை, நண்பர்களை
சென்றடைகின்றதா?
இல்லையானால்....
அது உங்கள் பணி
நாளையே அவர்களும் எரிமலை
வாசகர்கள் ஆகட்டும்!




## மாதம் ஒருமுறை எரிமலை நாடிவர நாடுங்கள்

**சுவிற்சலாந்து**
T.E.C.C
Postfach 2274
8031 Zurich
Tel:(41) 127 33 407

**இங்கிலாந்து**
U.T.O
202 Long Lane
London SE1 4QB
Tel:(44) 207 403 45 54

**ஜேர்மனி**
T.C.C
Postfach 101613
46016 Oberhaousen
Tel:(49) 208 205 991 03

**பிரான்ஸ்**
T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
Tel:(33) 1 43 58 11 42

**இத்தாலி**
T.C.C
Via Paolo Balsamo -11
90100 Palermo
Tel:(49) 208 205 991 03

**நெதர்லாந்து**
T.C.C
P.O.Box 18600
2502 EP Den Haag

**டென்மார்க்**
L.T.T.E
P.O.Box 47
7400 Herning
Tel:(45) 97 21 76 49

**நோர்வே**
T.C.C
P.O.Box 1699,Vika
0110 Oslo
Tel:(47) 22 35 09 80

**சுவிடன்**
T.C.C
Glomminge Grand-25
3rd Floor,
16362 Spanga

**கனடா**
W.T.M
64 Eaton Ave, Toronto
Ontario M4J 2Z5
Tel:(1) 416 46 15 991

**அவுஸ்திரேலியா**
T.C.C
P.O.Box 375
Preston
Victoria 3072

**அமெரிக்கா**
W.T.C.C
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica
New York 11432
Tel:(1) 718 657 94 63

எரிமலை இதழ் சார்ந்த தொடர்புகளுக்கும், உங்கள் நாடுகளில் தொடர்பு முகவரிகள் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ERIMALAI
T.C.C
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE

வாசகர்களே! எழுத்தாளர்களே!
உங்கள் மேலான கருத்துக்களை, ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை எரிமலையை ஊக்கப்படுத்தும். அதன் தரத்தை மேலும் உயர்த்தும். இது உங்களின் எரிமலை.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அணையாத தீபங்கள்




## லெப்.கேணல் ராதா

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதனிலைத் தளபதிகளில் ஒருவரான ராதா 1983இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டார். சிறீலங்கா இராணுவத்துடனான பல வெற்றிகரமான மோதல்களில் பங்குகொண்டார். மன்னார் பொலிஸ் நிலையத் தகர்ப்பு, நாயாற்றில் சிறீலங்காப் படையினருடனான தாக்குதல், முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் முதலானவை இவற்றுள் குறிப்பிடத் தக்கவை.

மன்னார் தளபதி லெப்.கேணல்.விக்டரின் வீரச்சாவிற்குப் பின்னர் மன்னார் மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இக்காலப் பகுதியிற்றான் கண்ணிவெடியால் பாதிக்கப்பட மாட்டாது எனக் கருதப்பட்ட தென்னாபிரிக்கத் தயாரிப்பான பவள் கவசவாகனம் தளபதி ராதாவினால் முதன் முதலாக தகர்த்தெறியப்பட்டது.

பின்னர் யாழ் மாவட்டத் தளபதியாக நியமிக்கப்பட்டார். ராதாவின் வழிநடாத்தலில் பல வெற்றிகரமான தாக்குதல்கள் யாழ் குடாநாடெங்கனும் நடத்தப்பட்டன. யாழ். பண்ணை விடுதி முகாம், காங்கேசன்துறை காபர்வியு கொட்டல் இராணுவ முகாம் முதலான பல முகாம்கள் தாக்கப்பட்டு தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இறுதியாக கட்டுவனில் 20-05-1987 அன்று சிறீலங்கா இராணுவத்துடனான மோதலில் மார்பில் குண்டேந்தி வீரச்சாவடைந்தார்.

தமிழீழ விடுதலைக்கு ஆகுதியாக்கிக் கொண்ட இவ் வீரவேங்கையின் நினைவில் தோய்ந்து விடியலை நோக்கி விரைவோம்.

## லெப்.கேணல் நவம்

சிங்கள இனவாதத்தின் கொடுமையினால் மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் தனது தாய் தந்தையரோடு வாழ்ந்து வந்த நவம் 1983இல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அமைப்பு மேற்கொள்ளவிருந்த சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான தாக்குதல் ஒத்திகையின்போது ஏற்பட்டவிபத்தின்போது மணிக்கட்டுக்குமேல் வலதுகையை இழந்து கொண்டாலும் நவம் அவர்கள் அதற்காக தளர்ந்து விடவில்லை. மாறாக இடதுகையினால் சுடுகலன்களை இயக்கவும், வாகனங்களை ஓட்டவும் விரைவாகக் கற்றுக்கொண்டார். தமிழீழத்தின் வனப்பகுதிகளில் துடிப்பு மிக்க போராளியான நவத்தின் காலடி படாத இடமே இல்லை என்றே கூறலாம். திசையறி கருவியின் உதவியின்றி அடர்ந்த வனங்களுக்கூடாக செல்லுமளவிற்கு தேர்ச்சி பெற்றிருந்தார்.


பல்வேறுபட்ட தாக்குதல்களில் தனது திறமையை வெளிப்படுத்திய நவம் தேசியத் தலைவரின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றார். முல்லை மணலாறு மாவட்டத் தளபதியாக தேசியத் தலைவரால் நியமிக்கப்பட்டார். தமிழீழ இதயபூமியைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நவம் தனது கடமையை செவ்வனே செய்தார். 13 மே 1989 அன்று நெடுங்கேணிப் பாடசாலையில் முகாமிட்டிருந்த இந்தியப் படையினர் மீது தாக்குதல் நடத்தவென தலைமை தாங்கிச் சென்ற நவம், அத்தாக்குதலில் விழுப்புண் அடைந்து பின் வீரச்சாவடைந்தார்.

தேசியத் தலைவரால், இவர் பெயர்சூட்டப்பட்ட போரில் உறுப்புக்களை இழந்த போராளிகளுக்கான தொழில்நுட்பக் கல்லூரியான நவம் அறிவுக்கூடம் வரலாற்றில் என்றும் இவர் பெயரை ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# சிறீலங்கா அரசின் நவீன ஆயுதக்கொள்வனவுகள்

ஆனையிறவுப் பெருந்தள இழப்பு முதற்கொண்டு படையிலுள்ள உயர், இடைநிலை அதிகாரிகள் பலியானமை இவற்றோடு யாழ் குடாநாட்டில் தனது பிடி தளர்ந்து வருகின்றமையையும் கண்டு நிலைகுலைந்து போயுள்ள சிங்கள அரசு அவசர ஆயுதக்கொள்வனவுகளைத் தொடங்கியுள்ளது.

உலகெங்கும் பறந்து திரிந்து, நவீன ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொள்ளுமாறு சிறீலங்கா உயர் இராணுவ அதிகாரிகள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரினால் பணிக்கப்பட்டுள்ளனர். எப்பாடுபட்டேனும் யாழ் நகரை தனது பிடியில் வைத்திருக்க தனது இறைமையை அடகுவைத்தேனும் நவீன ஆயுதங்களை வாங்குவதற்கு சிறீலங்கா அரசதரப்பு முன்வந்துள்ளது.

4-05-00 அன்று புதிதாக சிறீலங்கா விமானப் படைக்கென M.I 24 (Gunships) உலங்குவானூர்திகள் பத்து ரூஸ்சியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. கிழக்கைரோப்பிய நாடுகளிடமிருந்து பெருந்தொகையான நவீன கனரக ஆயுதங்களும், வெடிபொருட்களும் கொள்வனவு செய்யப்பட்டு கப்பல்களில் கொழும்பிற்கு வந்த வண்ணமுள்ளன. பாகிஸ்தானிடமிருந்தும் 120 mm எறிகணைகள் மற்றும் ஆயுத தளபாடங்கள் வந்து சேர்ந்துள்ளன.

அதேவேளை சிறீலங்கா அரசு மீண்டும் இஸ்ரேலுடன் தனது இராஜதந்திர உறவுகளை மேற்கொள்ளவுள்ளது. அதன் ஒரு அம்சமாக இஸ்ரேலிடமிருந்து 7 கிபீர் மிகையொலி விமானங்களை கொள்வனவு செய்துள்ளதோடு அதற்கு இஸ்ரேலிய விமானிகளையும் சிறீலங்கா அரசு வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

நவீன ஆயுதங்கள் மற்றும் விமானங்களின் கொள்வனவு மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னேறலை தடுத்துவிடலாம் என சந்திரிகா அம்மையார் எண்ணுகின்றார் போலும்.

# தொடரும் சிங்களப்படையின் பயங்கரவாதம்...

யாழ். குடாநாட்டில் தொடர்ச்சியாக படுதோல்வியடைந்து வரும் சந்திரிகா அம்மையாரின் படைகள் தமது கையாலாகாத்தன்மையை அப்பாவித் தமிழர்கள் மீது காட்டியுள்ளனர்.

12-05-00 அன்று சங்குப்பிட்டி இறங்குதுறைக்கு அருகே பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது கிபீர் விமானங்கள் குண்டுகளை வீசியுள்ளன. இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை இருமகன்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் ஸ்தலத்தில் பலியாகினர். பத்திற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சந்திரிகா அம்மையாரின் படைகள் தமது வரலாற்றுத் தோல்விகளுக்குப் பழிவாங்குவதற்காக விமானங்கள் மூலம் குண்டுகள் வீசி அப்பாவித் தமிழர்களை அழிப்பதற்கு கங்கணங் கட்டியுள்ளனர் போல் தெரிகின்றது. கடந்த 15-5-00 அன்று யாழ் புறநகர்ப் பகுதியான குருநகர்ப் பகுதி மீது சிறீலங்கா விமானப் படையின் விமனங்கள் குண்டு வீசியுள்ளன. இதன் போதும் பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சரியான விபரங்களை அறிய முடியாதுள்ளது. 20-05-00 அன்று கைதடி வயோதிபர் இல்லத்தின் மீது சிங்களப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் 16 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர். இனிவரும் நாட்களில் சிறீலங்காப் படையினர் தாம் அடையப்போகும் தோல்விகளுக்கு பழிதீர்ப்பதற்கு தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீது தொடர் குண்டுவீச்சுக்களை மேற்கொள்ளலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.



## தமிழர் வெற்றிகளை மூடிமறைக்க செய்தித்தணிக்கை

ஆனையிறவுப் பெருந்தள வீழ்ச்சியைத் தொடர்ந்து 23-4-00 தொடக்கம் முதற்தடவையாக சிங்கள அரசால் முதன் முறையாக மிகமோசமன கடும், சர்வதேச செய்தித் தாபனங்களையும் உள்ளடக்கிய செய்தித்தணிக்கை அமுல் படுத்தப்பட்டுள்ளது. மாறிமாறி ஆட்சிக்கு வரும் சிறீலங்கா அரசுகளால் தமது படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் அடையும் படுதோல்விகள் மற்றும் அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்வதை மறைப்பதற்குமென செய்தித் தணிக்கை அவர்கள் அமுல்படுத்துவது வழக்கம்.

ஆனால் இம்முறையோ சந்திரிகா அம்மையாரின் நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்கும் சிறீலங்காப்படையினரின் மிகப்பெருந்தளமான ஆனையிறவு தமிழீழ விடுதலைப் புலிகளால் கடந்த மாதம் வெற்றி கொள்ளப்பட்டது. அதன் பின்னர் யுத்த செய்திகளுக்கு சந்திரிகா அம்மையார் முற்றாகத் தடைவிதித்துள்ளார். அது மாத்திரமின்றி நாட்டில் யுத்த நிலையைப் பிரகடனப்படுத்தி அரசதரப்பு செய்திகள் மட்டுமே உலகினை எட்டலாம் என்ற எதேச்சதிகார முடிவும் சிங்களத்தரப்பால் எட்டப்பட்டுள்ளது.

இந்தத்தணிக்கைக்கு சர்வதேச செய்தி நிறுவனங்களான றொயிட்டர், பிபிசி, ஏ.எவ்.பி முதலான அனைத்து சர்வதேச செய்தியூடகங்களும் கட்டுப்படவேண்டும் என்ற சிறீலங்கா அரசின் உத்தரவிற்கு அவை கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன. இதனிடையே இதுவரை காலமும் சிறீலங்கா வானொலியில் ஒலிபரப்பான பிபிசியின் சிங்கள, தமிழ் ஒலிபரப்புக்கள் காலவரையின்றி இடைநிறுத்தப்பட்டுள்ளன. மொத்தத்தில் சிங்கள மக்களும் உலகும் தான் கூறுவதை மாத்திரம் செவிமடுக்க வேண்டும் என சிறீலங்கா அரசு எதிர்பார்க்கின்றது.


20-05-00 அன்று யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா இராணுவத்தால் உதயன் பத்திரிகை நிறுவனம் இழுத்து மூடப்பட்டுள்ளது. 22-5-00 அன்று சண்டே லீடர் பத்திரிகையும் கொழும்பில் சிறீலங்கா அரசாங்கத்தினால் சீல் வைக்கப்பட்டுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






# ஒளிவீச்சு

OLIVEECHU

## வாழ்வின் சுவடும் - நம் சமகாலத்தின் உண்மை முகமும்

**நிதர்சனம் நிறுவனத்தின் 'ஒளிவீச்சு' வீடியோ சஞ்சிகை பற்றிய மதிப்பீ**


நமது கலாச்சார மரபில் ஒரு புதிய அறிமுகம், ஒரு புதிய அறிமுகத்தில் நம் கலாச்சாரம் என்று இணை நிலையாக 'ஒளிவீச்சு' என்ற இந்த வீடியோ சஞ்சிகை வெளிவருகிறது. விஞ்ஞானம் தந்த தொழில்நுட்பத்தின் புதிய வரவாக ஒலியும் ஒளியும் இணைந்த 'வீடியோ' அறிமுகமாகிய பின் அதில் சஞ்சிகை என்ற அம்சமும் உருவாகிவிட்டது. நேரடியாக காட்சியாகவும், ஓசையாகவும் பார்ப்பவருக்குச் சாட்சியாகும் ஒளிவீச்சின் இந்தப் பதிவுகள் சமகால வாழ்வின் உள்ளடக்கம்தான். ஒரு சமுதாயத்தின் கலாச்சாரம் அதன் வளர்ச்சியோடும் வாழ்வோடும் இணைந்திருக்கும். நம் வாழ்விலும் வளர்ச்சியிலும் ஒரு அம்சமாக இன்று வீடியோ சஞ்சிகையும் இணைந்து விட்டது. ஒரு சாதனத்தின் அறிமுகம் அல்லது அதன் வழியாக கலையும் வளர்கிறது. இன்றைய கலை, தொழில் நுட்பமயப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பின்னணியில் தான் 'ஒளிவீச்சு' (விவரண) வீடியோ சஞ்சிகையும் அமைந்திருக்கிறது.

ஒளிவீச்சில் சமகால நிகழ்ச்சிகள் - மக்கள் வாழ்வின் முக்கிய பிரச்சினைகளாகவும் நம் தேசியப்பிரச்சினையின் அரசியல், இராணுவ நடவடிக்கைகள் பற்றியதாகவும், பண்பாடு, கலை, சமூகவியல் என்று பலவிதங்களில் பதிவு செய்யப்படுகின்றன. நம் சமகால வாழ்வின் தொகுப்பு அல்லது பதிவு என்று இதைச் சொல்லலாம். அரசியல், சமூகவியல், பண்பாட்டு அம்சங்கள் மற்றும் கலை என்று அது தன்னுள் ஒரு பரந்த தளத்தைக் கொண்டிருக்கிறது. அத்தோடு யதார்த்தத்தைப் பேணுவதிலும், மெய்மைத் தன்மையுடைய அரசியல், இராணுவ, போராட்ட அம்சங்களை வெளிப்படுத்துவதிலும் மிக்க பங்கை ஆற்றுகின்றது. சமகால நிகழ்வுகளைப் பதிவு செய்வதுடன் அவற்றை வெளியுலகுக்குக் கொண்டு செல்வதிலுமாக இருநிலைச் செயற்தளத்தில் 'ஒளிவீச்சு' பங்காற்றுவதைக் காணலாம். 1993 மேயிலிருந்து தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக வெளிவரும் இந்த வீடியோ சஞ்சிகை, வீடியோவின் பயன்பாட்டை நமது சூழலில் முறையாகப் பயன்படுத்தும் ஒரு ஊடகமாகச் செயற்படுவதை அவதானிக்கலாம். வீடியோவுக்குரிய சலனத் தன்மைக்கேற்ப காட்சிப்படுத்துவதிலும் நமது சமூக அடையாளங்களையும் இனத்தின் தனித்துவங்களையும் வெளிப்படுத்துவதிலும் தென்படும் அக்கறைகள் சந்தோசமளிப்பவை. போர்க்கால நெருக்கடி வாழ்வில் மறுதலிக்கப்பட்ட அல்லது மட்டுப் படுத்தப்பட்ட வளங்களையுடைய சாதனங்களைப் பயன்படுத்தி வெளிவரும் இந்த 'வீடியோ சஞ்சிகை' ஒடுக்குமுறையின் எதிர்ப்படையாளமாகவே இருக்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறையில் தமிழினமும் தமிழ்ப் பண்பாடும் வாழ்வும் நெருக்கடிக்குள்ளும் அழிவுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளது. தமிழின விடுதலைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளின் சுதந்திர வேட்கையையும் விடுதலை நடவடிக்கைகளையும் பிரதிபலிக்கும் இந்த ஊடகம், மனச்சாட்சியை சுண்டி விடும் ஒளி ஒலிக் கோலாகத்தானிருக்கிறது. ஒளிவீச்சு சஞ்சிகையொன்றின் முழுமையான விடயப்பரப்பில் நாம் ஆழ்ந்த கவனத்தைப் பதிக்கும்போது இது புலனாகின்றது.

மக்கள் எழுச்சி, போராளிகளின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகள், நுட்பமும் வீரமும் நிறைந்த போர் நடவடிக்கைகள், நமது மண்ணின் உற்பத்திகள், வெளியீடுகள், நெருக்கடிமிக்க இந்தக் காலகட்டத்தில் உத்வேகத்துடன் துன்பதுயரங்களைக் கடந்து போராட்ட வாழ்வுடன் இணையும் மக்கள் என்பவற்றை நேரடியாகப் பதிவாக்கி உலகின்முன் வைக்கிறது ஒளிவீச்சு.

ஒரு ஒளிவீச்சு சஞ்சிகையில் செய்திச்சரம், மாவீரர் நினைவுகள், சமகாலப் பார்வை, மண்ணும் மக்களும், கலையும் மக்களும், நடமாடும் ஒளிவாங்கி, காட்சியும் கானமும், காலத்தின் வரிகள், குறும்படம் ஆகியவற்றுடன் இன்னும் சில அம்சங்களும் இடம்பெறுகின்றன.



சிங்கள அரசு நமது பிரச்சினைகளை இருட்டடிப்புச் செய்து, தான் வேறு விதமாகப் புனைந்து காட்டுகிறது. ஆனால் ஒடுக்குமுறைக்கெதிரான நமது அரசியல், இராணுவ எதிர்ப்பு நடவடிக்கைகள், மக்கள் எழுச்சி மற்றும் மக்களின் இன்னல்கள் என்பவற்றை அவற்றின் நேரடிக் காட்சிப் பதிவுச் சான்றுகளாக உலகின் முன்வைக்கும் ஒரே சக்தி மிக்க ஊடகமாக இது இருப்பது இதன் விஷேசமாகும்.

ஆனால், உணர்வின் ஒளிவடிவமாக ஒளிவீச்சு அமையப்பெறுதலில் கவனம் செலுத்தல் அவசியம். உலகின் கண்களுக்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கான தன் காரணமாக இதில் கலைப் பிரக்ஞை அதிகமாக இருத்தல் முக்கியமாகின்றது. அதிகமாக தயார்ப்படுத்தல் முக்கியமாகின்றது. அதிகமாக தயார்ப்படுத்தப்படாத காட்சிகளின் தொகுப்பு விவரணங்களும் (போர் - இடம்பெயர்வு - பண்டிகைகள் போன்ற வகையானவை தயார்ப்படுத்தப்பட்ட ஒளிப்பதிவுகளல்ல) தயார்ப்படுத்தப்பட்ட அம்சங்களும் ஒளி வீச்சில் இடம்பெறுகின்றன.

விவரணம் எனும்போது 1983ஆம் ஆண்டு யூலைக்கலவரம் தொடர்பாக பி. பி. சி தயாரித்த 'சிவாஸ் பீப்பிள்' (சிவாவின் மக்கள்) விவரணத்தை குறிப்பிடலாம்.

'சிவாவின் மக்கள்' யாவரையும் கவர்ந்திழுக்கக்கூடிய வலுவான விடயங்களைக் கொண்ட கலைத்துவமான விவரணம். இதில் தயார்ப்படுத்தப்பட்ட தயார்ப்படுத்தப்படாத காட்சிகள் இருக்கின்றன. எப்படியென்றாலும் உணர்வு வெளிப்பாடு, நிலமையின் தீவிரம் என்பன காட்சி, ஒளியமைப்பு என்பவற்றூடாக வெளிப்படுகின்றன. உணர்வின் - நிலமையின் தீவிரம் உணர்ந்த ஒளிப்பதிவுக் கலைஞனின் சிறப்புத் திறமையே இதன் காரணமாகும்.

'ஒளிவீச்சு' விவரணங்களை அதிகமாகக் கொண்டது. தமிழீழ மக்களின் வாழ்நிலை - அரசியல்நிலை வெளிபாடுகளைக் கொண்ட விவரணங்கள் ஒளிவீச்சில் இடம் பெறுகின்றன. விவரணங்கள் அனைவராலும் விரும்பிப் பார்க்கப்படுவனவல்ல. விடயங்களை மட்டும் கொண்டதாக இருந்தால் உரிய பார்வையாளரை சென்றடைய முடியாதிருக்கும். இதன் காரணத்தால் நாம் கலைப் பிரக்ஞையை தீவிரப்படுத்த வேண்டும். இங்கு ஒளிப்படக் கலைதான் முக்கியத்துவம் பெறுகின்றது. எந்தவொரு கட்டத்திலும் சிறப்பான சட்டகத்தில் உள்ளடக்கம் கொண்ட காட்சிகள் ஒளிப்படப் பதிவாளர்களால் பதிவு செய்யப்படுதல் முக்கியம். வெறுமனே Pan shots. zoom shots ஒளிப்படக் கலையாகாது. அநேகமான விவரணங்களில் zoom (காட்சி விரிவாக்கம் - சுருக்கம்) தன்மை இருக்காது. ஒரு காட்சி எந்தச் சட்டகத்தில் விடயத்தை சிறப்பாக வெளிப்படுத்துமென்பதை ஒளிப்படப்பிடிப்பில் தீர்மானிக்க வேண்டும். சில வேளைகளில், ஒரு காட்சி சில நிமிடங்கள் அசையாதிருந்தால்தான் பார்வையாளரின் மனதில் பதிவை ஏற்படுத்த முடியுமென்றால் அப்படித்தான் அமையவேண்டும். வேகமாகக் காட்சிகளை நகர்த்தினால் காட்சியின் உட்பொருளை ரசனையாளன் உள்வாங்க முடியாதுபோகும். அப்படியானால், ஒரு காட்சி நீடிக்கவேண்டிய தேவை இருப்பின் புலனைச் சிதறவிடாது தடுக்கச் சட்டகம் - ஒளியமைப்பு - காட்சி - கோணம் என்பவற்றில் கவனம் செலுத்தப்படுதல் அவசியம்.



படத்தொகுப்பு விடயத்தில் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் (Mixer) ஆக்கிரமிப்புக்குட்படுதல் பொருத்தமன்று. தொழில்நுட்ப வித்தைகள், ரசனையாளரின் கவனத்தை காட்சி உள்ளடக்கத்திலிருந்து திசை திருப்பிவிடும். தொழில்நுட்ப வித்தைகள் விளையாட்டு விவரணம் பொழுது போக்கு விவரணம், விளம்பரம் போன்றவற்றுக்குத்தான் ஏற்றவை. விவரணங்களுக்கும் சினிமாவுக்கும் பொருத்தமற்றவை. இத்தகைய வித்தைகள் உண்மையான படைப்புத் திறனையும் வளர்ச்சி நோக்கிய பாதையையும் முடக்கிவிடுபவை.

**“ஒளிவீச்சு” வீடியோ சஞ்சிகையை புலம்பெயர் நாடுகளில் உள்ள அனைவரும் பார்க்க வேண்டிய ஒரு வரலாற்று ஆவணம். உலக நாடுகளில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு காரியாலங்களில் பெற்றுக் கொள்ளலாம்.**


விவரணம் எனும்போது வெறுமனே உரையும் காட்சியுமல்ல. தனியே உரையும் காட்சியும் சலிப்பூட்டுபவையாகவே இருக்கும். ஆகவே ஒவ்வொரு விவரணமும் உயிர்ப்புடையவையாக செதுக்கப்படுவது அவசியம். பின்னணி இசை மண்ணின் - இனத்தின் தனித்தன்மை கொண்டதாக இன, மொழி, கலாச்சார, வாழ்முறைமையின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்துவதாக அமைவது சிறப்புடையது. இவ்வாறானபோது ஒளிவீச்சு வழங்கும் விடயத்துடன் எங்களின் முழுமொத்தமான உணர்வையும் பிரச்சினைகளையும் பார்ப்போர் உணர மேலும் வசதியுண்டாகும்.

உலகத்தின் முன் கவனம் பெறும் படைப்பாக 'ஒளிவீச்சு' அமைவதால் இந்தத் தனித்துவம் பேணப்பட வேண்டியதாகிறது.

அத்துடன், நமது தேசத்தை மேலும் அறிந்து கொள்ள சூழலியல் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துதல் இன்னும் விஷேசத்துக்குரியது. நமது வளங்கள் - மண், மண்ணின் தன்மைகள், நீர்வளம் மற்றும் காடுகள், விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் பற்றிய கவனிப்பும் கடல் போன்ற பல விடயங்களும் இதில் சேரும், இவற்றை நாம் 'ஒளிவீச்சு'னூடாகத் தரும்போது இவற்றின் மூலம் நம் தேசத்தின் தொழிற்றுறை, பொருளாதாரம், இயற்கை வளம் என்பனவற்றின் கட்டமைப்பை உருவாக்கவும் வளர்த்துச் செல்லவும் யோசிப்போருக்கு மேலும் பயன்தரும். இது ஒரு வகையில் நமது வளச்சூழலை மேலும் அழுத்தமாக உணரவைக்கும் முயற்சியும்கூட..

சடங்குகளில் புதையுண்டுபோன இந்தச் சாதனத்தை (வீடியோவை) ஒரு புதிய திசைக்கு கொண்டுவருவதில் 'ஒளிவீச்சு' பங்காற்றுவது நம் காலத்தின் முக்கிய விடயமாகும்.

**-கருணாகரன், தவபாலன்-**







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# மீள்பார்வை 2000 ஏப்ரல்

### 04.04.00
ஓயாத அலைகள் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட ஏ.9 நெடுஞ்சாலையின் பகுதிகளை கையகப்படுத்தும் நோக்கில் முகமாலை முன்னரங்கப் பகுதியிலிருந்து சிறீலங்காப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட வலிசக்கர படைநடவடிக்கை படுதோல்வியடைந்தது. சிறீலங்காப் படைத்தரப்பு ஐந்து யுத்த தாங்கிகளை இழந்தது.

### 07.04.00
தென்தமிழீழத்தின் மட்டு பொலன்நறுவை எல்லைப் பிரதேசத்தில் உள்ள கிரவல்கந்த கிராமத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒரு உதவி பொலிஸ் அத்தியட்சகர், மூன்று உப பொலிஸ் பரிசோதகர்கள் உட்பட 11 சிறீலங்காப் பொலிசார் கொல்லப்பட்டனர்.

### 10.04.00
மன்னாரில் ஒரே நாளில் மூன்று அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சிறீலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு வீதிகளில் போடப்பட்டனர்.

### 12.04.00
புத்தளம் கடற்பரப்பில் சிறீலங்காக் கடற்படையின் கடற்கலம் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டது.

### 14.04.00
வவுனியா மாவட்டம் அரந்தலாவ பொலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது ஒரு ஊர்காவல்படையினன் கொல்லப்பட்டான். அதன்போது உதவிக்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு இராணுவக் கப்டன் உட்பட 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், 15 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

### 17.04.00
வன்னியில் சிறீலங்காப்படைகளின் மருந்துத் தடையினால். வன்னியில் மக்களின் நிலைமை மிக மோசமடைந்து வருவதாக MSF எனப்படும் பிரான்சிய மனிதநேய அமைப்பு சிறீலங்காப்படைகளின் போக்கை கண்டித்துள்ளது.

### 25.04.00
விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட ஆனையிறவு பெருந்தளத்தில் மீட்கப்பட்ட இராணுவ உடலங்களில் நல்ல நிலையிலிருந்த 126 சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

### 30.04.00
தொடரும் ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கைப் படையணிகளால் யாழ்.சாலையில் மற்றொரு கேந்திர முக்கியத்துவமிக்க நகரப் பகுதியான பளை மீட்கப்பட்டுள்ளது. பளை இராணுவத்தளம் முற்றிலுமாக கைப்பற்றி அழிக்கப்பட்டது.

### 06.04.00
வீரவிதான மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு முதலான சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் திரண்டு வந்து நடத்திய நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிரான ஆர்பாட்ட ஊர்வலத்தில் 1000ற்கு மேற்பட்ட பௌத்த பிக்குகள் கலந்து கொண்டனர். இதன்போது பௌத்த பிக்குகளால் நோர்வே நாட்டு தேசியக்கொடியைக் கொழுத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்




### 06.04.00


போர் நடைபெறும் பிரதேசங்களான வடமராட்சி கிழக்கு மற்றும் பச்சிலைப்பள்ளிப் பகுதிகளில் அகப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்களை சிறீலங்கா இராணுவம் விடுவிக்க வேண்டும் எனக்கோரி யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பகிஸ்கரிப்பு, மறியல் போராட்டங்களில் குதித்தனர்.

### 07.04.00
நாகர்கோயில் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் விசேட படையணிகளின் பீரங்கித் தாக்குதலில் சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான இரு டோராக்கள் மூழ்கடிக்கப்பட்டன. இச் சம்பவத்தில் 6 இடைநிலை அதிகாரிகள் உட்பட 30ற்கு மேற்பட்ட சிறீலங்காக் கடற்படையினர் கொல்லப்பட்டனர்.



### 22.04.00
தமிழீழத் தேசியத் தலைவரவர்களின் திட்டமிடல், நேரடி நெறிப்படுத்தலுடன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மிகப்பெரும் சாதனையான ஆனையிறவுத்தளம் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டது. 240 ஆண்டுகளின் பின்னர் இப்பிரதேசம் தமிழரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. 15000ற்கு மேற்பட்ட படையினர் தங்கியிருந்த இப்பெருந்தளம் ஓயாத அலைகள் நடவடிக்கைப் படையணிகளின் 48 மணித்தியால முற்றுகையின் பின்னர் மீட்கப்பட்டது.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'கண்கள் கூறும் வார்த்தைகள்'

காணும் கண்களே,
கூறும் வார்த்தை என்ன?
அஞ்சல் ஊடாக எரிமலைக்கு.






**எரிமலை**
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*FRANCE.*

குறிப்பு: உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.

**எரிமலை மார்ச்**



நீலக்கடல் சூழ நிலவில் நிலம் ஒளிர
நிமிர்ந்து நின்றதன்றோ
எங்கள் தேசம்?!

வாழ்வு வளம்கொள்ள ஈழம் நமதென்று
உயிர் உரமிட்டுக் காத்ததன்றோ
அந்தத் தேசம்?!

இன்று -
பூவும் கருகிட, பிஞ்சும் உருகிட
தமிழன் வேரும் சிதைந்திடலாமோ?!
அந்தோ, ஆழக்கடலில் அவன் மேனி
மிதந்திடலாமோ?!

சந்திரா
எட்மன்ரன்
லண்டன்

மீன் பிடிக்கப் புறப்பட்ட அந்த மீனவன்
திரும்பி வரவில்லை
கடலில் தோணி எரிகின்றது

அங்கு வீட்டு முற்றத்தில் மனைவியின்
இதயம் எரிகின்றது
கடலில் மீனவனின் இரத்தம் துளி துளியாகக்
கொட்டுகின்றது.
சொத்தையும் சுகத்தையும் இழந்த மீனவன்
இப்போது தன் உயிரையும் இழந்து விட்டான்!
மீனவனின் உடல் கடலில் இருப்பதைக்கண்டு,
மகன் துடிதுடித்து, போருக்குப் புறப்பட்டான்.

செல்வி. கேதாரணி துரைஜயா
30880 லோட்ஸன்
ஜேர்மனி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




அன்னபூரணி அமெரிக்கா சென்று
சாதனை படைத்த தமிழனின் மண் இது.
தமிழீழம் பெற்றுத்தராமலா போகும் இந்த மண்?

www.tamileelamarchive.com